Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஒக். 20-26, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 482



## முஸ்லிம் காங்கிரஸ் குழப்பம் உள்வீட்டு இரகசியங்கள்!

## கிழக்குப் படுகொலைகள்

## உண்மை சொன்ன நடிகையின் டைரி!

## அவதாரங்கள்

மனிதர்கள் இறைவனைக் காணும்போது அவரை மனிதராகவே காண்கின்றனர். இவ்வுலகில் நாம் மனிதராய் இருக்கும் மட்டும் மனித நிலையை விட்டு வேறாக அவரைக் காண முடியாதுள்ளது. மானிட நிலையைத் தாண்டி மேலேறுவோமானால் இறைவனை அவர் உள்ளபடி நாம் உணரக்கூடும். ஆன்மாவிற்குள் ஆழத்தைப் பெறும் அனுபவமே மெய்யுணர்வாகும். மனிதனுடைய பகுத்தறிவு உருவமற்ற கடவுளைப் பக்கத்தில் காண விரும்பிய உருவங்களே அவதார புருஷர்கள். அவர்கள் மூலமாகக் கடவுளை நாம் காண முடியும். அவர்கள் நம் பூஜைக்குரியவர்கள். மதமும் அது காட்டும் கடவுளும் அதன் வழிவந்த அவதார புருஷர்களுமே இந்த யுகத்தில் ஒரு நேர்மையான ஞானம் மிக்க சமுதாயத்தின் வழிகாட்டிகள். ஒழுக்கத்துக்கு இலக்கணமான பேராசிரியர்கள். "குருவை நான் என்று அறி" என்று கிருஷ்ணபகவான் பாகவதத்தில் பகருகிறார். தெய்வீக உண்மையைப் புலப்படுத்தும் அவர்களிடமிருந்து அவர்கள் காட்டும் பாதையில் மெய்யான பரமாத்மாவின் அனுக்கிரகத்தை நாம் பெற முடியும்.

ம.வரதன், ஜேர்மனி.

# ஆன்மீகம்



## தேவனின் பரிசுத்த அழைப்பு

"தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

தெசலோக்கேயர் 4-7

மேல் குறிப்பிட்ட வார்த்தை ஜீவனுள்ளது. இந்த வார்த்தையை அநேகர் மறந்து விடுகின்றனர். இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அழைத்த அழைப்பை அநேகர் அசுத்தத்தினாலே அழித்து விடுகின்றனர். ஏன் தேவன் நம்மை பரிசுத்தத்திற்காக அழைக்கிறார்? ஏனென்றால் பரிசுத்தமில்லாமல் தேவனைத் தரிசிக்க முடியாது. ஆகவே பரிசுத்தமே அத்தியாவசியமானது. பரிசுத்தத்தைப் பரிசுத்த குலைச்சலாக மாற்றாதபடிக்கு, பரிசுத்தத்தின் அழைப்பைப் பரிசுத்தமாகக் காத்துக் கிரமமானதைச் செய்வோமானால் தேவனுடைய அநுக்கிரகம் நாள்தோறும் நம்மில் இருக்கும்.

த.எப்சிபா, பலாங்கொடை.

## சொத்துக்கள் பங்கிடுதலும் இறைதூதர் அறிவுரையும்

இன்று செல்வம் படைத்த அனேக குடும்பங்களில் நிகழும் பிரச்சனைகள் சொத்துக்களைப் பங்கிடுதல் செய்யும் வேளையிலேயே ஏற்படுகிறது.

காரணம் சொத்துக்குரியவர்களாக இருக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு உரிய நேரத்தில் உரிய முறைப்படி சொத்துக்களைப் பங்கிட்டுக் கொடுக்காமல் தமது மரண வேளையில் அதனைக் கொடுக்க முனைவதே.

இவ்வேளையில்தான் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கிடையே கடும் பிணக்குகள் ஏற்பட்டுப் பெற்றோரின் மௌத்திற்குப் பிள்ளைகள் இல்லாத ஓர் பரிதாப நிலை ஏற்படுகிறது.

இதனால்தான் இறைதூதர் அவர்கள் இவ்வாறு அறிவுரை பகிர்கிறார்கள்.

தனது உயிர் குரல்வளையை அடைத்துவிடும் தருணம் வரை உங்கள் சொத்துக்களை உங்கள் வாரிசுகளாகக் கருதப்படும் பிள்ளைகளுக்குப் பிரிவிட்டுக் கொடுப்பதைத் தாமதிக்காதீர்கள். அதனை உங்கள் ஜீவிய காலத்திலேயே உரிய முறைப்படி கொடுத்துவிடுங்கள் என்று.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.479

பரிசுக்குரிய கவிதை

### எத்தனை நாளைக்கு

அடிமைத் தனத்திற்கு விடுதலை
அப்பாவி எனக்கு அடிமை விலங்கு
எத்தனை நாளைக்கு இந்த ஜம்பம்
பூனையார் நான் புலியின் வாரிசாம்
உடைத்தெறிவேன் விலங்குக் கூட்டை
படைத்திடுவேன் பல சாதனைகளை.

திருமதி லோ.கருணா கிறிஸ்ரி, திருக்கோவில்.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### புரிகிறதா உனக்கு?

ஏன் கூட்டையே..!
நீ குத்தகைக்கு எடுத்துக்கொண்டு!
காத்திருந்தாலும்!
ஏமாந்து உன் பரிசுக்கு!
இரையாகிட இங்கு,
நானொன்றும்
கூண்டுக்கிளியல்ல...

ஹப்புத்தளையூர்- மனோ கோபாலன்.



### இங்கு

சிந்திக்காது சிறைப்பட்டது பூனை
வஞ்சிக்காது வழி தேடுது பறவை
துஞ்சிப்பதற்கு மனிதம் இல்லை
துயரத்திற்கு இடமும் இல்லை.

தெ.லோஜனா, கொழும்பு-06.

### வேண்டும் விடுதலை

கிளி வளர்த்த கூட்டுக்குள்ளே
பூனை வளர்க்கும் புதுயுகமே
வலி இருக்கும் இதயத்தின்
வாசற் கதவுகளையும் திறந்து விடு
வேதனைகள் வெளியே செல்ல.

பெ. விக்னேஸ்வரன், ஹட்டன்.

### அரவணைப்பு

தன் கூடு என்பதனால்;
தஞ்சமடைந்த -தன்
எதிரியை தயவுடன்
அரவணைக்கும் குருவி அறியுமா?
தன்னுடைய எமன்
இது என்பதை!

எஸ்.ஸ்ரீ, காரைதீவு-8.

### கிளியின் மனம் பிஞ்சு...

பச்சை கிளியொன்று தன்
புத்தியினால் தப்பித்தாலும்
பறந்து செல்லாமல்
வழி தேடுகின்றது
வஞ்சகப் பூனையாரின்
விடுதலைக்காய் பரிந்து.

சதீஸ்குமார் சகிலா- அரியாலை.

### சாதனை

பூனைக்குச் சிறை
காவலுக்குப் பறவை
கல்லில் நாருரிக்கும்
நம் அரசியல் வாதிகள்
இதையும் சாதிப்பர்.

அ.சந்தியாகோ- கண்டி.

## கவிதைப் போட்டி இல.482



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 26.10.2002

கவிதைப் போட்டி இல.482
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### செஞ்சோற்றுக்கடன்

திருடியுண்ட திருடனை
சிறையினில் சிக்க வைத்துவிட்டு
செல்லத்தான் போகின்றேன்
செஞ்சோற்றுக் கடனை
அடைத்துத்தான் விரைகின்றேன்.

என். ரம்மியா-சண்டிலிப்பாய்.

### கபடத்தனம்

வதைத்திடலாம் அழித்திடலாம்
என்றெண்ணி வந்தவரே
கிலி பிடித்துப் போய்
எப்படி விடுபடலாமென்றெண்ணி
விழி பிதுங்கி நிற்பதுவும்
உதவிக்கு பெரும்
வல்லவரை தேடுவதும்
உன் தலைக்கு மேலிருந்து
உன் கபடத்தனமறியும்
அந்தச் சிற்றுயிரை அறியீரோ.

ம.திருவரசுராசா, வவுனியா.

### வித்தியாசமானதொரு...

கூண்டுக்குள் கிளியிருந்தால்
பசி தீர்க்க பலவுணவு
அக் கூட்டில் தான் நானிருந்தால்
நாலு தடி என் முதுகில்
உணர்ந்தும் தான் நானின்றே
உதவி புரிந்தேன் அதன்
விடுதலைக்காய்.

ஆர். சிறீதரன்- அராலி.

### சுதந்திரமாய் வாழ


நாட்டில் வாழும் பலர்
இன்றுவரை
கூண்டில் படும் பாட்டை
காட்டில் வாழ்ந்த நீயும்
அனுபவித்து அறிந்திடவே
உன்னை கூண்டுக்குள்
வைத்தேன் சிறை
அப்போது நீயறிவாய்
சுதந்திர தாகத்தின் அவசியத்தை!

துரைராஜா பரிமளாதேவி, கலஹா.

### விட்டு விடு

கம்பி எண்ணும் கயவனே
கண்டு கொண்டாயா வேதனையை
கண்டறிந்த பின்பாவது விட்டுவிடு
விடுதலைக்காய் ஏங்கும்
கிளிதனை உண்பதை.

சர்மிளா-கம்பளை.




பத்திரிகைப் போட்டியிலே பத்து வருடங்களாய் சறுகலின்றி நிமிர்ந்து நின்று -தமிழ் பேசும் மக்களின் நண்பனாய் மாறிப் போயிருக்கின்ற தினமுரசே! உனது ஆரம்ப வாசகன் நான்.
இருந்தும் இத்தனை காலமாய் தினமுரசின் பார்வையாளனாய் இருந்து இப்போது பங்காளனாய் மாறியிருப்பதையிட்டுப் பரவசமடைகிறேன். அன்று தொட்டு இன்று வரை அடுக்கடுக்காய், அலுக்காத அரசியல், அகில விசயங்களை அலசுவதில் கில்லாடி தினமுரசுதான் என்பதில் ஐயமில்லை. பத்திரிகையாளனிடம் பயமிருக்க முடியாது என்ற வகையில் எந்தத் தரப்பாக இருக்கின்ற போதும் உண்மைக்கு மாறாக நடக்கின்றபோது அவ் விடயங்களைத் துணிந்து தைரியமாய் வெளிப்படுத்தும் தின முரசின் துணிச்சல் வியக்கத்தக்கது. எழுத்தமைப்பிலும் பக்க வடி வமைப்பிலும் தனி முத்திரை குத்தித் தலைநிமிர்ந்து நிற்கும் தினமுரசிற்கு என் வாழ்த்துக்கள்.

முகைதீன் சாலி-திருகோணமலை.

முத்தான முரசே!

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சனைகளை மட்டுமே முன்னிறுத்தி வந்த முரசு அண்மைக் காலமாக மலையக மக்களின் பிரச்சனைகளில் கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. வடக்கு-கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளின் வண்டவாளங்களை அம்பலத்துக்குக் கொண்டு வருவது போல மலையகத்தில் தலைவர்கள் எனக் கூறிக்கொண்டு மலையக மக்களின் அபிவிருத்திக்கும் சுபீட்சத்துக்கும் தடையாக இருக்கும் சிலரது அரசியல் அடாவடித்தனங்களையும், துரோகங்களையும் முரசு வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும். பல தசாப்தங்களுக்கு முன்னர் இருந்தது போலன்றி இன்று மலையகத்தில் ஓரளவு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. அதனால் எமது அரசியல்வாதிகளுக்குத் தொடர்ந்தும் மலையக மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. ஒரு அறிவார்ந்த சமூகமாக மலையக மக்களை வழிநடத்தும் தார்மீகப் பொறுப்பில் முரசுக்குக் கணிசமான பங்கிருக்கிறது என்பதை நன்றியுடன் ஞாபகப்படுத்துகிறோம்.

எஸ்.விஜிதரன், பூண்டுலோயா.

## வாசக[ர்] சாலை

தினமுரசு வாரமலருக்கு!
என் இனிய வாழ்த்துக்கள்
வாரா வாரம் வெளிவரும்
தினமுரசு தினந்தோறும்
வராதா என்ற கவலை
எனக்குள்ளே. நான்
தினமுரசைத் தவிர வேறு
எந்தப் பத்திரிகையையும்
விரும்பியோ அல்லது
விருப்பம் இல்லாமலோ
பார்ப்பது கிடையாது.
தினமுரசைப் பார்ப்பதில்
நான் மிகவும்
ஆனந்தமடைகின்றேன்.
வாரந் தோறும் என்னை
மகிழ்விக்கும் தினமுரசு
ஊழியர்களுக்குக் கோடி
முத்தங்கள், பலகோடி
வாழ்த்துக்கள்.

அன்புடன் றஹீம்-
அக்கரைப்பற்று-01.

### அடங்குவது எங்கே...

"சபாஷ்! முரசே!
சரியான நேரத்தில்
சரியான நெத்தியடி!
முற்றும் துறந்தவர்கள்
பற்றி,
'முரசு' மொழிந்த
முன் மொழிகள்
முற்றிலும் சரியானதே!
அரசைத்துறந்து
அரச மரத்தை நாடிய
அன்றைய 'ஞானி' எங்கே...?
ஆளுக்கொரு
(தொலைக்காட்சி) பெட்டிகளுடன்
ஆடம்பரக் கார்களுடன்
அரச போகம் அனுபவிக்கும்
இன்றைய 'ஞானி'கள் எங்கே...?
அரை வயிறு உண்டால்
யாருக்கும் ஆரோக்கியம்!
ஆறு வேளை உண்டால்
அடங்குவது எங்கே...?

என்.குறளோவியன்-பிபிலை.

# உங்கள் பக்கம்

## ஊமைக் காயங்களுடன் மத்திய கிழக்கில் நமது பெண்கள்

கடந்த 478 ஆவது தினமுரசு வாரமலரில் உங்கள் பக்கம் என்ற பகுதியில் ஜித்தாவின் இலங்கை தூதுவராலயத்தில் இருந்து எழுதிய ஒரு பெண்ணின் கண்ணீர்க் கடிதத்தைப் படிக்கும் போது மனவேதனையும்... வெட்கமும் அடையக் கூடிய நிலைமையில் தான் இலங்கை மக்கள் ஆகிய நாம் இருக்கின்றோம்.

எம் அனைவருக்கும் சகோதரி ஆயிஷா பானு உட்பட்ட 86 வீட்டுப் பணிப்பெண்களின் அவல நிலையை சிந்திக்க வைத்தது. ஆனால் இது அடைக்கலம் கொடுக்கவேண்டிய நம் நாட்டுத் தூதுவராலயத்தின் ஊழியர்களுடைய (கயவர்களுடைய) வேண்டுமென்ற ஈவிரக்கமற்ற செயல்... ஆனால் சவூதி அரேபியாவில் பல இடங்களில் இன்னும் எத்தனையோ நம் நாட்டுப் பணிப்பெண்கள் வீட்டு எஜமான் எஜமானியின் கொடுமைகளுக்கும் சித்திரவதைக்கும் முகம் கொடுத்து வீட்டை விட்டு நம் நாட்டுத் தூதராலயத்திற்குப் போக முடியாமலும் சம்பளம் இன்றியும் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வேலை செய்கின்றனர்.

இக் கஷ்டங்களையோ வேதனையையோ தனது வீடுகளுக்கும் அறிவிக்காமல் தன்னோடு முடிந்த கதையாக இருக்கட்டும் என நினைத்து இங்கு வாழ்கின்றனர்.

சென்ற மாதம் இப்படியான கொடுமைக்கும்... வேத்னைக்கும்... உட்பட்ட ஒரு பெண் தன்னால் இனிமேலும் அவ்வீட்டில் இருக்க முடியாமல் நம் நாட்டிலுள்ள சவுதி அரேபியா தூதுராலயத்தின் ஊடாக விடுதலை பெற்றுத் தருமாறு தன் கணவனுக்குக் கடிதம் மூலம் அறிவித்தும்.... அக் கணவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மாறாக, பதில் மடலில் மனைவிக்கு ஆறுதல் வார்த்தைகள் கூடக் கூறாமல், "எனக்கு கடிதம் அனுப்பும் போது (30,000/-) முப்பதாயிரம் ரூபா அனுப்பி வைக்கவும். முடியாவிட்டால் என்னை மறந்திடவும்" என்று பதில் எழுதியிருந்தார். இது உண்மையாக சென்ற மாதம் ஒரு பெண்ணுக்கு தன் கணவனால் எழுதப்பட்ட கடிதமாகும். இது வேறு பிரச்சனை. எவ்வாறெனினும் சவுதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்து அநாதரவாக இருக்கும் பெண்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்கக் கூடிய வழிவகைகளை இலங்கையில் உள்ள பொறுப்புள்ள அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் தூதரகத்துக்குச் செல்ல முடியாமல் வேலை செய்யும் வீடுகளில் மோசமான துன்பங்களை அனுபவிக்கும் இலங்கைப் பெண்கள் குறித்தும் கவனம் செலுத்துவது அவசரத் தேவையாகும்.

பாரிஸ் அஹமட், ஜித்தா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

## இலங்கை குடிவரவு விதிகளுக்கு உட்பட்டு கட்டுநாயக்க வழியாக லண்டனிலிருந்து

# பாலா வன்னி பயணம்

புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் செவ்வாய்க்கிழமை காலை 10.15 மணியளவில் லண்டனிலிருந்து கொழும்பு வழியாக வன்னி சென்றடைந்தார்.

லண்டனிலிருந்து நேராக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய பாலசிங்கம் கடும் பாதுகாப்பின் மத்தியில் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்றின் மூலம் புதுக்குடியிருப்பு சென்றார். இவரை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர் புதுக்குடியிருப்பு மாலதி மைதானத்தில் தரையிறங்கியது. கலாநிதி பாலசிங்கத்தைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்படப் உயர்மட்டத் தலைவர்கள் வரவேற்றனர்.

லண்டனிலிருந்து ஸ்ரீ லங்கன் விமானச் சேவைக்குச் சொந்தமான லுனு 512 விமானத்தில் காலை 9.10 மணிக்குக் கட்டுநாயக்காவில் வந்திறங்கிய பாலசிங்கம் இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டதிட்டங்களுக்கு அமைவான நடைமுறைகளைப் பின்பற்றி, குடிவரவு அதிகாரிகளிடம் தனது ஆவணங்களைக் காண்பித்து உரிய பதிவுகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் 9.35 மணிக்கு கட்டுநாயக்கவிலிருந்து வன்னி சென்றார். இவரைக் கட்டுநாயக்காவில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் வரவேற்றார்.

அன்ரன் பாலசிங்கத்தின் இலங்கைப் பயணம் குறித்துப் பல்வேறு ஊகங்கள் கடந்த நாட்களில் வெளியிடப்பட்டு வந்தன. அவர் நோர்வேயின் தலைநகரமான ஒஸ்லோவிலிருந்து கொழும்பு வருவார் என்றும் லண்டனிலிருந்து கேரளா ஊடாக இங்கு வருவார் என்றும், தெரிவிக்கப்பட்டது. கேரளா வழியாகப் பாலசிங்கத்தைக் கொழும்புக்கு அழைத்து வரும் விடயத்தில் நோர்வே நேரடியாகத் தலையிட்டிருந்தது. விதார் ஹெல்கீசன் இது தொடர்பாக இந்திய அதிகாரிகளை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதும் அது பலனளிக்கவில்லை. கேரளா மாநிலம் காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. பாலசிங்கத்தைக் கேரளா ஊடாகப் பயணம் செய்ய அனுமதிக்க முடியாது என அம் மானில அரசு திட்டவட்டமாக நிராகரித்துவிட்டது இறுதியில் லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் விசா பெற்று இந்த நாட்டின் குடிவரவு விதிகளுக்கு அமைவாகவே பாலசிங்கம் கட்டுநாயக்கா வழியாக வன்னி சென்றார். ■

## "விரைவில் வெளிவரவிருக்கும் மற்றொரு புரிந்துணர்வு உடன்படிக்கை"

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்குமிடையில் கடந்த டிசம்பருக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் எனக்கூறி, போலியான ஒப்பந்தம் ஒன்றை வெளியிடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தயாராகி வருவதாகத் தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

வழமையாக சிறுபான்மைக் கட்சித் தலைமைகள் அரசாங்கத்திற்குத் தமது ஆதரவை வழங்க முன்வரும் போது அரசாங்கக் கட்சியின் தலைவருடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதுண்டு. தமது இனத்திற்கான உரிமைகள் மற்றும் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசங்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற மக்கள் நலன் சார் விடயங்கள் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படும். ஆனால் கடந்த டிசம்பரில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.மு. அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அவ்வாறான புரிந்துணர்வு ஒப்பந்தம் எதையும் முறையாகச் செய்து கொள்ளவில்லை. அவர் பிரதமர் ரணிலுடன் கொழும்பு ஜெய்க் ஹில்ட்டன் ஹொட்டலில் வைத்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். அதில் தமது கட்சிக்கு எத்தனை அமைச்சர் பதவி, எத்தனை வெளிநாட்டுத் தூதுவர் பதவிகள் மற்றும் எத்தனை கூட்டுத்தாபன தலைமை பதவிகள் போன்ற சலுகைகள் குறித்த புரிந்துணர்வு மட்டுமே இருந்தது. இப்போது ரவூப் ஹக்கீம் தான் முன்னதாகவே முஸ்லிம் மக்களின் உரிமை குறித்து அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டதாகக் கூறி,போலி ஆவணம் ஒன்றை வெளியிடத் தயாராகிறார். இதற்குப் பிரதமரும் ஒப்புதல் அளித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த ஆவணத்தைத் தயார் செய்ய முன்னாள் சட்டமா அதிபரும் லண்டனுக்கான இலங்கை தூதுவருமான பாயிஸ் முஸ்தபா லண்டனிலிருந்து கொழும்பு வந்துள்ளார்...என்றும் ஹிஸ்புல்லா கூறினார்.

## பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிடவில்லை

## மு.கா.வின் அறிக்கை தவறானது–அதாவுல்லா

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஏற்பட்டுள்ள உட்கட்சி முறுகல் நிலை நாளுக்கு நாள் வலுத்துச் செல்லும் அதேவேளை தற்போது பிரச்சனை தீர்ந்துவிட்டதாக வெளியுலகிற்கு காண்பிக்கும் கடும் முயற்சியில் அந்தக் கட்சியின் ஒரு பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக 9 பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்தனர். பின்னர் இவர்களுள் 4 பேர் தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டு கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் இணைந்து செயற்பட சம்மதம் தெரிவித்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கூற்றை திட்டவட்டமாக மறுத்திருக்கும் அதிருப்தியாளர் குழுவின் தலைவர் எனக் கூறப்படும் அதாவுல்லா, பிரதியமைச்சர் நூர்தீன் மஷூர் மாத்திரமே பாராளுமன்றத்திற்குச் செல்ல தீர்மானித்துள்ளார் என தெரிவித்திருந்தார்.

அதிருப்தியாளர்களை சமாளித்து அவர்களை மீண்டும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர அமைச்சர் ரவூப் ஹக்கீம் எடுத்த பல முயற்சிகள் தோல்வியில் முடிந்ததாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஞாயிறன்று அதிருப்திக் குழுவை சந்தித்த ஹக்கீம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் செயல்களில் ஈடுபட வேண்டாம் என எம்.பி.க்களை மிகவும் வினயமாகக் கேட்டுக்கொண்டதாகவும் அவர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

தாங்கள் ஹக்கீமின் தலைமைத்துவத்துக்கு எதிராக செயற்படவில்லை எனவும் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் சார்பாக வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கை குறித்து தெளிவான பதிலை பெற்றுக் கொள்ளும் நோக்கத்திலேயே இந்த பகிஷ்கரிப்பு போராட்டத்தில் குதித்ததாகவும் அதிருப்தியாளர்களால் ஹக்கீமுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ■

## காஞ்சிரங்குடா சம்பவத்தின் எதிரொலி

## "உள்நுழைந்தால் சுடப்படுவார்கள்"

யாழ்ப்பாணத்தில் உள்ள படைமுகாம்களுக்கு முன்னால் "அனுமதி இன்றி உள்ளே நுழைந்தால் சுடப்படுவார்கள்" என்று அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

கிழக்கின் காஞ்சிரங்குடா சம்பவத்தின் பின்னர் இராணுவ முகாம்கள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் தூண்டுதலின் பேரிலோ சுயேச்சையாகவோ சட்டம், ஒழுங்கை மீறிப் படை முகாம்களுக்குள் பலாத்காரமாகப் பிரவேசிக்க முயன்றால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் முடிவிற்கு படைத்தரப்பு வந்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கிழக்கில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து ஹர்த்தால் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்குப் பொதுமக்களைத் தூண்டுவதைத் தவிர்க்குமாறு இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு புலிகளை வலியுறுத்திக் கேட்டுள்ளது. ■

## வீட்டைக் கேட்கிறார் யாழ். வாசி

யாழ்ப்பாண நகரிலுள்ள தனது வீட்டைப் பலவந்தமாகக் கைப்பற்றி வைத்திருக்கும் புலிகளிடமிருந்து அதனை மீட்டுத் தருமாறு விஸ்வநாதன் கதிரவேலு என்பவர் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியிலுள்ள இவரது வீட்டைப் புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அதனை மீளத் தம்மிடம் ஒப்படைக்குமாறு இவர் விடுத்த பல வேண்டுகோள்கள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கிறார்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, யு.என். எச்.சி.ஆர். உட்படப் பல்வேறு அமைப்புக்களிடமும் சட்ட உதவி கோரிய போதும் தனக்கு நியாயம் கிடைக்கவில்லை என விஸ்வநாதன் கதிரவேலு கூறுகிறார். ■

## சுட்டுக் கொலை

பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூதின் மெய்ப்பாதுகாவலர் எம். சுபைர்தீன் (வயது 37) கடந்த திங்களன்று இராணுவ சிப்பாய் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தின் போது மற்றொரு படைவீரர் காயமடைந்தார்.

மது அருந்தச் செல்வது தொடர்பாக இரண்டு இராணுவ வீரர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறைச் சமரசம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ●

## தேசிய தொலைக்காட்சியில் காமரசம்

தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளில் காமரசத்தை அதிகரிக்குமாறு அரசாங்கம் ரூபவாஹினி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகளால் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நடுத்தர வர்க்க மக்களின் சிந்தனைகளை முடியுமானளவு திசைதிருப்பி வைத்திருக்கும் நோக்கத்திலேயே இவ்வாறான ஒரு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

எதிர்காலத்தில் தேசிய தொலைக்காட்சியின் கல்விச்சேவை ஒளிபரப்பிற்கான நேரம் வெகுவாகக் குறைக்கப்படவிருப்பதுடன் அந்த நேரத்தில் வெளிநாட்டுப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் பாலியல் சார்ந்த தொடர்களும் ஒளிபரப்பாக உள்ளன. ■

## இளைஞரைக் கொன்ற ஒரு ரூபாய்

இளைஞன் ஒருவர் ஒரு ரூபா நாணயக் குற்றியை வாயில் வைத்திருந்த சமயம் அது தொண்டையில் சிக்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் ஏறாவூரில் இடம்பெற்றுள்ளது.

ஒரு ரூபா நாணயம் ஒன்றை வாய்க்குள் வைத்தவாறு கதைத்துக் கொண்டிருந்த 22 வயது இளைஞர் ஒருவர் அந்த நாணயம் தொண்டையில் அடைத்ததனால் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

ஏறாவூரில் நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் ரி.வி. அன்ரனாவைத் தொட்டதனால் 7 வயதுச் சிறுமி ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

காலை 10 மணிக்கு இச் சிறுமி மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்து கிடந்த போதும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த உறவினர்களுக்குப் பிற்பகல் 5 மணி அளவிலேயே இது குறித்து அறியக் கிடைத்துள்ளது. அவர்கள் வீட்டிற்குள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தனர். அயலவர்களே சடலத்தைக் கண்டு பிடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ■

## மகேஸ்வரன் குற்றச்சாட்டு

திருகோணமலையில் நடைபெற்ற ஹர்த்தாலின் போது 3 பொதுமக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த கிரனைட் வீச்சு சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்பதில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் இரு அமைச்சர்கள் கருத்து மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்து கலாசார அமைச்சர் ரி. மகேஸ்வரன் இந்தச் சம்பவத்திற்கு இலங்கை இராணுவமே பொறுப்பு என்று கூறியிருக்கும் அதேவேளை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இந்தச் சம்பவத்தில் பாதுகாப்புத் தரப்பினர் சம்பந்தப்படவில்லை எனக் கூறியிருக்கிறார். மகேஸ்வரன் போதிய சாட்சிகளின்றி இத்தகையதொரு குற்றச் சாட்டைச் சுமத்திவருவதாக ஜோன் அமரதுங்க பி.பி.சி. சிங்களச் சேவையில் தெரிவித்தார். ■

## வயிற்றோடு விளையாடும் பெற்றோல் விலை

பெற்றோலியப் பொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடுமையான வாழ்க்கைச் செலவு நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்குமாறு எதிர்க்கட்சியும் தொழிற்சங்கங்களும் போராட்டம் நடத்திவரும் நிலையில் பெற்றோலியப் பொருட்களின் விலை தொடர்பான புதிய அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

47 ரூபாவாக இருந்த ஒரு லீற்றர் பெற்றோல் 49 ரூபாவாகவும், 28 ரூபாவாக இருந்த ஒரு லீற்றர் டீசல் 30 ரூபாவாகவும் 22 ரூபாவாக இருந்த மண்ணெண்ணெய் 24 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களுக்குப் பாவிக்கப்படும் எண்ணெய் வகைகள் மற்றும் அனைத்து வகைப் பெற்றோலியப் பொருட்களுக்குமான விலைகள் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. ■

# முஸ்லிம் காங்கிரஸ் குழப்பம்

# உள்வீட்டு இரகசியங்கள்!

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் மீண்டும் ஒரு அரசியல் போராட்டம் தலைதூக்குகிறது.

இந்தப் போராட்டமே மீண்டும் ஒரு கட்சிப் பிளவுக்கு வழிகோலிவிடும் ஆபத்தான கட்டத்தில் உள்ளது.

முஸ்லிம் காங்கிரஸைச் சார்ந்த 9 உறுப்பினர்கள் தலைமைக்குக் கட்டுப்படாது பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதாக இறங்கியிருந்தனர்.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பெருமுயற்சி எடுத்து இவர்களுடன் நீண்ட உரையாடல்கள் நடத்திய பின்னர் ஒருவர் மட்டுமே (நுர்வின் மஷுர் மட்டுமே) ஹக்கீமின் வினயமான வேண்டுகோளுக்குச் செவிமடுத்துள்ளார்.

ஆனால் அண்மைய செய்திகளில் இந்த அதிருப்தியாளர்களில் நால்வர் பாராளுமன்றத்துக்குச் சமூகமளிக்க இணங்கிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் உண்மைநிலை அதுவல்ல; தாம் எடுத்த முடிவின்படியே தொடர்ந்தும் உள்ளோம் எனவும்; தம்முடன் 8 மு.கா. பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுதியாக உள்ளார்கள் எனவும் இந்த அதிருப்தியாளர் அணியின் தலைமையை ஏற்றிருக்கும் பிரதியமைச்சர் அத்தாவுல்லா, இச் செய்தியை மறுத்து மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இப் பிணக்கின் அடிப்படைக் காரணம் என்ன என்பதுதான் இங்கு அக்கறைக்குரிய விடயம்.

இந்த அதிருப்பதியாளர் அணி முன் வைத்துள்ள கோரிக்கையானது, வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களுக்குத் தனியான அரசியல் அலகு வழங்குவதற்கும், முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்பதற்கும், முஸ்லிம்களின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்துவதற்கும், அரசாங்கத்தின் பிரதமர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க உறுதிமொழி வழங்க வேண்டும் என்பதேயாகும்.

19 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்னர் இக் கோரிக்கைகளுக்கு இணங்க வேண்டும் என அவர்கள் கால நேரம் அறிந்து காயை நகர்த்தியுள்ளார்கள்.

இதனால் அரசாங்கம் மட்டுமன்றி முஸ்லிம் காங்கிரஸ் தலைமையும் இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

தனியலகு ஒன்றை முஸ்லிம்களுக்கு வழங்குவது என்ற விடயம் தற்போதைய நிலையில் அரசாங்கத்தின் கையில் மட்டுமே தங்கியதாக அல்லாமல் சமாதானப் பேச்சுவார்த்தையின் மறுதரப்பினராக இருக்கும் புலிகளையும் பொறுத்த விடயமாகவே யதார்த்தத்தில் உள்ளது.

புலிகளின் சம்மதமின்றி எதையுமே செய்வதானது சமாதானப் பேச்சுவார்த்தையையே குழப்பிவிடும் என்று அதிக அவதானத்துடன் நடந்து கொள்ளும் அரசாங்கத்துக்கு, முஸ்லிம்களின் நேரடியானதும் கனமானதுமான இக் கோரிக்கையைத் தன்னிச்சையாக ஏற்றுக் கொள்வது சங்கடமானதாகும்.

இதைப் பிரதிபலிக்கும் வகையில்தான் இக் கோரிக்கை தொடர்பாக பிரதமர் ரணிலின் பதிலும் அமைந்திருந்தது.

அவரது பதிலில் முஸ்லிம்களின் பாதுகாப்பும் கௌரவமும் உத்தரவாதப் படுத்தக்கூடிய வகையில் எந்தத் தரப்பினருக்கும் பாதகமில்லாதவாறே பேச்சுவார்த்தையில் தீர்வு காணப்படுமெனக் கூறியிருந்தார்.

ஆனால், இப் பதிலானது இந்த அதிருப்தியாளர்களின் பிரதான கோரிக்கையான முஸ்லிம் தனியலகு பற்றியோ, முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமை பற்றியோ திட்டவட்டமாக எவ்வித தெளிவான உத்தரவாதத்தையும் வழங்குவதாக இல்லை.

இப் பொதுப்படையான பதிலில் அதிருப்தியாளர்கள் திருப்தி கொள்வதாக இல்லை.

இதே நேரம், பொதுஜன ஐக்கிய முன்னணி, தருணம் பார்த்துத் தனது துருப்புச் சீட்டை மேசைக்கு எறிந்துள்ளது.

அதிருப்தியாளர்களின் தனியலகுக் கோரிக்கைக்குத் தாம் ஆதரவென அதன் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பொ.ஐ.மு. தனது அரசாங்க காலத்தில் முன் வைத்த அரசியல் யாப்பு யோசனைகளிலும், முஸ்லிம் காங்கிரஸ் கோரிய தென்கிழக்கு மாகாண (முஸ்லிம் மாகாண) கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அவர் காலமறிந்து சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் அரசாங்கம், இதற்கு மேலான ஒரு உத்தரவாதத்தை வழங்காத பட்சத்தில், முஸ்லிம் காங்கிரஸ் ஏன் அரசாங்கத்துடன் இணைந்திருக்க வேண்டும்? இக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் பொ.ஐ.முன்னணியுடன் சேர்ந்து ஏன் செயற்படலாகாது என்ற ஒரு கேள்வி கிளம்ப வழி செய்யப்பட்டுள்ளது. இங்கு அதுவே பொ.ஐ.முன்னணியின் நோக்கமாகவும் இருந்தது.

ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமைப் பொறுத்தவரை அரசாங்கத்துடன் கொண்டுள்ள உறவை முறித்துக் கொள்வதையும் விரும்பவில்லை. அத்தோடு இக்கட்டான கால கட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் என்ற வகையில் தனது கரத்தில் இருக்கக்கூடிய பேரம் பேசும் பலத்தையும் பறிகொடுக்க விருப்பமில்லை.

அத்துடன் இப் பேச்சுவார்த்தையில் குழப்பம் ஒன்று ஏற்படுவதற்குத் தாமோ, தமது கட்சியோ காரணகர்த்தாவாகக் காட்டப்படுவதையும் விரும்பவில்லை.

ஆனால், ஹக்கீமும் இது போன்ற ஒரு கோரிக்கையை முன்வைத்தே கடந்த பொ.ஐ.மு.அரசாங்கத்தைக் கவிழ்க்கும் அரசியல் குழப்பத்திற்கு காரணமாகி இருந்தார்.

பொ.ஐ.மு. வின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் ஹக்கீம் அமைச்சராக இருந்தபோது, கிழக்கில் கல்முனைத் தனிமாவட்டம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை உயர்த்திப் பிடித்தே அரசாங்கத்தை விட்டு விலகினார்.

இதே போல் அஷ்ரப்பின் மறைவின் பின்னர் பொ.ஐ.மு.வின் இரண்டாவது ஆட்சியில் இணையும் போதும், சில கோரிக்கைகளை முன்வைத்து, 100நாள் காலக்கெடுவும் விதித்திருந்தார்.

ஆனால், தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் இணைந்த போது, அவர் கல்முனை மாவட்டம் பற்றியோ, வேறு அரசியல் அலகுகள் பற்றியோ கோரிக்கை என்ற வடிவில் வாய் திறக்கவில்லை.

பொதுப்படையாக முஸ்லிம்களின் பாதுகாப்பு, அபிலாஷை என்ற விடயங்களைச் சந்தர்ப்பங்களைப் பொறுத்துக் கூறி வந்தார்.

அரசாங்கமும் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர் புலிகளுடன் ஹக்கீமும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

ஆனால், அதன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட முஸ்லிம் கலவரங்களினால் விளைந்த நெருக்கடியில், முஸ்லிம்கள் பற்றிய தெளிவான தீர்வு ஒன்றை ஈட்டித் தரும் பொறுப்பு அனைத்தையும் ஏற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இப் பாரிய கடப்பாட்டுடன், அவர் அரசாங்கத்தின் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கு வகிக்கும் சந்தர்ப்பத்தையும் ஈட்டியிருந்தார்.

இந் நிலையில், நிகழ்ந்த பேச்சுவார்த்தையில் ஹக்கீம் முஸ்லிம்களின் பிரதிநிதியாக ஒலித்திருக்க வேண்டும் என்ற ஆதங்கம் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டது.

அதேவேளை பேச்சுவார்த்தையின் முடிவில் காணப்பட்ட முதல் கட்ட உடன்பாடுகளில் முஸ்லிம்கள் எதிர்பார்த்த எந்த அம்சங்களும் எதிரொலிக்காதது ஒரு ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

"இப் பேச்சுவார்த்தை முதற் கட்டமே, அடுத்தடுத்த கட்டங்களில் முஸ்லிம்களுக்கான தீர்வுகளைப் பற்றி ஆராயப்படும்" என ஹக்கீம் கூறிய சமாதானத்திற்கு அதிக வரவேற்புக் கிடைக்கவில்லை.

இதேவேளை, ஹக்கீம் வடக்கு-கிழக்கில் முஸ்லிம் தனியலகு யோசனைக்குப் பதிலாக மாற்று யோசனைகள் பற்றித் தாம் ஆலோசித்து வருவதாக ஒரு செய்தியை வெளியிட்டிருந்தமை அதிருப்தியை உச்சக் கட்டத்திற்கு இட்டுச் சென்றது.

ஹக்கீம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரல்ல. கண்டியைச் சார்ந்த அவரால் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சனைகளையும், மனோநிலையையும் சரிவரப் புரிந்து கொள்ளவோ, பிரதிபலிக்கவோ முடியாது எனவும் சந்தேகக் குரல்கள் கிளர்ந்துள்ளன.

இந் நிலையில்தான் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் மனநிலையை அரசியலாக்கிக் கொள்ளும் வகையில் இந்த அதிருப்தியாளர் குழு போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

எனினும் இவர்களுக்கு முஸ்லிம் காங்கிரஸிடமிருந்து பிரிந்த அதன் அரசியல் மாற்றமைப்பாக இருந்து வரும் அஷ்ரப்பின் "நுஆ" கட்சியின் ஆசீர்வாதம் உள்ளதா என்றும் பரவலாகப் பேசிக்கொள்ளப்படுகிறது.

இப் போராட்டம் தலைமைக்கு எதிரான போராட்டமல்ல, முஸ்லிம்களின் உரிமையை வென்றெடுப்பதற்கென்றே அதிருப்தியாளர்கள் சார்பாகக்கூறப் படுகிறது. ஆனால், இவர்கள் குறிப்பிடும் "முஸ்லிம்களின் உரிமையை வென்றெடுப்பதற்கு" இந்த அதிருப்தி யாளர்கள் என்ன முயற்சியை செய்கிறார்கள் என்று புரியவில்லை. இங்கே கிழக்கு மாகாணத் தலைமை ஒன்றை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற நோக்கமே மறைந்திருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். காலம்தான் வெளிச்சம்.

## முரசம்

### மக்களை நிர்ப்பந்திக்கும் ஹர்த்தால்கள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

கிழக்கில் மீண்டும் ஒருமுறை வன்செயல்கள் வெடித்து ஓய்ந்து விட்டன. "யுத்தம் மறுபடி வெடிக்குமா" என்ற அச்சம் மக்கள் மனதை ஒருமுறை கிலி கொள்ள வைத்து மறைந்துள்ளது.

இந்த வன்செயல்களில் அப்பாவி மக்கள் 8 பேரின் உயிர்கள் அநியாயமாகப் பலியானதுடன் 50 க்கு மேற்பட்டோர் காயங்களுக்கும் இலக்காகினர். எந்தவித அவசியமும் இல்லாமல் நடைபெற்ற வன்செயல் இது என்பதுதான் இங்கு கவனத்துக்கும் வருத்தத்துக்கும் உரியதாகும்.

அன்றாட நடவடிக்கைகளில் ஏற்படும் சிறு சிறு தர்க்கங்கள், உதிரியான சம்பவங்களுக்காக சமாதானத்தையே அறைகூவி அழைப்பது அபத்தமானது. இச் சிறு சிறு சம்பவங்களில் எத் தரப்பிலும் பிழை இருக்கலாம். ஆனால், அவற்றைப் பக்குவமாகவும், நிதானமாகவும் சம்பந்தப்பட்ட மட்டங்களிலே கையாண்டு தீர்த்துக் கொள்ள முடியும்.

ஆனால், அண்மைய பல சம்பவங்கள் பொதுமக்களை அவசியமற்ற ஹர்த்தால்களை நோக்கி நிர்ப்பந்திப்பவையாக உள்ளன. பொதுமக்களால் கையாள முடியாத இராணுவ அரண்களை நோக்கி ஏவப்படுகின்ற நிலைமை வரை அவர்கள் இட்டுச் செல்லப்பட்டுள்ளார்கள்.

இதுவே இப் பாரிய அனர்த்தங்களுக்கு வழிகோலுவதாக அமைந்திருந்தது. எனவே ஹர்த்தால்கள் பற்றிய மறுசிந்தனை இங்கு- குறிப்பாக வடக்கு-கிழக்கில் அவசியமாகிறது.

ஒரு புறம் சமாதானத்துக்குச் சவாலாக இது உருப்பெற்றுவிடாது இருப்பது அக்கறைக்குரிய விடயமாக இருக்க, மறுபுறம் பொதுமக்கள் பலிக்கடாக்களாகி விடாதிருப்பது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இது குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் தெரிவித்த அறிவுரையையும் எம்மவர்கள் செவிமடுப்பது காலப் பொருத்தமானது.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# வெள்ளைக்காரன் கட்டிக்கொடுத்த லயன்களிலேயே இன்றும் வாழும் தோட்டத் தொழிலாளர்கள்

மலைக் குருவி

அன்றைய காலனித்துவ ஆட்சியாளர்கள் தொழிலாளர்களைத் தோட்டப் பிரதேசங்களில் தங்கவைத்து வேலை செய்விப்பதற்காக அமைக்கப்பட்ட லயன்கள்தான் தொழிலாளர்களின் பிரதான குடியிருப்புக்களாக இன்றும் விளங்குகின்றன.

அக் குடியிருப்புக்கள் மக்கள் வாழ்வதற்குரிய அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்காத (பெரக்) மாதிரியானது. அந்த லயன் வீடுகளுக்குக் காற்றோட்ட வசதியோ, வெளிச்சமோ இல்லை. சமைப்பதற்கோ, நித்திரை கொள்வதற்கோ போதிய இடமில்லாமல் பலர் ஒரே வீட்டில் பத்து அடி காம்பிராவுக்குள் வாழும் நிலையே இன்றும் தொடர்கின்றது. அது மட்டுமல்ல வீடு பற்றாக்குறை காரணமாக பிரத்தியேகமான மண் வீடுகள் அமைத்துக் கொள்வார்கள். அதை அமைப்பதற்குக் கூட தோட்ட நிர்வாகங்களின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் செய்ய முடியாது.

இந்த லயன் (பெரக்) அமைப்பு முறையானது தொழில் நிமித்தம் பெருந்தோட்ட உரிமையாளர்களால் இலவசமாக அமைக்கப்பட்டு வழங்கப்பட்டவை. இவ்வீடுகளை சொந்தமாக்கிக் கொடுக்க நிர்வாகங்கள் விரும்பாததோடு இவற்றை முறையாகத் திருத்திக் கொடுக்கவும், அபிவிருத்தி செய்வதற்கும் முன்வரவில்லை.

இந்த லயன் அமைப்பு முறை தொழிலாளர்களைப் பொது நீரோட்டத்திலிருந்து ஒதுக்கித் தனிச் சமூக அமைப்பாக வாழவே வழி சமைத்துள்ளது. அனைத்து வசதிகளைக் கொண்ட நிர்வாக அலகு அமைந்திருக்கும் நகர்புறத்திற்கும் பெருந்தோட்டப்புற குடியிருப்புக்கும் இடையில் அதிகளவு தூரத்தை கொண்டிருப்பதனால் அம் மக்கள் தங்களது நிர்வாகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளனர். அதேபோல் கிராமப்புறங்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ள போக்குவரத்து, மின்சார வசதிகள் இப் பிரிவினருக்கு மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் ஏற்பட்ட நன்மை தீமைகளைக் கருத்திற் கொண்டு பூர்வீகமாக வாழ்ந்து வரும் தொழிலாளர்களின் குடியிருப்புக்கள் அவர்களுக்கே சொந்தமாக்கப்படல் வேண்டும் என்ற கருத்துக்கள் முன் வைக்கப்பட்ட போதும் எதுவித முன்னேற்றமுமில்லை.

ஒவ்வொரு அரசாங்கத்தினாலும் பல வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் நாட்டின் முழுச் சனத்தொகையில் 8 வீதத்தைக் கொண்டிருக்கும் இம் மக்கள் மாத்திரமே தங்களது குடியிருப்புக்களைச் சொந்தமாகக் கொண்டிருக்கவில்லை.

மலையக மக்களின் பெரும்பாலானவர்கள் தற்போதிருக்கும் குடியிருப்புக்களைப் பராமரிப்பதற்கு அக்கறைகொள்வதில்லை. வீட்டின் மீது அக்கறையற்று இருப்பதற்கு சொந்தமில்லாத வீட்டைப்பற்றி நாம் ஏன் அக்கறை கொள்ளவேண்டும் என்று எண்ணுவது பிரதான காரணம். நாம் இருக்கும் வரை இருந்துவிட்டு போவோம் என்ற மனப்பாங்கு அதிகமாகவே காணப்படுகின்றது. வாக்குரிமையை வழங்கி அந்த வாக்குகளைத் தாங்கள் பெற வேண்டும் என்று அக்கறை கொள்ளும் கட்சிகள் இந்தக் குடியிருப்பு விடயத்தில் மௌனமாக இருப்பது ஏன்?

சம்பளப் பிரச்சினையின் போது இந்த நிரந்தரமற்ற குடியிருப்பு வாழ்க்கையை உதாரணமாக காட்டுகின்றார்கள். அதாவது மலையக மக்களுக்கு வீட்டு வாடகை இல்லை, தண்ணீர் வரி இல்லை. சுகாதார வசதி இலவசம், விறகு இலவசமாக கிடைக்கிறது எனவே அவர்களுக்கு வழங்கப் படும் ஊதியம் போதுமானது என்று காரணம் கூறி நியாயமான, தீர்க்கப்படவேண்டிய பொருளாதார பிரச்சினைகளைக் கூட தட்டிக்கழிக்கும் போக்கு இதனாலேயே உருவாக்கப்படுகிறது.

அதற்கு முதற்படியாக அவர்களின் வீடுகள் சொந்தமாக்கப்பட்டு சட்டபூர்வமாகவும், பௌதீக ரீதியாகவும் நிர்வாக ரீதியிலும் தோட்ட நிர்வாகத்தின் பிடியிலிருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும்.

உள்ளூராட்சி நிர்வாகத்தின் கீழும் பொது சேவைகள், பொது வசதிகள் பொது நிர்வாகத்தின் கீழும் கொண்டுவரப்படல் வேண்டும். வீடுகளின் உரிமையும், தனிப்பட்ட குடியேற்ற குடும்பங்களுக்கு வழங்குதல், உள்ளூராட்சி அமைப்புக்கள் பொது வசதிகள் அபிவிருத்திக்கும் பாராமரிப்புக்கும் பொறுப்பாக இருப்பதோடும், வீட்டையும் வீட்டைச் சுற்றி இருக்கும் காணியையும் அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும். வீடமைப்புத் திட்டத்தினால் வழங்கப்படும் ஏழு பேர்ச் நிலம் 10 பேர்ச் ஆக உயர்த்தப்பட வேண்டும்.

காலத்துக்குக் காலம் மலையக மக்கள் அடிப்படை உரிமைகளைக் கூட போராட்டம் நடத்தியே பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைதான் ஏற்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக வாழும் இத் தொழிலாளர்களுக்குச் சிறு நிலப்பகுதி கூட சொந்தமாக்கப்படவில்லை. காலத்துக்குக் காலம் ஏமாறும் அரசியல்வாதிகளால் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

உலக குடியிருப்பு தினத்தில் தலைநகரில் அரசசார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பெருந்தோட்டத் துறை சார்ந்த மக்களின் வீடுகள் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தொழிலாளர்களின் குடியிருப்பையும், அவர்களின் காய்கறி செய்கை பண்ணப்படும் தோட்டங்களையும் அவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும், கடனடிப்படையில் வழங்கும் வீடமைப்புத் திட்டத்துக்கு ஈ.பீ.எவ், ஈ.ரீ.எவ்.ஐ. அடமானமாக கேட்பது நிறுத்தப்படல் வேண்டும், தொடர்மாடித் திட்டங்கள் கைவிடப்பட வேண்டும், தோட்டங்களில் வேலை செய்யாத குடும்பங்களை தோட்டங்களில் இருந்து வெளியேற்றும் சட்டம் நிறுத்தப்படல் வேண்டும், தோட்ட வீடமைப்புக்கென தனியான வீடமைப்பு சபை உருவாக்கப்படல் வேண்டும் போன்ற கோஷங்கள் முன் வைக்கப்பட்டன.

ஆனால் இம் மக்கள் சமூகமோ தங்களுக்குரிய குடியிருப்புக்கள் சொந்தமாக்கப்பட வேண்டும், அனைத்து வசதிகளும் கொண்டவையாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து இருந்தாலும் அந்த திட்டங்களை வலுவானதாக மாற்றி அதை செயற்படுத்துவதற்கோ, நடைமுறைப்படுத்துவதற்கோ போதிய வழிகாட்டல் இல்லாமல் அரசியல் வாதிகளின் வாக்குறுதிகளை நம்பிக்கொண்டிருக்க வெண்டிய நிலையில் உள்ளது.

அபிவிருத்தி, உதவி, திருத்தியமைத்தல் என்ற பாணியில் லயன்களில் ஒழுக்கு ஏற்பட்டால் தகரம், மாற்றுவதும், ஒழுக்கை அடைப்பதும் முழுமையான பிரச்சினைக்கு தீர்வைத் தராது. சம்பளப் பிரச்சினையின் போது இந்த நிரந்தரமற்ற குடியிருப்பு வாழ்க்கையை உதாரணமாக காட்டுகின்றார்கள். அதாவது மலையக மக்களுக்கு வீட்டு வாடகை இல்லை, தண்ணீர் வரி இல்லை. சுகாதார வசதி இலவசம், விறகு இலவசமாக கிடைக்கிறது எனவே அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் போதுமானது என்று காரணம் கூறி நியாயமான, தீர்க்கப்பட வேண்டிய பொருளாதார பிரச்சினைகளைக் கூட தட்டிக்கழிக்கும் போக்கு இதனாலேயே உருவாக்கப்படுகிறது. இத்தனை வருடங்களுக்குப் பிறகு மக்களின் குடியிருப்புக்காக தலைநகரில் ஆர்ப்பாட்டம் செய்ததன் மூலம் வெளி உலகுக்கு தெரிவிப்பதற்கு முன்னர், அது மக்கள் பிரச்சினையாக உருவெடுக்கும் வகையில் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான நியாயமான, அடிப்படையான பிரச்சினைகளுக்கு தொழிலாளர் சக்திகள் அனைத்தும் ஒருமித்து ஆதரவுக் குரல் கொடுக்க பின்நிற்கக் கூடாது.

மேல் கொத்மலைத் திட்டம் தொடர்பான கட்டுரை அடுத்தவாரம் பிரசுரமாகும்

# சமாதான நம்பிக்கை வீண்போகுமா...?

ஊடறுப்பான்

சமாதானத்திற்கான சூழ்நிலை கனிந்திருப்பதும், அரச தரப்பினர் மீது நம்பிக்கை பிறந்திருப்பதும் இது முதற் தடவையல்ல. ஏற்கனவே இது போன்ற சூழ்நிலைகள் பல தடவை வந்து முகம் காட்டிவிட்டு மக்களை ஏமாற்றிச் சென்றிருக்கின்றது.

87 இல் அரச படைகள் 'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டன. பல நூறு மக்கள் கொல்லப்பட்டனர். ஏனைய பிரதேச மக்கள் தாமும் கொல்லப்படுவோமோ என்று ஏங்கிக்கொண்டிருந்தனர்

அப்போதுதான் வட, கிழக்கு வான் பரப்பில் அன்று வரை மக்கள் பார்த்திராத விமானங்கள் சில வட்டமிட்டன. அவைகள் உணவுப் பொட்டலங்களோடு வந்தவை என்றவுடன் மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்துகொண்டனர். "அவைகள் குண்டு வீச்சு விமானங்களல்ல! தொண்டு செய்ய வந்த இந்திய விமானங்கள்" என்று இந்திய வானொலிகள் அலறிக்கொண்டன.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்திய அமைதிப்படை வட, கிழக்கில் கால் பதித்தன. வீதிகள் எங்கும் அமைதிப் படைக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்தியப் படையினர் மீட்க வந்தவர்களாகக் காண்பிக்கப்பட்டனர்.

புலிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது. இந்தியப் படையினரின் முகாம்களை நோக்கிப் புலிகள் மக்களோடு இணைந்து சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். படையினரை நோக்கிக் கற்கள் வீசப்பட்டன. சில இடங்களில் இந்தியப் படையினரின் வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இந்தியப்படையினர் மக்களின் எதிரிகளாகக் காண்பிக்கப்பட்டனர்.

இதன் பின்பு பிரேமதாசா-புலிகள் பேச்சுவார்த்தை நடந்தது. பிரேமதாசா சாதாரண குடும்பத்திலிருந்து வந்தவர் . மிக எளிமையானவர், என ஊடகங்கள் எழுதித் தள்ளின. இனப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பார் என்ற எதிர்பார்ப்புகள் மக்கள் மனங்களில் ஊட்டப்பட்டது. கொழும்பு வரை புலிகள் வந்து 14 மாதங்களாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

வட, கிழக்கிலிருந்து இந்தியப் படையினர் வெளியேறினர். புலிகளுக்கும்.பிரேமதாசா அரசுக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது. பிரேமதாசா மக்களின் எதிரியாகக் காண்பிக்கப்பட்டார். பின்பு தற்கொலைப் போராளி ஒருவரால் மேதின ஊர்வலம் ஒன்றின் போது அவர் கொல்லப்பட்டார்.

94 இல் சந்திரிகா குமாரதுங்க பதவிக்கு வந்தார். சந்திரிகா சமாதான தேவதை! போராளி இயக்கங்களுடன் நல்லுறவு வைத்திருந்த, இனவாதம் அற்ற தலைவரின் மனைவி! இவ்வாறெல்லாம் அன்றைய அரசியல் அரங்கில் பரப்புரைகள் செய்யப்பட்டன. சமாதானத் தூதுக் குழுவினர் யாழ் சென்றனர். மக்கள் முண்டியடித்துக் கொண்டு அவர்களை வரவேற்கச் சென்றனர்.

புலிகளுக்கும் சந்திரிகா அரசுக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது. சந்திரிகா இனவாதத் தலைவர் பண்டாரநாயக்காவின் மகள் என்று சுருதி மாறி ஊடகங்களும் ஊதித் தள்ளின. சந்திரிகா மக்களின் எதிரியாகக் காண்பிக்கப்பட்டார்.

இன்று புலிகளுக்கும் ரணில் அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை அவர் வழங்கியே தீருவார். இத்தோடு சமாதானம் பிறந்து விடும் என்ற நம்பிக்கைகள் ஊட்டப்பட்டு வருகின்றது. ஐரோப்பிய ஊடகங்கள் முதற்கொண்டு இங்குள்ள ஊடகங்கள் வரை பிரதமர் ரணில் மீது விமர்சனங்களை முன்வைப்பதைத் தவிர்த்து வந்திருக்கின்றன. அவர் சமாதானத்தின் தூதுவராகச் சித்தரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

மொத்தத்தில் ஆளும் பொறுப்பில் இருக்கும் ஒருவர் சமாதான விரும்பியாகச் சித்தரிக்கப்படுவது வரலாற்றில் இது முதற் தடவையல்ல என்பதை மக்கள் அறிந்து வைத்துள்ளனர். இது வரை கால வரலாறுகள் மக்களின் உணர்வுகள் ஒரே திசையில் நிரந்தரமாக இருந்து வந்ததாகவும் இல்லை. இன்றைய நண்பன் நாளைய எதிரியாகவே மக்களுக்குக் காண்பிக்கப்பட்ட நிகழ்வுகள் அரசியல் அரங்கில் நிகழ்ந்து வந்திருக்கிறது.

கடந்த காலங்களைப் போல் இம்முறையும் தமது சமாதான நம்பிக்கைகள் வீண் போய்விடக் கூடாது என்ற ஆதங்கம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் என்றுமில்லாதவாறு வேர் விட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

கடந்த கால சமாதான உடைவுகளின் போது ஐரோப்பிய தமிழ் ஊடகங்களே யுத்தம் பற்றிய முன்னறிவிப்புகளை முதலில் தெரிவித்து வந்திருக்கின்றன. அரச தரப்பினர் யுத்தத்திற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டு வருவதாக அங்குள்ள சில ஊடகங்கள் கருத்து வெளியிட்டு வருவதாக அறியப்படுகிறது. அது தவிர அண்மைய கிழக்குச் சம்பவங்களை வைத்து ஐரோப்பிய ஊடகங்கள் மக்கள் மனங்களில் அரசு பற்றிய பகைமை உணர்வுகளைக் கொடித் தீர்த்து வருவதாகவும் அறியப்படுகிறது. புலம் பெயர்ந்த மக்களுக்கும் கிழக்கு மக்களின் அவலச் செய்தியைத் தெரிவித்தே ஆக வேண்டும் என்பது வேறு விடயம்.

'ஆனைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பது போல் இவைகள் யுத்தத்திற்கான முன்னறிவிப்பாக ஆகிவிடக் கூடாது என்பது மக்களின் விருப்பம். பிரதமர் ரணிலும் தமிழ் பேசும் மக்களின் எதிரியாகச் சித்தரிக்கப்பட்டு விட்டால் மீண்டும் ஒரு இழப்பினைச் சந்திக்க நேரிடுமோ என்ற அச்சத்தில் மக்கள் இருப்பதாகத் தெரிகிறது. சமாதானம் தேடி நகரும் பயணத்தில் நிதானம் தேவை! புரிந்து நடக்கும் பொறுப்பு இரு தரப்பினருக்கும் உண்டு!

# NAVEEN CERAMIC

தரமான
Wall Tiles, Floor Tiles
மற்றும் குளியலறை உபகரணங்களை
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



Naveen Ceramic No.307, George R. De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



## விதுஜா ஏசியன் சொப்

**VIDUJA ASIAN SHOP**

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:-031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.
விதுஜா ஏசியன் சொப்



## திறப்பு விழா

மின்னியல் பொருட்களின் விற்பனையில் முன்னோடிகளான ரெலி மார்கட்டிங் நிறுவனத்தார் 16.10.2002 புதன்கிழமை அன்று வத்தளையில் தமது மற்றுமொரு காட்சியறையைத் திறந்து வைப்பதாக அதன் உரிமையாளர் அன்ரன் அருளானந்தம் தெரிவித்தார்.

## வத்தளையில் Telemarketing இன்

# புதிய காட்சியறை

மின்னியல் பொருட்களின் விற்பனையில் தன்னிகரற்றுத் திகழும் **Telemarketing** நிறுவனத்தினர் வத்தளை பிரதேச வாடிக்கையாளர்களின் வசதிகருதி தமது புதிய காட்சியறையை **16.10.2002** முதல் திறந்து வைக்கின்றார்கள்

- வானொலிப் பெட்டி
- தொலைக்காட்சிப்பெட்டி
- வீடியோ, டெக்
- குளிர்சாதனம்-மின்குமிழ்
- காஸ் அடுப்பு-மின் அடுப்பு
- ஜெனரேட்டர்- என்ஜின் லயட்







SISIL SAMSUNG SONY LG Panasonic Candy SANYO SHARP SINGER PHILIPS

- குறைக்கப்பட்ட விலைகள்
- இலவச போக்குவரத்து
- இலகு தவணைக் கொடுப்பனவு
- உறுதியான விலை

## ரெலி மாக்கட்டிங்

TM Tele Marketing
CONSUMER ELECTRONICS

615, Negombo Road.
Mabola, Wattala.
Tel: 01-947292, 01-947293

இனியென்ன, வத்தளையில் உள்ளவர்களின் "வீடே அழகாகப் போகின்றது" Telemarketing இன் மூலம்



## சிங்கப்பூரில் தங்குமிடவசதி

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும்இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore 079903
எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி எண்:
அப்பு: 0065-975 14 941



## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

**Eric Rajapakse**
Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539, காலி வீதி, வெள்ளவத்தை.
(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)

தொலைபேசி:
01-362971,553877

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்





## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, சுக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு, நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம் பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுராஜ் சோமசுந்தரம் அவர்களை இல. 25 சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லெவினியா)(கொழும்பு) எனும் இடத்தில் பழைய நோயாளர்களும், முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00மணி முதல் 7.00மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00மணி முதல் 12.00மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.



கருத்தினில் நிறைந்தவர்களை
சிரத்தையாய் வாழ்த்திட
பொருத்தமான மடல்களுக்கு
நாடுங்கள்,

இலங்கையின் முன்னணி, வாழ்த்து மடல்கள் தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களுமான

**Ransca Greetings**

*No: 142,144*
*St.Antony's Mawatha*
*Colombo-13*

*T.P- 430125,332678, 074-617294*
*E-Mail- ransca@yahoo.com*

எம்மிடம் வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அதிகப்படியான கட்டளைகளை **(Orders)** திரட்டி வரும் விற்பனைப் பிரதிநிதிகளுக்கு விசேட சலுகையுமுண்டு.

வி.பி.பி. ஓடர்களும் உடனுக்குடன் அனுப்பப்படும்.





## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.



### ★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

### ★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.



### ★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

### ★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

### ★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

### ★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

### ★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

### ★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

### ★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

### உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அறபுத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது. உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும். குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

### ★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

### ★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

### ★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி.

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# ஜனாதிபதியுடன் சுமுக உறவு

## அரசாங்கத்தின் அடுத்த முயற்சி!

பிரதமர். ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு சமாதானப் பேச்சுவார்த்தையைப் பற்றிய விளக்கமளிப்பதற்கான சந்திப்பு என தெரிவிக்கப்பட்டிருந்தது. தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அமைச்சர் மிலிந்தமொறகொட ஜனாதிபதியைச் சந்திக்க ரணிலுடன் கூடச் சென்றிருந்தாலும், அதே பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டிருந்த அமைச்சரான ஜி.எல்.பீரிஸ் இச் சந்திப்பில் தவிர்க்கப்பட்டிருந்தார். இது தற்செயலான ஒரு தவிர்ப்பாகத் தெரியவில்லை. பீரிஸ் முன்னர் ஜனாதிபதி சந்திரிகாவின் வலது கரமாக, அவரின் அரசியல் அமைப்புச் சட்ட வரவை வரைவதில் முன்னின்று செயற்பட்டவர். ஆனால் கடந்த அரசாங்கத்தின் இறுதிக் காலத்தில் ஜனாதிபதியுடன் மனஸ்தாபம் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கட்சி மாறியவர். ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் அமைச்சர் பீரிஸுக்கும் இடையே நிலவும் விரோத மனப்பான்மையைக் கருத்திற்கொண்டே அவர் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்பது ஒரு கருத்தாக உள்ளது. அதேவேளை அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் பீரிஸுக்குமிடையே கூட முரண்பாடுகள் துளிர்விட்டுள்ளதாகச் சில செய்திகள் வெளிவந்துள்ளன. இவ்வாறான விடயம் புலிகளுக்குச் சார்பான பத்திரிகையொன்றிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் அண்மையில் சில காலங்களாக கீரியும் பாம்புமாகச் சென்றுகொண்டிருந்த ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான விரிசல் நிலை இந்தச் சந்திப்பின் மூலம் தணிக்கப்பட்டுள்ளது. இவ் விரிசலுக்குப் பிரதான காரணமாக ஜனாதிபதியின் அதிகாரச் சிறகை வெட்டும் அரசாங்கத்தின் முயற்சியான 19வது திருத்தச்சட்ட விவகாரமே அமைந்திருந்தது. இச் சட்டமூலத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் சிலவற்றைப் பிடுங்கி அவரால் பாராளுமன்றத்தின் மீது அதிகாரம் செலுத்த முடியாதவாறும் அதை விரும்பிய போது கலைத்துவிட முடியாதவாறும் ஆக்கிவிடும் எத்தனிப்பு ஜனாதிபதியைச் சினங் கொள்ளச் செய்திருந்தது. அத்துடன் இச் சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஈட்டுவதற்காகப் பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து ஒரு கணிசமான தொகையினரை அரசாங்கத்தின் தரப்பிற்கு மாற்றும் பகீரத முயற்சியும் இக் கட்சியின் தலைவி என்ற முறையில் அவருக்கு ஆத்திரமூட்டுவதாக அமைந்திருந்தது.

இதனால் ஜனாதிபதி இச் சட்ட மூலத்திற்கு மட்டுமன்றி அரசாங்கத்தின் வெவ்வேறு செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து நேரடியாகவும் பகிரங்கமாகவும் பேசி வந்தார். ஆயினும் 19 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுவது தற்போது கேள்விக்குறியானதாக மாறுகிறது. ஒரு புறம் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்பட்ட நிலையில் இதை நிறைவேற்றச் சர்வஜன வாக்கெடுப்பு அவசியமா...? இல்லையா? என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குக் காத்திருக்கிறது. பெரும்பாலும் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம் எனத் தோன்றுகிறது.

அதேவேளை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இச் சட்டமூலத்திற்கு ஆதரவாக ஈட்டிக்கொள்வதும் அரசாங்கத்திற்குச் சிக்கலான விடயமாகியுள்ளது. ஒரு புறம் எதிர்பார்த்த அளவு பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கக்கூடியவர்கள் கிடைக்கவில்லை எனத் தெரிகிறது. மறுபுறம் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் இறுதி நேர நிலைப்பாடும் சற்றுச் சந்தேகத்துக்கிடமானதாக உள்ளது. சிறைக் கைதிகள் விவகாரத்தில் தமிழ்க் கூட்டமைப்பினரும் அரசாங்கத்துடன் திருப்திகரமாக இல்லை. இச் சட்டமூலத்திற்கு முன்னதாகத் தமிழ்க் கைதிகள் விவகாரம் தீர்க்கப்படாவிட்டால் தமிழ்க் கூட்டமைப்பினர் இச்சட்டமூலத்திற்கு ஆதரவளிப்பதுவும் சங்கடமானதாக அமையும்.

எனவே தான் எவ்விதத்திலும் ஜனாதிபதியுடன் மீண்டும் சுமுக உறவொன்றைப் பேணுவதன் அவசியம் தற்போது பிரதமர் ரணிலால் உணரப்பட்டுள்ளதுபோல் தெரிகிறது. அதுவே இச் சந்திப்பின் காரணமாக இருக்கலாம். இச்சந்திப்பைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு எதிராகப் பேசிவந்த அமைச்சர் ராஜித சேனாரத்னவும் தற்போது சமாதானக் கொடி காட்டியுள்ளார். விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அவருடன் ஒன்று சேர்ந்து செயற்படுவதற்குத் தயாராகவுள்ளதாகவும், சந்திப்புக்கான திகதி ஜனாதிபதியால் தரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கிறார். இதுபோல் ஜனாதிபதியுடன் முரண்பட்டிருந்த மற்றொரு அமைச்சரான ரவி கருணாநாயக்கவும் விரைவில் அவரைச் சந்தித்துப் பேசக்கூடுமெனவும் நம்பப்படுகிறது.

ஆக, ஜனாதிபதியின் சிறகை வெட்டிப் பணிய வைப்பதை விடப் பேசிப் பழகிப் புரிய வைப்பது மேல் என அரசாங்கத் தரப்பு சிந்திக்கத் தொடங்கி விட்டது.

# கிழக்குப் படுகொலைகள்

உயிரழிவு தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இந்தோனேசியாவின் பாலித்தீவில் உள்ள விடுதிகள் நிறைந்த பகுதியில் தொடர் குண்டு வெடிப்புக்கள் நடந்து 200 பேர் பலி கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அவுஸ்திரேலியா, பிரிட்டன், சிங்கப்பூர், நியூசிலாந்து, சுவீடன் பிரசைகள் கொல்லப்பட்டுள்ளனர். விடுதிகள் இரத்த வெள்ளமாகக் காட்சி தருகின்றன. மனித உடல் எரியும் வாசனை அந்தப் பகுதி முழுவதும் வியாபித்துள்ளது. கொல்லப்பட்டவர்களில் பல்வேறு நாடுகளின் 'றக்பி' விளையாட்டுக்காரர்கள் பலரும் இருந்துள்ளார்கள். தமது பிரசைகள் கொல்லப்பட்டதற்காக, உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லையென இந்தோனேசிய அரசு மீது கண்டனங்கள் விடுக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டினரே பெரும்பாலும் கொல்லப்பட்டிருப்பதால் பல்வேறு விதமான சந்தேகங்கள் உருவாகியுள்ளன.

கடந்த வருடம் செப்டெம்பர் 11 இற்குப் பின்னர் மிகக் கூடுதலான ஆட்களைப் பலிகொண்ட பயங்கரவாதத் தாக்குதல் இதுவாகும்.

இலங்கையில் குண்டு வெடிப்புக்களும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் வானத்திலிருந்து குண்டு வீசுவதும் கடந்த ஒன்பது மாதங்களாக ஓய்ந்துள்ளன. இலங்கையில் இரண்டு தசாப்தங்களாக அச்சமும் பீதியும் கவிந்துள்ளன.

இடைக்கிடை சில மாதங்கள் அமைதிச் சூழ்நிலை என்ற மத்தாப்பு மின்னி மறையும். ஆனால் எமது பிரதேசங்களில் தற்போது சில மாதங்கள் யுத்த நிறுத்தம் நீடித்தே நிலவுகிறது.

எங்கே அந்தச் சூழ்நிலையும் குலைந்து விடுமோ என்று எண்ணும் அளவிற்குக் கிழக்கின் நிலைமைகள் துக்ககரமாக இருக்கின்றன.

அம்பாறை காஞ்சிரங்குடாவில் விசேட அதிரடிப்படை முகாம் பகுதியில் 7 பேர் கொல்லப்பட்டது- 15 க்கு மேற்பட்டோர் காயமடைந்தது தொடர்பாக, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் அநியாயமாக 7 உயிர்கள் இழக்கப்பட்டதற்கு வேதனை தெரிவித்திருந்தார்.

'வருங்காலத்தில் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் தலையாய கடமையை உணர்ந்து அதற்கேற்ற வகையில் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். சமாதானமும் நல்ல சுபீட்சமான எதிர்காலமும் நமக்காகக் காத்திருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு பிரசையும் சமாதான முயற்சிகளைக் குழப்பாமல் நடந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.'

இந்த ஏழு மாதங்களில் சாதிக்கப்பட்ட முக்கியமான விடயமாக மனித உரிமை அமைப்புக்களாலும் மற்றும் சமூக அக்கறை கொண்டவர்களாலும் சுட்டிக்காட்டப்படுவது பல ஆயிரக் கணக்கான மனித உயிர்கள் பாதுகாக்கப்பட்டமையாகும்.

ஆனால் அம்பாறையில் ஏழு பேர்- திருமலையில் மூன்று பேர் அடுத்தடுத்த தினங்களில் மரணித்துள்ளார்கள். 50 பேர் வரை காயமடைந்துள்ளார்கள்.

தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதும் சமாதானத்தை உறுதிப்படுத்துவதும் மிகக் கடினமான பயணமே.

ஜனநாயகம், மனித உரிமைகளை உறுதிப்படுத்தியே இதனை முன்கொண்டு செல்ல முடியும்.

சமாதானச் சூழ்நிலை மெது மெதுவாக அராஜகச் சூழ்நிலையாக மாறிவருவது இன்று வடக்குக் கிழக்கில் பரவலாகக் காணக்கூடிய நிலையாகும்.

இந்த அராஜகம், பலவந்த நிதி அறவீடுகளை மேற்கொள்வது, பலாத்காரமாக யுத்தத்திற்கு ஆட்திரட்டுவது, பிள்ளை கொடாதவர்களின் சொத்துக்களைச் சுவீகரிப்பது, கால்நடைகளை ஓட்டிச் செல்வது, தமக்கு அடிபணியாதவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்குவது, பாடசாலை அதிபர்கள் திகிலூட்டப்படுவது, மொத்தமாகவே சமூகத்தை வாயடைக்கப் பண்ணுவது, கட்சிக் காரியாலயங்களைத் தாக்குவது, மிரட்டல், அச்சுறுத்தல், ஏனைய வன்முறைகள் மூலம் மௌனமாக்கப்பட்ட சமூகத்தை மந்தைகள் போல் நடக்கப் பழக்குவது, இதனால் நேரும் அனர்த்தங்களை அரசியல் இராணுவ ஆதாயமாக அறுவடை செய்வது ஆகியவை இன்று வடக்குக் கிழக்கில் பரவலாக நாம் காணும் அராஜகக் காட்சியாகும்.

வடக்கு -கிழக்கில் நாங்கள் தமிழர்களின் எஜமானர்கள் என்ற மமதையுடன் செயற்படும் படைகளின் பிரசன்னம் களையப்படுவதென்பது வெறும் யுத்த நிறுத்தத்தில் சாத்தியமல்ல. அதற்கு அரசியல் தீர்வு ஒன்றுக்கான உடன்பாடு காணப்பட்டு, யுத்தம் நிரந்தரமாக ஒழிக்கப்பட்டுவிட்டதென்ற நிலைமையை எய்த வேண்டும். இது பேச்சுவார்த்தைகளாலேயே சாதிக்கப்பட வேண்டும்.

அதேவேளை மக்கள் எழுச்சிகள் இயல்பானதாக இருக்க வேண்டும். மக்களின் தன்னெழுச்சியாக அல்லது சீராக நெறிப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் இங்கு மக்கள் பலவந்தமாகப் பலியிடப்படுகிறார்கள்.

இந்த முறை பாலஸ்தீனத்தின் 'இன்டிபடாவோ' அல்லது உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் உரிமைகளுக்கான எழுச்சிப் பேரணிகள் போன்றதல்ல.

எதிரிக்கு ஆத்திரமூட்டி மக்களைத் தாக்கச் செய்து அதன் மூலம் மக்களைத் தம் பக்கம் ஈர்த்துக் கொள்வது என்ற அந்தப் பழைமை


**தாகூர்**

யான, காலாவதியான, சிறிதும் மனிதாபிமானமற்ற, மக்கள் மீது விசுவாசமற்ற, கபடத்தனமான கருத்தியலிலிருந்தே இது உருவாகிறது.

மறுபக்கம், வடக்குக் கிழக்கில் பன்முகத் தன்மை, அதாவது பல சமூகங்களின் இருப்பு, பல கட்சிகளின் இருப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் நிலையில் அங்குள்ள சகல சமூகங்களின் தலைவிதியைப் பற்றியும் நீதி நியாயமாக, பாரபட்சமில்லாமல் சிந்திக்க வேண்டிய அவசியம் உள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்கள்- இவை அதிகரித்துச் செல்வதற்கான ஆரம்பமாக இல்லாமல் இதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அதற்குக் கண்காணிப்புக் குழு, சர்வதேச சமூகம், மனித உரிமை அமைப்புக்கள் போதிய அழுத்தத்தை இரு தரப்பினர் மீதும் பிரயோகிக்க வேண்டும். ●

# அதிரடி அய்யாத்துரை



அமைச்சர் மிலிந்தவோட கழுத்துறைச் சிறைக் கைதிகளச் சந்திக்கப் போன தமிழ்க் கூட்டமைப்பு எம்பிமார் சுமார் 10 பேரோடயும் பேசிறதில தங்களுக்கு அக்கறையில்லையெண்டு கைதிகள் முகத்துக்கு நேரே சொல்லி, இவை உயிரோட இருக்கிறதா இப்பதான் தெரியுதெண்டும் நக்கலடிச்சிருக்கினம். இதுக்கு நடுவில எங்கட முன்னாள் மேயராயிருந்த தாடிக்கார எம்பியார், கைதிகளெல்லாம் டீவி, றேடியோவோட வலு வசதியா இருக்கிறதா பிபிசிக்குப் பேட்டி குடுத்திட்டு இங்க வந்து மாட்டிக் கொண்டார். கைதிகள் எல்லாம் ஆத்திரத்தோட திட்டின திட்டில கொதியேறிப்போய், வெளிநாட்டால திருப்பியனுப்பப்பட்ட ஒரு கைதியப் பாத்து நீ இதுக்குள்ளதான் சாவாயெண்டு சபிச்சுப் போட்டும் வந்திட்டாராம். கைதிகள மீட்கப் போய் சபிச்சுப்போட்டு வாறத்துக்கும் இவைக்குத் துணிச்சல் கொஞ்சம் எஞ்சியிருக்கிறது ஆச்சரியமாத்தான் கிடக்குது.

தெய்வம் வரங்கொடுத்தும் பூசாரி இடம் கொடுக்காத கதையா, கைதிகளை விடுவிக்கப் பாதுகாப்பமைச்சர் முன்வந்தும் சட்டமா அதிபர் சம்மதிக்கிறாரில்லையென்றும், சம்மதிச்சதையும் தாமதப் படுத்துகிறார்களென்றும், தொலைக்காட்சி நிகழ்ச்சியில சாடின ரெலோ முதல்வர் சிறிகாந்தர், கூட்டமைப்புப் எம்.பி.மார் கைதிகள் விடயத்தில் பாராளுமன்றத்தில வெளிநடப்புச் செய்யக் கேட்டும் செய்யாமல் நழுவிக்கொண்டது ஏனெண்டு தெரியேல்லையெண்டும் குற்றம் சாட்டியிருக்கிறார். தான் போராட்டம் நடத்தியிருப்பாராம். அதுக்கு முந்திக் கைதிகள் போராட்டத்தைக் கைவிட்டினமெண்டும் நொந்தாராம். தண்டக்காரன நம்பிறதவிட சண்டைக்காரன நம்பிறது மேலெண்டுட்டுத்தானே மிலிந்தவோட பேசித் தீர்க்கிறது பெட்டரெண்டு கைதிகள் தீர்மானிச்சிருக்கினம். இதுகூடப் புரியேல்லை ஆளுக்கு.

திருகோணமலையை வடமத்திய மாகாணத்தோட மின்சார விநியோக மாவட்டமா இணைக்கப்படுறதுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துப் பாராளுமன்றத்தில ஆவேசமாப் பேசின எங்கட திருமலை எம்பி சம்பந்தர், பேசி முடிய அதே சட்டமூலத்துக்கு ஆதரவாக் கை உயத்தினது தான் வேடிக்கையுங்கோ. இது ஆவேசமா, ஆ, 'வேஷ'மா என்று உங்களுக்கே புரிஞ்சிருக்கும்.

எங்கட போக்குவரத்துப் பற்றித்தான் திரும்பத் திரும்பச் செய்தி வருகுது. ஓடுற பஸ்களில 45சதவீதமான பஸ்ஸு கள் பாவனைக்குதவாததாக் 'கெண்டம்' பண்ண வேண்டியவையாம். நடக்கிற அக்ஸிடெண்டுகளில பஸ் ட்ரைவர்மாரை போக்குவரத்து மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பிறதா? இல்லையா? எண்டத பொலிஸார்தான் முடிவெடுக்கினமாம். இதுவரை அனுப்பப்பட்ட சுமார் 45 பேரில சிலபேருக்கு சித்த சுவாதீனமாம், சிலபேருக்கு கண் பார்வை சரியில்லையாம், இன்னும் சிலபேர் மனக்குழப்பம் கொண்டிருக்கினமாம். சொல்லுறது போக்குவரத்து மருத்துவ அதிகாரி. அப்போ, நாங்கள் போற எந்த பஸ் எமன் கையில எண்டது நிச்சயமில்லை.

முஸ்லிம் காங்கிரஸில முத்திக்கொண்டு போகுது பிரச்சினை. பாராளுமன்றத்தப் பகிஷ்கரிச்ச மு. கா. உறுப்பினர்களின்ர கோரிக்கைகள் நியாயமானதுதான், அதைத் தன்னோட கலந்து பேசி, கட்சியின்ர மொத்த முடிவா எடுத்திருக்க வேணுமெண்டு ஹக்கீம் சொன்ன கருத்துக்கு, அதுசரி, அவர் எப்பிடி மற்றவையோட கலந்து பேசாமல் முஸ்லிம் தனிமாநிலக் கோரிக்கைக்கு மாற்றுத் திட்டம் பற்றி சிந்திக்கிறதா தெரிவிச்சவர், அவரெல்லோ முன்மாதிரியா நடந்து காட்டியிருக்க வேணுமெண்டு பதில் சொல்லினமாம் பகிஷ்கரிப்புக்காரர். இதுக்கு நடுவில பொதுஜன ஐக்கிய முன்னணி அந்தக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிச்சிருக்கிறதால, ரணிலிட்ட இருந்து நிறுதிட்டமான பதில் கிடைக்காட்டால் அரசாங்கத்தில நீடிச்சிருக்கிறதில ஹக்கீம் பாடு கஷ்டம்தான்.

திருமலை அசம்பாவிதங்களுக்கு 99 சதவீதமும் சிங்களவர்களால நிரப்பப்பட்டிருக்கிற பாதுகாப்புப் படைகள்தான் காரணமெண்டு அமைச்சர் மகேஸ்வரன் தன்ர அரசாங்கத்தின்ர படைகளையே குற்றம் சாட்டியிருக்கிறார். தங்கட ராணுவந்தான் காரணமெண்டால் அவர் என்னத்துக்கு இன்னும் அமைச்சரா இருக்கிறாராமெண்டதுதான் புரியேல்லையுங்கோ.

வன்னியில ரெண்டெழுத்தாற்ர மகளிர் அணிக் கொண்டாட்டம் கனபேருக்கு மூக்கில விரலை வைக்கப் பண்ணியிருக்கு. அதில மற்றொரு விசயம், தளபதிமாரெல்லாம் மேடையில இருக்க, புலிகளின் முக்கியஸ்தர் முன்னாள் ஈரோஸ் தலைவர் பாலகுமாரை ஏனோ பார்வையாளர்களோட இருத்திச்சினம். ஏனெண்டு விளங்கேல்லை. ■

## வாஷிங்டன் வாசிகளை திணறவைக்கும் மர்ம துப்பாக்கிதாரி

வாஷிங்டன் நகர மக்கள் ஒரு துப்பாக்கிதாரியை நினைத்துக் கதி கலங்கிப் போயிருக்கிறார்கள். தன்னிடமுள்ள ஸ்நைப்பர் ரக துப்பாக்கியால் ஒவ்வொருவராக எட்டுப் பேரைக் கொன்று குவித்திருக்கும் இந்த நபர் குறித்து எந்தத் தகவலும் தெரியாமல் பாதுகாப்பு அதிகாரிகள் திண்டாடுகிறார்கள்.

ஒக்டோபர் 3 ஆம் திகதியில் நடைபெற்றது. அன்றைய தினம் ஒரே மாதிரியான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் வெவ் வேறு இடங்களில் உயிரிழந்தனர். முத லில் அதிகாலை 7 மணிஅளவில் மோட்டார வாகன விற்பனை நிலையம் ஒன்றில் புல் வெட்டிக்கொண்டிருந்த ஒரு



இந்த நபரின் இலக்கு குறிப்பிட்ட இன, மத, பால் வேறுபாடு கொண்ட மனிதர்கள் என்றில்லை. யாராயிருந்தாலும் தனக்கு வசதியாக அகப்படும் இடத்தில் தன் துப்பாக்கியால் சுட்டுக் கொள்கிறான். இந்த மாதம் 2 ஆம் திகதியில் இத்தகைய முதலாவது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து வாஷிங்டன் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. வாஷிங்டனில் உள்ள மைக்கல்ஸ் என்ற தளபாட விற்பனை நிலையத்தின் கண்ணாடிகளுக்கு தனது துப்பாக்கியால் முதலாவது குறியை வைத்த இந்த இனம் தெரியாத நபரால் அந்த இடத்தில் எவரையும் கொலை செய்ய முடியவில்லை. ஆனால், அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் வீட்டன் என்ற இடத்தில் உள்ள வாகனத் தரிப்பிடமொன்றில் வைத்து ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். சரியாக ஸ்நைப்பர் மூலம் குறி பார்த்து வைக்கப்பட்ட சூட்டில் 55 வயதான ஜேம்ஸ் டீ மார்ட்டீன் என் பவர் உயிரிழந்தார்.

இந்த நபரின் உச்சக் கட்ட வெறியாட்டம் இதற்கு மறுநாள் அதாவது

தொழிலாளி இவனது துப்பாக்கி ரவைக்கு இரையானார். அதன் பின்னர் சரியாக அரை மணி நேரத்திற்குப் பிறகு பெற்றோல் நிரப்பும் நிலையம் ஒன்றிற்கு அருகில் தனது காருக்கு எரிபொருள் நிரப்பிக் கொண்டிருந்த ஒருவர் கொல்லப்பட்டார். அதன் பின்னர் முதலாவது துப்பாக்கிச் சூடு நடத்திய இடத்திற்குச் சமீபமாக உள்ள ஒரு வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்த சாரா ராமோஸ் என்ற 34 வயது பெண் சுட்டுக் கொல்லப்பட்டார். அனைத்துக் கொலைகளும் ஒரே வகையான துப்பாக்கியால், ஒற்றை துப்பாக்கிச் சூட்டில், இலக்குத் தவறாமல் நடத்தி முடிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் மேலும் இருவர் வெவ்வேறு இடங்களில் இதேபோல் சுடப்பட்டனர்.

இந்தக் கொலைகளில் பெரும்பாலானவை வாஷிங்டன் புறநகர்ப் பகுதியான மேரிலாந்து பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. ஆனால், கொலையாளி குறித்த மிகச் சிறிய தடயம் ஒன்றைக் கூட இதுவரை பொலிஸாரினால் கண்டு பிடிக்க முடியாமல் போயுள்ளது.

இந்த மர்ம மனிதர் சுமார் 25 கிலோ மீற்றர் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பில் சுற்றித் திரிவதாகப் பொலிஸார் கூறுகின்றனர். கொலைச் சம்பவங்களை நேரில் பார்த்தவர்களின் சாட்சியங்களைப் பதிவு செய்துள்ள பாதுகாப்பு அதிகாரிகள் இந்த மர்ம மனிதன் கொலைக்குப் பயன்படுத்தியதாக நம்பப்படும் வாகனங்கள் இரண்டின் மாதிரி வரைபடங்களைத் தயாரித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அன்று வேஜினாவிலுள்ள பிரடிரிக்ஸ் பார்க் என்ற இடத்தில் காஸ் நிரப்பும் நிலையம் ஒன்றிற்கு அருகே ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். கொலையாளி வெள்ளை நிற வான் ஒன்றில் வந்ததாகத் தெரிவிக்கப்பட்ட தகவலை அடுத்துப் பொலிஸார் உடனடியாக அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துச் சகல வாகனங்களையும் சோதனையிட்டனர். ஆனால், எவரும் கைதாகவில்லை. இந்த மர்ம மனிதனின் கொலை வெறிக்கு இன்னும் எத்தனை பேர் பலியாகப் போகிறார்களோ என்ற பயத்துடன் வாஷிங்டன் நகரம் காணப்படுகின்றது.

## விண்வெளியில் ரயில் பாதை

ஆகாயத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தின் வெளிப்புறத்தில் பாரமான பொருட்களை நகர்த்திச் செல்வதற்கு ஏதுவாக ரயில் தண்டவாளங்களை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் அமைத்துள்ளனர். அந்தத் தண்டவாளங்களின் நீளத்தை மேலும் அதிகரிக்க, தேவையான சட்டங்களை ஆகாயத்தில் நடந்தபடியே விண்வெளி வீரர்கள் பொருத்தியுள்ளனர்.

விண்ணில் மிதந்தபடி 6 மணி நேரம் பணியாற்றிய நாசா விஞ்ஞானிகள் குழு ஞாயிறன்று இந்தச் சாதனையைச் செய்து முடித்துள்ளது. ஆய்வு நிலையத்துடன் இணைந்த சோதனைச் சாலைப் பெட்டகத்திற்கு வெளியே ஒரு கமெராவையும் அவர்கள் பொருத்தியுள்ளனர்.

## சிகரெட்டை நிறுத்தலாம் வாங்க!

மணி பதினொன்று ஆகிவிட்டால் போதும்... உடனடியாக சிகரெட் ஞாபகம்... என்ன வேலையிருந்தாலும் தூக்கிப் போட்டுவிட்டு ஒரு தம்... பொறுக்க அடித்துவிட்டு வந்தால் தான் அடுத்த வேலையே ஓடும்...

இப்படிச் சொல்பவர்களை நாம் நிறையப் பார்த்திருக்கிறோம். சிகரெட்டை நிறுத்தவே முடியாதா? என்றால் சுலபத்தில் முடியாது என்றுதான் சொல்ல வேண்டும்.

மூளை குறிப்பிட்ட நேரத்தில் புகைக்கச் சொல்கிறது என்பதை விட்டு விடுங்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகள் மீண்டும் மீண்டும் புகைப் பழக்கத்தைத் தொடரச் செய்து விடுவதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

இதை மாற்ற வேண்டுமா? சுலபமான வழி!

வழக்கமாக நீங்கள் சிகரெட்-பீடியை நாடுவது எங்கே? எப்போது? என்பதை யோசியுங்கள். அந்தச் சந்தர்ப்பங்களை அபாயக் கட்டங்களாக எடுத்துக் கொண்டு அவற்றைத் தவிருங்கள்.

புகைக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர்க்கும் வகையில் உங்கள் பணி மற்றும் பழக்க வழக்கங்களை மாற்றுங்கள். இன்று முதல் சிகரெட் புகைக்கக் கூடாது என்று குறிப்பாக ஒரு நாளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அன்று முதல் சிகரெட்டை விட்டுவிட முயற்சி செய்யுங்கள்.

சிகரெட் புகைக்காத நாளை வெற்றி பெற்ற நாளாகக் கணக்கிடுங்கள். புகைக்கும் ஆர்வம் வந்ததும் இந்தப் பழக்கத்தை நான் ஏற்கனவே நிறுத்தி விட்டேன் என்று உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள். புகைக்க வேண்டும் என்ற உணர்வு வந்ததும் ஒரு டம்ளர் பழச்சாறு பருகலாம்.

சிகரெட் பிடிப்பதற்குப் பதில் வெற்றிலை பாக்குப் போடலாம்; பைப் அல்லது சிகார் புகைக்கலாம். புகையிலை மெல்லலாம் என மாற்று வழிகளை யோசிக்காதீர்கள். இவையெல்லாம் புகைப் பழக்கத்தைப் போலக் கூடுதல் பாதிப்பை உண்டாக்கக் கூடியவையே என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

தொடக்கத்தில் எரிச்சல், மனக்கவலை, எதிலும் தொடர்ந்து கவனம் செலுத்த முடியாத நிலை போன்ற அறிகுறிகள் தோன்றத்தான் செய்யும். இவற்றை எதிர்த்துப் போராடும் மன உறுதி இருந்தால் புகைப் பழக்கத்திலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம்.

## அரபு மொழி தெரிந்தவர்களை யு.எஸ். இராணுவத்தில் சேர்க்கத் திட்டம்

அரபு மொழி தெரிந்தவர்களை இராணுவத்தின் சிறப்புப் பிரிவில் சேர்க்க அமெரிக்க இராணுவம் பரிசீலித்து வருகிறது. இத் திட்டத்திற்கு அமெரிக்க நாடாளுமன்றத்திடம் அனுமதி பெற வேண்டும். அமெரிக்க இராணுவத் தலைமையகம் இதற்கு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை.

பயங்கரவாதத்தை ஒழிக்க அமெரிக்கா தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. பயங்கரவாதிகளில் சிலர் அரபு மொழியில் தகவலைப் பரிமாறிக் கொள்கின்றனர். அரபு மொழி தெரிந்தவர்கள், அமெரிக்க இராணுவத்தில் மிகக் குறைவாகவே உள்ளதால் பயங்கரவாதிகளின் பேச்சை உடனே புரிந்து கொள்ள முடிவதில்லை.

எனவே மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்களை இராணுவத்தில் சேர்ப்பது குறித்து அமெரிக்க இராணுவம் பரிசீலித்து வருகிறது. 1950-ஆம் ஆண்டு சோவியத் நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்க இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். மேற்கு ஐரோப்பிய நாடுகள் மீது சோவியத் யூனியன் படையெடுக்கும் என்று அமெரிக்கா அப்போது கருதியது. சோவியத் நாடுகளில் இருந்து வெளியேறியவர்களை இதற்காக இராணுவத்தில் சேர்த்துக் கொண்டது அமெரிக்கா. ■

## பார்த்த ஞாபகம் இல்லையோ...? 21

### தொகுப்பு:-என்.கே.எஸ்.திருச்செல்வம்



பி.எஸ். ஸ்ரீநிவாசராவ்

தென்னகத்தில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ் பேசும் படம் "ஸ்ரீநிவாச கல்யாணம்". இதில் நடித்தவர் பட்டதாரியான பி.எஸ். ஸ்ரீநிவாசராவ். 1934 இல் வெளியான இப் படத்தில் கதாநாயகன் இவரே.

பி.எஸ். ஸ்ரீநிவாசராவ் சுமார் 50 படங்களில் நடித்துப் புகழ் பெற்றவர். ஹிந்திப் படங்களிலும் கதாநாயகனாக நடித்தவர்.

"ஸ்ரீநிவாச கல்யாணம்" படத்திற்குப் பின் 1937 இல் வெளியான 'மின்னல் கொடி' படத்தில் நடித்து 'ஸ்டண்ட் கிங்' என்ற பட்டத்தைப் பெற்றார். தொடர்ந்து 'பக்கா ரௌடி', 'ராஜாம்பாள்', 'ஞான சௌந்தரி', முதலிய பல படங்களில் நடித்து புகழடைந்தார். வி. சாந்தாராம் இயக்கத்தில் 1935 இல் வெளியான 'சந்திரசேனா' படத்தில் இராமனாகவும் நடித்தார்.

'பதிபக்தி' என்ற தெலுங்குப் படத்திற்கு இசையமைத்து, டைரக்டராகவும் இருந்தார். 1941 இல் வெளியான 'சாந்தா' என்ற படத்தைத் தயாரித்து, இயக்கி, இசையமைத்து முக்கிய பாத்திரத்திலும் நடித்துச் சகலகலா வல்லவராகத் திகழ்ந்தார். 1995 இல் இவர் காலமானார்.



வி.வி. சடகோபன்

ஜெமினியின் முதற் படமாக 1941 இல் வெளியான 'மதனகாமராஜன்' படத்தில் சினிமா உலகிற்கு எஸ்.எஸ். வாசனால் அறிமுகப்படுத்தப்பட்ட அழகான துடிப்புமிக்க அந்த இளைஞனைத் தற்கால சினிமா இரசிகர்கள் அறிந்திருக்க நியாயமில்லைத்தான். ஆனால், இசைத்துறைப் பேரறிஞர் என்று பல இசைக்கலைஞர்களால் அன்றும் சரி இன்றும் சரி போற்றப்பட்டு வரும் அந்த இளைஞர் படத்தில் காணப்படும் வி.வி.சடகோபன்.

இவர் ஒரு பி.ஏ.பட்டதாரி. மேடைகளில் சங்கீதக் கச்சேரிகளும் செய்துள்ளார். தமிழ்ப் படங்களில் இந்தி மெட்டுக்களை பாடி நடிக்க காரணமாயிருந்தவரும் இவரே.

மதனகாமராஜனில் சடகோபன் பாடிய 'பிரேமா பிரேமா' என்ற பாடல் மிகவும் பிரபல்யமான ஒரு பாடல். சடகோபனுக்கு புகழ் தேடித் தந்த படம் 'அதிஸ்டம்' அதன்பின் 'நவயுவன்'. இப் படம் மேல் நாடுகளில் எடுக்கப்பட்டது. படப்பிடிப்புக்காக மேல்நாடு சென்ற முதல் நடிகரும் சடகோபன் தான். பாடக்கூடியவர்கள்தான் சினிமா உலகில் அன்று பிரகாசித்தார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்களில் இவரும் ஒருவர். ■

### கே.ஏ.தங்கவேலு

எம்.ஜி.ஆர். அறிமுகமான 'சதி லீலாவதி' தான் தங்கவேலுவையும் திரையுலகிற்கு அறிமுகப்படுத்திய படம். 1936 இல் வெளியான இந்தப் படத்தில் வில்லனான டி.எஸ். பாலையாவின் அடியாளாக இரண்டு மூன்று கட்டங்களில் நடித்த தங்கவேலுவுக்கு அதன் பின் எந்த வாய்ப்புகளும் கிடைக்கவில்லை. 16 வருடங்களின் பின் 1947 இல் 'சம்சாரம்' என்ற படத்தில் நடித்தார். 1951 இல்தான் தங்கவேலுவுக்கு விடிவு காலம் ஏற்பட்டது. 'மணமகள்' படத்தில் கூர்க்கா வேஷம் கிடைத்தது. அதே ஆண்டில் 'சிங்காரி' படத்தில் 'டணால்' டணால்' என்று பலமுறை சொல்லி 'டணால் தங்கவேலுவானார். 1954இல் வெளியான 'பணம் படுத்தும் பாடு' 'பூலோக ரம்பை' அடுத்த வீட்டுப் பெண் படங்களிலும் கதாநாயகனாக நடித்தார். என்.



எஸ். கிருஷ்ணன்- டி.ஏ.மதுரம் நகைச்சுவை ஜோடிபோல இவருக்கும் ஒரு ஜோடி அமைந்தது தங்கவேலு-எம்.சரோஜா


இந்த நகைச்சுவை ஜோடியை பல படங்கள் பிரபல்யமானவை. எம்.சரோஜாவை நிஜ வாழ்க்கையிலும் ஜோடியாக்கிக் கொண்டார் தங்கவேலு. கல்யாணப் பரிசு, அறிவாளி, அடுத்த வீட்டுப் பெண் ஆகிய படங்களில் தங்கவேலுவின் நகைச்சுவைக் காட்சிகள் இன்றைய இளைஞர்களையும் கவர்ந்துள்ளன. 800 படங்களுக்கு மேல் நடித்த தங்கவேலு 1994 இல் காலமானார். அவரின் இறுதி அஞ்சலிக்கு வந்திருந்த ஜெமினி கணேசனைப் பார்த்தவுடன் எம்.சரோஜா "கல்யாணப் பரிசு மாப்பிள்ளை வந்திருக்காரு. பாருங்க பாருங்க" என்று கதறியழுதாராம். ■

# தகவல் பெட்டி



## இறுதி அஞ்சலி!

யாராவது ஒரு வி.ஐ.பி.யின் மரணச் சடங்கு புகைப்படம் தகவல் பெட்டியில் இடம்பெற்றுள்ளது என்று நினைக்கிறீர்களா? இல்லை. இது ஒருவகையான தொழிற்சங்கப் போராட்டம். அதாவது இலங்கை மின்சார சபையைத் தனியார்மயப்படுத்தும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தினத்தில், அதனை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் செய்த சபை ஊழியர்கள், இலங்கை மின்சாரசபை இன்றோடு சமாதியாகிறது என அர்த்தப்படுத்தும் வகையில் மலர் வளையம் வைத்து மின்சார சபைத் தலைமையகத்துக்கு முன்பாகச் சவப் பெட்டி ஒன்றைத் தீயிட்டு எரித்து தமது வேலைத்தலத்திற்கு இறுதி அஞ்சலி செலுத்துகிறார்கள்.



## சுழலும் பாதம்

தென்கொரியாவின் பூசான் நகரில் ஆசிய மெய்வல்லுனர் போட்டி நடைபெற்று வருகின்றது. சீனாவே அதிக தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளது. குறிப்பாக சீன வீராங்கனைகள் தமது நாட்டின் புகழை நிலை நிறுத்துவதில் குறிப்பிடத் தக்க பங்கு வகித்திருக்கிறார்கள். பெண்களுக்கான ஒருங்கிணைந்த ஜிம்னாஸ்ரிக் போட்டியில் தங்கம் வென்ற சீன வீராங்கனை ஜோங்லிங் கையில் பந்தோடு அந்தரத்தில் சுழன்று சாகசம் புரியும் காட்சி.




## ஞாபகம்

கியூபாவின் தலைநகரமான ஹவானாவிலிருந்து கிழக்காக 185 மைல் தூரத்திலுள்ள சென்ரா கிளாரா என்ற இடத்தில், கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தின் முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் உலகப் புகழ் பெற்ற சுதந்திரப் போராட்ட வீரர் ஏனஸ்டோ சேகுவேராவின் சிலைதான் இது. குழந்தை ஒன்றை சேகுவேரா சுமந்து கொண்டிருப்பது போல அவரது உயரத்திற்கு மிகவும் பொருத்தமாக இந்தச் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. சேகுவேராவின் 35 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு ஹஸ்ரோ சொலானா என்ற கலைஞரால் இந்தச் சிலை வடிவமைக்கப்பட்டது.

## எலுமிச்சை மகத்துவம்

அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் அபூர்வமானதொரு கண்டுபிடிப்புக் குறித்து அறிவித்து இருக்கிறார்கள். மனித உடலில் எய்ட்ஸ் நோய்க் கிருமிகள் தொற்றுவதைத் தடுப்பதற்கு எலுமிச்சைச் சாற்றைப் பயன்படுத்த முடியும் என்று மெல்போன் பல்கலைக் கழகத்தின் உயிரியல் ஆய்வு கூட விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். சாதாரண உணவுக்காகப் பயன்படுத்தப்படும் எலுமிச்சம்பழத்தின் சாற்றில் காணப்படும் ஒருவகை இரசாயனப் பொருளைக் கருத்தடைச் சாதனமாகவும் எய்ட்ஸ் நோய்க் கிருமிகளைக் கொல்லும் தடுப்பாகவும் பயன்படுத்தலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். உடலுறவுக்கு முன்னர் எலுமிச்சம் சாறை பெண்ணின் பிறப்புறுப்பில் பஞ்சு அல்லது ஸ்பொஞ்சில் தொட்டு வைப்பதன் மூலம் கருக்கட்டாமல் இருக்கவும் எச்.ஐ.வி. கிருமி தொற்றாமல் இருக்கவும் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எலுமிச்சைச் சாறு ஆண் உயிரணுக்களின் அசைவைத் தடுத்து நிறுத்தும் என்று கண்டறியப்பட்டுள்ளது.





## ஒத்திகை

ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷுக்கு அமெரிக்க செனட் அங்கீகாரம் வழங்கியுள்ளது. சதாம் உஷைன் என்ன சொன்னாலும், சர்வதேச சமூகம் எப்படித்தான் எதிர்ப்புக் காட்டினாலும் ஈராக்கைத் தாக்கிப் பல்லாயிரக் கணக்கான பொதுமக்களைக் கொன்றேனும் சதாமைப் பதவியிலிருந்து நீக்குவதென உறுதியாக இருக்கும் புஷ் அவரது தாக்குதல் திட்டங்களை ஈராக்கிற்குச் சமீபமாக உள்ள அரபு நாட்டு நிலைகளிலிருந்து மேற்கொள்வதற்கே தயாராகி வருகிறார். அந்த வகையில் மத்திய கிழக்கில் குவைத், கட்டார் ஆகிய நாடுகள் அமெரிக்காவுக்கு மிகவும் நெருக்கமானவை. ஈராக் மீதான தாக்குதலுக்கு முன்னர் குவைத்தில் பாரிய இராணுவ ஒத்திகை ஒன்றில் ஈடுபட அமெரிக்கப் படையினர் தயாராகி வருகின்றனர். அந்த ஒத்திகைக்காக அமெரிக்காவிலிருந்து குவைத் செல்லத் தமது பொதிகள் சகிதம் தயாராகும் அமெரிக்கப் படைவீரர்களே இங்கு காணப்படுகின்றனர். ■

# கலக்க வருகிறது 'மௌனம் பேசியதே'!

சூர்யாவை வைத்து சூப்பர் ஹிட் படமான 'நந்தா'வைத் தந்த அபராஜித் பிலிம்சின் அடுத்த படமான 'மௌனம் பேசியதே' படப்பிடிப்பு முடிவடைந்து நவம்பர் மாத ரிலீசுக்குத் தயாராகிவிட்டது. நடிகர் சூர்யா- அபராஜித் பிலிம்ஸ் இணைந்துள்ள இரண்டாவது படம் இது. சூர்யாவுக்கு ஜோடியாக திரிஷா நடித்துள்ளார். மிக இயல்பான இளம் காதல் கதையாம்.

யுவன் சங்கர் ராஜாவின் இசையில் பிரமாண்டத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது இந்தப் படம். கேசட்டுகள், வரும் அக்டோபர் முதல் வாரத்தில் ரிலீஸ் ஆகும் என்கிறது தயாரிப்பாளர் வட்டாரம். பாடல்கள் படு அசத்தலாக வந்துள்ளதாகத் தெரிகிறது. நியுசிலாந்து, மொரீசியஸ், இத்தாலி, எகிப்து என உலகின் பல பகுதிகளிலும் படமாக்கப்பட்டிருக்கிறது 'மௌனம் பேசியதே'. பாண்டிச்சேரி உட்பட இந்தியாவின் பல பகுதிகளிலும் படப்பிடிப்பு நடந்துள்ளது. இப்போது படத்தின் டப்பிங், ரீ-ரெக்கார்டிங் நடந்து வருகிறது.

படம் நவம்பர் 3 வது வாரத்தில் ரிலீசாகிறது. இதில் நந்தா என்ற புதுமுகத்தையும் அறிமுகப்படுத்தி உள்ளார்கள் இந்த என்.ஆர்.இ.தயாரிப்பாளர்கள். இவர் தவிர இந்தி தேவதாஸில் நடித்த மும்பையைச் சேர்ந்த மாடல் மகா, டான்ஸ் மாஸ்டராக இருந்து நடிகரான அஞ்சு மகேந்திரா ஆகியோரும் நடித்துள்ளனர். இசையமைத்த யுவன் சங்கர் ராஜாவுக்குப் பாடல்களில் மிகத் திருப்தியாம். அந்த அளவுக்குப் பாடல்கள் சூப்பராக வந்துள்ளதாகப் பேசிக் கொள்கிறார்கள்.



சச்சின் தேவ்-ஆனந்தி
படம்: நீ கிடைத்தால் போதும

# அஜித் மயிரிழையில் உயிர் தப்பின...

சென்னையில் நடைபெற்ற கார் ஓட்டப் போட்டியொன்றில் பங்குபற்றிய நடிக... போட்டியின் போது இரு தடவைகள் விபத்தை எதிர்கொண்ட போதும் அதிஷ்ட... எதுமின்றித் தப்பினார். பார்முலா மாருதி எனப்படும் பிஸ்மி ரக பந்தய கார்கள்... கொண்ட நடிகர் அஜித் முதலில் 10 சுற்று ஓட்டம் ஓட்டினார். மொத்தம் 21 கா... கொண்ட இதில் கடைசிவரை ஓட்டி 16-வது நபராக முடித்தார். இதன் 7-வது ... அஜித்தின் காரும், மற்றொரு காரும் ஒன்றையொன்று முந்த முயன்றபோது ... கார் ஓட்டப் பாதையை விட்டுப் புல்தரைக்குள் புகுந்தது. உடனே காரை... திருப்பி ஓட்டத் தூரத்தை முடித்தார். அதேபோல் 15 சுற்றுக் கொண்ட 2-வது ... முதல் சுற்றுத் துவங்கி முதல் வளைவைத் தாண்டி 2-வது வளைவை ... போது 4 கார்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. இதில் நடிகர் அ... காரும் ஒன்றாகும். அதிஷ்டவசமாக அஜித் காயமின்றித் தப்பிவிட்ட போ... அவரது காருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுவிடவே அவர் அப் போட்டி... தொடர்ந்து கலந்து கொள்ள இயலவில்லை.

5 போட்டிகளில் கலந்து கொண்டு இரண்டு முறையும் விபத்தை எதி... கொண்டு காயமின்றித் தப்பிய அஜித் கூறுகையில், "இந்தப் பந்தயப் பாதையை என்னால் மறக்க முடியாது. எனக்கு இரண்டு சக்கர வாகனத்தில் விபத்து ஏற்பட்டதும் இங்குதான். இப்போது நான்கு சக்கர வாகனப் போட்டியில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். திரைப்படங்களில் நடிப்பது எனது தொழிலாக இருந்தாலும் பந்தயங்களில் கலந்து கொள்வது எனது பொழுது போக்காகும். இதைத் தொடர்ந்து இங்கு நடைபெற இருக்கும் அனைத்துக் கார் பந்தயங்களிலும் நான் கலந்து கொள்வேன். வருகிற (அக்டோபர்) 6-ஆம் தேதி ரஷ்யாவில் படப்பிடிப்பு இருக்கிறது. அதையும் ஒத்தி வைத்துவிட்டு இப் போட்டியில் கலந்து கொள்ள இருக்கிறேன்" என்று அவர் கூறினார்.

நடிகர் அஜித்குமார் சென்னையில் நடைபெற்ற கார் ஓட்டப் போட்டியொன்றில் பங்குபற்றி போட்டியின்போது இரு தடவைகள் விபத்தை எதிர்கொண்டபோதும் அதிஷ்டவசமாகக் காயம் எதுமின்றித் தப்பினார்.

# மினி சினி...

★ 'ஜெயா' படத்தில் ரம்யா கிரு... நடிக்கிறார்கள். இரண்டு பேரும் இருந்தும் ... படம் என்று யூனிட்டைச் சேர்ந்தவர்கள் சத்தி... இளம்பெண்ணை புளுபிலிம் எடுத்து வைத்து அவளை மி... டாக்டர். அந்தப் பின்னணியில் உருவாகியுள்ளது இப் படம்.

★ புதுமுகம் முத்துக்குமார் ஹீரோவாக அறிமுகமாகிறார் 'குறிஞ்சி மலர்' ... ஜோடி சேரும் செல்வி பாரதியும் புதுமுகமே. சார்லி, வையாபுரி, லூஸ்மோகன், ... சம்பத்ராஜா உள்ளிட்ட மற்றும் பலரும் நடிக்கின்றனர். கதை: முத்துக்குமார், திரைக்கதை ... வி.ஜி.ராமதாசராஜா, இசை: சம்பத்ராஜா. சூப்பர் ஸ்டார் பிலிம்ஸ் சார்பில் பிரமாண்டமான ... தயாராகிறது.

★ நட்சத்திர நடிகர் என்றும் மாறுவதாக இல்லை. தற்போது தேசித்து வரும் படத்தில் நடிக்கும் ப்ரியமான ... பகல் என்று பாராமல் மூடு வரும் நேரமெல்லாம் கால் அமுக்க அழைக்கிறாராம். தெலுங்குத் திரையுலகில் நடந்த ... சமாளிக்க முடியாமல் ஓடிவந்த நடிகை, இங்கு நடக்கும் வைபவங்களைக் கண்டு ஆண்கள் என்றாலே கோபப்படு...

★ மலமல நடிகையை வைத்து மேனேஜ்மெண்ட் செய்யும் அந்த மேனேஜரின் மனைவி தன் கணவனின் துணைவியாக அவரை ஆக்கிக் கொள்ளச் சொல்கிறாராம். பணம் காய்க்கும் மரம் என்பதால் வளைத்துப் ... தப்பில்லையே?

★ திருப்பதி நடிகையின் மேனேஜர் நடிகை மீது செலுத்தும் அன்பை நன்றாகப் புரிந்து கொண்டு அவ... வகையிலும் உதவியாக இருக்கின்றாராம் நடிகை. கிட்டத்தட்டத் திருமணமாகாமலே குடும்பம் நடத்துகின்... அவருக்கு வேண்டியவர்களே காதுபடப் பேசுகின்றனர்.

★ பாக்யராஜ் இயக்கும் படத்தில் நடிக்கிறது விஜயகாந்த்-சௌந்தர்யா ஜோடி. ஜி.வி.பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் தயாரிக்கும் இப் படத்தின் பெயர் 'சொக்கத் தங்கம்'. குடும்பப் பின்னணிப் படங்களை இயக்கி முத்திரை பதித்த பாக்யராஜ் இயக்கும் இப் படமும் அண்ணன்- தங்கை பாசத்தை மையமாகக் கொண்டது.



சிரஞ்சீவி-சோனாலி பிந்த்ரே
படம்: இந்திரா

## விவகாரமான ரோல்களில் நடிக்க ஆசை

"வழக்கமான காதல் கதைகளில் மரங்களைச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிற ரோல் எனக்குப் பிடிக்கவில்லை. மற்ற நடிகைகள் மாதிரிப் பொம்மையா வந்து போகவும் விருப்பமில்லை. வித்தியாசமான கதைகள், நடிப்பில் புகுந்து விளையாடுற மாதிரி விதம் விதமான ரோல்கள். அது விவகாரமான ரோல்களாக இருந்தாலும் பரவாயில்லை. அப்படித்தான் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்."

இப்படித் தன் ஆசையைச் சொல்பவர் நடிகை பிரபாஷா பாசு. இவருக்கு விவகாரமான ரோல்களில் நடிக்க வாய்ப்புக் கிடைக்கிறதோ இல்லையோ ஹிந்தித் திரைப்பட இயக்குநர் ஒருவருடன் 'விவகாரமான' நெருக்கமாக இருக்கிறார் என்ற செய்தி மட்டும் பொலிவுட்டில் உலவுகிறது.

## "தமிழர் ஒற்றுமையைக் குலைக்கப் பார்க்கிறார் ரஜனி"

### பாரதிராஜா ஆவேசம்

திரையுலகக் கலைஞர்களிடையே பிளவை ஏற்படுத்தி அதன் மூலம் தமிழர்களின் ஒற்றுமையை அழிக்கப் பார்க்கிறார் ரஜனி என்று இயக்குனர் பாரதிராஜா மிகவும் கடுமையாகச் சாடியுள்ளார்.

நடிகர் ரஜனிக்கு எதிராகப் பாரதிராஜா நேரடியாகக் கருத்துத் தெரிவித்திருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத் தக்கது. நடிகர் சங்கத்தில் விஜயகாந்துடன் சேர்ந்து பாரதிராஜா பேட்டியளிக்கையில்,

"காவிரிப் பிரச்சனையில் ரஜனியின் நிலைப்பாடுதான் என்ன? எங்களுக்குள் பிளவை ஏற்படுத்தி அதன் மூலம் தமிழர்களின் ஒற்றுமை உணர்வை அழிக்கப் பார்க்கிறார் அவர்.

தி.மு.க. சார்பு நடிகர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நடிகர் சங்கத்தில் சேரும்போது அவர்களுடைய சார்பு என்ன என்று பாராமல் தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இது தமிழக மக்களுக்காக நடத்தப்படும் போராட்டம். இதில் கலைஞர்களிடையே எந்தக் கருத்து வேறுபாடும், அரசியல் வேறுபாடும் இருக்கத் தேவையில்லை" என்றார் பாரதிராஜா.

## சினி விசிட்

குழந்தை... யைக் கழற்றி... என்று மனை... களைக் கட்டி... றோர்களையு...

5 நட்சத்தி... இணைத்துக் கிச கிச ... இப்படியும் ஒரு இயக்குனர். இ...

ப்ளஸ்டு என்ற பெயரில் வெ... பெண்ணை படப்பிடிப்பின் போ... பெண் அதற்குப் பிறகு ... கிடந்தாராம். வீட்டுக்கு...

மூன்றெழுத்துக் க... நின்று விடுகின்றன. இ... ஆகி தயாரிப்பாளரி...

அலைபாய்ந்த ... படங்கள் ... றார். ... படுத்... கிறா...





விஜய்

# உண்மையைச் சொன்ன நடிகையின் டைரி

தொப்பை நடிகை நடித்து வரும் ஒரு படத்தின் படப்பிடிப்பு அண்மையில் கோவாவில் நடைபெற்றது. இந்த நடிகையிடம் தொடர்ச்சியாக டைரி எழுதும் பழக்கம் உண்டு. ஹோட்டலில் தங்கியிருந்த சமயம் நடிகையுடன் டிஸ்கஷனுக்காக அவரது அறைக்குச் சென்றார் அந்தப் படத்தின் அஸிஸ்டெண்ட் இயக்குனர். டிஸ்கஷன் முடித்து நடிகை அயர்ந்திருந்த சமயம் திருட்டுத்தனமாக அவரது டைரியை வாசித்தார் அந்த உதவி இயக்குனர். வாசிக்க வாசிக்க அதிர்ச்சி. நடிக்க வந்த புதிதில் மட்டுமே பல நடிகைகளுக்குக் கிடைக்கும் 'அந்த' மாதிரியான அனுபவங்கள் பலவற்றை 'வளர்ந்த' பின்னரும் இந்த வருஷத்திலும் அனுபவித்திருக்கிறார் மிஸ். தொப்பை. தன்னை யாரெல்லாம் எப்படியெல்லாம் 'டிஸ்கஷன்' செய்தார்கள் என்று விலாவாரியாகத் தன் டைரியில் குறித்து வைத்திருக்கிறார் நடிகை. தன் பெயரும் அந்த டைரியில் இடம் பெறப் போகிறதே என்ற கவலையைத் தனக்கு நெருக்கமான பலரிடம் கொட்டித் தீர்த்திருக்கிறார் இயக்குனர்.



காயத்ரி ரகுராம் நடனக்குழுவினருடன்

## கம்பியூட்டர் கிரபிக்ஸில் தயாராகும் 'காதல் வைரஸ்'

இதயம், உழவன், காதல் தேசம், காதலர் தினம் ஆகிய படங்களை இயக்கிய கதிர் இப்போது 'காதல் வைரஸ்' என்ற படத்தை உருவாக்கி வருகிறார்.

இந்தப் படத்தில் ஷாலினி- ஷாமிலினியின் சகோதரர் ரிச்சர்டு, கதாநாயகனாக அறிமுகம் ஆகிறார். மாணவராக இருந்து, சினிமா டைரக்டராக உயரும் உயிர்த் துடிப்பான பாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

அவருக்கு ஜோடியாக விஜயகுமார்- மஞ்சுளா தம்பதிகளின் கடைசி மகள் ஸ்ரீதேவி நடித்திருக்கிறார். குழந்தை நட்சத்திரமாகப் பல படங்களில் நடித்த ஸ்ரீதேவி, இந்தப் படத்தின் மூலம் கதாநாயகி ஆகியிருக்கிறார்.

'இந்தப் படத்துக்காக 'சொன்னாலும் கேட்பதில்லை கன்னி மனசு' என்ற பாடல் காட்சி முழுக்க முழுக்க கம்பியூட்டர் கிராபிக்ஸ் படமாக்கப்பட்டிருக்கிறது. மேகக் கூட்டத்திற்குள் கதாநாயகன்- கதாநாயகி ஆடிப் பாடுவது போல், இந்தப் பாடல் காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. இதேபோல், 'வான் நிலா தரும் ஒளி அவள் விழி...' என்ற பாடல் காட்சியும் கம்பியூட்டர் கிராபிக்ஸில் படமாகி இருக்கிறது.

ஏ.ஆர்.ரகுமான் இசை அமைக்க, வாலி பாடல்களை எழுதியிருக்கிறார்.

## மாதுரி தீட்சித் கர்ப்பமாக இருக்கிறார்

மாதுரி தீட்சித் கர்ப்பமாக இருக்கிறாராம். அதனால்தான் புதுப் படங்கள் எதையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை என்று ஒரு பேச்சு இருக்கிறது. அண்மையில் மும்பை பயணத்தை அவர் ரத்துச் செய்ததற்கும் இதுதான் காரணம் என்றும் சொல்கிறார்கள்.

ஆனால், இந்தச் செய்தியை மாதுரி குடும்பத்தினரோ அவரின் கணவன் நேநே குடும்பத்தினரோ உறுதிப் படுத்தவில்லை.

## விக்ரம் ஐஸ்வர்யாராய் முகப்பில்

...வும் ஷெரினும் ...வாசம் இல்லாத ...செய்கிறார்கள். ...கிறாராம் ஒரு

...ல். அவருடன் ... செல்வராஜா, ... அரசு, பாடல்கள்: ...ல்ல இப் படம்

...கையை இரவு ...முறையைச் ...ராம்.

...ண்டாவது ...டுவதில

... எல்லா ... என்று



ஸ்ரீகாந்த்-சினேகா
படம்: ஏப்ரல் மாதத்தில்

## ...தோடு சொல்லுகிறோம்

...தன் வசம் வைத்துக் கொண்டு மனைவி ... இவன் இப்போது ஆடிப்போய் உள்ளார். தனிமையாக்கிவிட்டால் காலில் வந்து விழுந்துவிடுவாள் ... தப்புக்கணக்குப் போட- 12 வருட அந்தப்புர வாழ்வைத் தூக்கி எறிந்துவிட்டு மற்ற ஹீரோக் ... பிடித்து நடிக்க ஆரம்பித்துவிட்டார் நடிகரின் தர்மபத்தினி. "கைவசம் லட்சங்களையும், பெற் ... சேர்த்துக் கொண்டு விட்டாரே" என்று ஆடிப்போய் இருக்கிறார் நடிகர்.

... படத்தை இயக்கி வரும் விநாயக இயக்குனர் அந்தப் படத்தின் நடிகைகளோடு தன்னை ...வேண்டும் என்று எதிர்பார்த்து அந்தமாதிரியான தகவலை வெளியிட்டு வருகிறார். ம்... ...யும் ஒரு விளம்பரம்.

...ரும் படத்தில் நடிக்கும் புதுமுகம் ஹிருத்திக். அப் படத்தில் அறிமுகமாகும் சுஜா என்ற ... திடீரெனக் கட்டிப் பிடித்து உதட்டோடு உதடு வைத்து கிஸ் அடித்துள்ளார். அந்தப் ...ரச்சியில் இரண்டு நாள் படப்பிடிப்பில் கலந்துகொள்ளாமல் அறையிலேயே அடைந்து ...தெரிந்தால் திட்டுவார்கள் எனப் பயந்து போய் இருக்கிறார்.

... நடிகர் நடிக்கும் சில படங்கள் பூஜையோடு நின்று விடுகின்றன. சில படத்தில் ...போது பஸ் படமும், கல்யாணப் படமும் அவரின் சம்பள அளவிற்கு டெபாசிட் ...வயிற்றெரிச்சலோடு படம் ரிலீஸ் ஆகி உள்ளன.

...நடிகர் 100லட்சம் சம்பளம் கேட்டுத் தயாரிப்பாளர்களை வதைத்தார். ...இல்லை. இப்போது அதைக் குறைத்துக் கொண்டு வாய்ப்புக் கேட்கி... ஆனால் புக் செய்ய ஆள்தான் இல்லை. கடைசியில் அறிமுகப் ...ரிடமே போய் நின்று ஒரு படம் எடுக்கச் சொல்லி எடுக் ...

...ர் இயக்குனரான பிரபல ஹீரோவின் தந்தை தற்போது பீல்டு அவுட்டான ...களை வைத்து 'கிஸ்' படத்தை எடுத்து வருகிறார். இதில் நடிக்கும் நடிகர்களை ...படுத்த செக்ஸ் ஜோக் சொல்லி வேடிக்கை காட்டினாராம். இதனால்தான் ... சீன்கள் எடுக்க முடிந்தது என்கிறார். இப்படியும் புரட்சியா?

... தோட்ட பூபதிக்குக் கொடியிடை நடிகையிடம் ஆசை உண்டு. ஆனால் ஜென்டில் ...ாக இருந்து விட்டதில் வாய்ப்புக் கேட்கத் தயங்குகிறார். அதனால்தான் ...விலாவது ரசித்து விடலாம் என்று தெரிந்தவர்களிடம் புலம்புகிறார். ஊறுகாய் ...ாகத்தான் இருக்கும்.



## 'வெற்றி'

ஐ.பி.எஸ். அதிகாரி விஜயகுமார், தன் மகன் வெங்கடேஷ் தன்னைப் போல ஒரு பெரிய போலீஸ் அதிகாரியாக வேண்டுமென்று ஆசைப்பட்டார். போலீஸ் வேலைக்காகக் கல்லூரியில் படிக்கும் வெங்கடேசுக்கு மைக்கேல் ஜாக்சனைப் போல் பிரபல நடனக் கலைஞராக வரவேண்டும் என்று ஆசை. இந்த நிலையில் வெளி நாட்டில் இருந்து இந்தியாவுக்கு வந்த பூமிகா, விஜயகுமார் வீட்டில் தங்கினார். அப்போது வெங்கடேஷ், பூமிகா இருவரிடையே காதல் மலர்ந்தது. இந்த நிலையில் பூமிகாவுக்கு அவர்களது பெற்றோர் வேறு மாப்பிள்ளை பார்த்தனர். இந்த விஷயத்தை அறிந்த வெங்கடேஷ் பேரதிர்ச்சி அடைந்தார்.

இப்படியொரு கதை அம்சத்துடன் தேஜா டாக்கீஸ் பிரமாண்ட அரங்குகளுடன் தயாரித்துள்ள படம் 'வெற்றி'. தெலுங்கில் 'வாசு' என்ற பெயரில் வெளியாகி வெற்றி பெற்ற படமே தமிழில் 'வெற்றி' என்ற பெயரில் உருவாகிறது.

## தாளாத சோகத்தில் ரஜனி

"என்னைப் பற்றித் தவறான செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறார் சிலர். இவையெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களைத் தேர்தலில் சந்திப்பேன்" என்று கூறினார் ரஜனி.

அவர் இதன் மூலம் அரசியலுக்கு வருவது உறுதியாகத் தெரிகிறது.

"காவிரிப் பிரச்சனையைச் சிலர் திசை திருப்ப முயல்கிறார்கள். என்னைப் பற்றித் தவறாகப் பேசுகிறார்கள். இந் நிலையில், ரசிகர்கள் பொறுமை காக்க வேண்டும். நமக்கு இது சோதனைக் காலம். 27 ஆண்டு காலத் திரைப்படப் புகழ், பெயர், மரியாதை எல்லாவற்றையும் ஒரே படத்தில் ரஜனி இழந்துவிட்டார் என்று பேசியுள்ளனர். அப்படிப்பட்ட புகழோ, பெயரோ, மரியாதையோ எனக்குத் தேவையில்லை.

தமிழகத்தில் இருந்தால் கன்னடியன் என்று சொல்கிறார்கள். பெங்களூர் சென்றால் தமிழன் என்கிறார்கள். மகாராஷ்டிரம் சென்றால் மதராஸி என்கிறார்கள். பின் நான் எங்குதான் செல்வேன்? ஏன் எனக்கு இந்த வேதனை? முதலில் நான் ஓர் இந்தியன். பிறகு தமிழன்" என்றார் ரஜனி.

## என் இனியவளே...

நீ செல்லும்
இடம் எல்லாம்...
என் இதயம்
மெத்தை விரித்துள்ளது.
அங்கு நீ நிம்மதியாகத்
தூங்கலாம்.
✻ ✻ ✻
நீ செல்லும்
இடம் எல்லாம்...
என் மனம் கண்ணாடியாக
இருக்கிறது.
அதில் நீ
உன்னைக் காணலாம்.
✻ ✻ ✻
என் கண்களில்
உந்தன் உருவம்...
என் மனதில்
உந்தன் உருவம்...
✻ ✻ ✻
என் மூச்சில்
உந்தன் நாமம்...
எம் வாழ்வில்
கூந்தல் உறவு.

கலாநிதி - உடையார்கட்டு.

## அன்பே..!

பால் இருக்கும்
பசி இல்லை.
சோறு இருக்கும்
சுவை இல்லை.
♥♥
எது இருந்தாலும் - அன்பே
அருகில் -நீ
இருப்பது போல் வருமா?
♥♥
நீ இருந்தாலும் பசி இல்லை.
நீ இல்லை என்றாலும்
பசி இல்லையே - அது ஏன்?

மா. பரராசசிங்கம் (ரவி)
உடையார்கட்டு.

## எனக்குந்தான் அவள் சொந்தக்காரி

இலங்கை...
இவள்,
பூமித்தாயின்
அழகுக் குழந்தை!
❀❀❀
ஆசியா
இவளுக்கு பெரியம்மா!
இந்தியா
இவளுக்கு மூத்தம்மா!
❀❀❀
பாகிஸ்தான்
இவளுக்கு,
பக்கத்து வீட்டுக்காரன்...
மாலை தீவு
மச்சினன் உறவு!
❀❀❀
பிறப்பிலேயே
இவள் அழகென்பதால்
பிரித்தானியா மாமாவும்
தூக்கி வளர்த்ததாக
ஒரு கதையுண்டு...
❀❀❀
பிறகு,
ஒல்லாந்துச் சாச்சா...
போர்த்துக்கல் அண்ணா என்று
எல்லோருந்தான் வளர்த்தார்களாம்...
❀❀❀
இலங்கைக் குமரி
பருவமடைந்தாள்...
பெண்களைப் போலவே
வளர்ச்சியும் அடைந்தாள்!
❀❀❀
ஐரோப்பிய
மச்சான்மார்களுக்கும்
இவள் எழில் மீது
அப்படியொரு ஆசை!
❀❀❀
இவளிடம்
மலைவளமிருந்தது...
பெண்ணொருத்தியின்
மார்பழகு போல!
கலைவளமிருந்தது...
முகவழகினைப் போல!
❀❀❀
குடும்பத்திலேயே
குழப்பம் நடந்தது!
சிங்களப் பெருமகன் சொன்னான்
இவள் எனக்குத்தான் என்று...
இல்லை என்று நின்றான்
தமிழ்க்குடி மகன் வந்து...
❀❀❀
இறுதியில்
சுயம்வரம் நடந்தது!
இராமாயணத்தில்
சீதைக்காக
யுத்த காண்டம் நடந்தது போல்
இவளுக்காகவும்
ஒரு ரத்த காண்டம் நடந்தது!
❀❀❀
இலங்கைக் குமரியும்
ஒரு பெண் அல்லவா?
பார்த்து விட்டுச் சொன்னாள்...
என் ஒருத்திக்காக
இத்தனை பேரும் சாவதா?
❀❀❀
நான்
சிங்களப் பெரு மகனுக்கோ
தமிழ்க் குடி மகனுக்கோ
சொந்தக்காரி அல்ல!
சமாதானத்தை நேசிக்கும்
சந்நியாசிகளுக்கே சொந்தக்காரி!
❀❀❀
இப்போது நானுந்தான்
சமாதானத்தை நேசிக்கின்றேன்
எனக்குந்தான்
அவள் சொந்தக்காரி!

ஷல்மானுல் ஹரீஸ்-
வாழைச்சேனை.

## என்ன நினைத்தாய்?

கண்கள்
கண்களுக்குள் சயனித்திருந்த போது
இதயங்கள் மட்டும்
சத்தமின்றி பேசிக்கொண்டன...
❀❀
நான்
என்னை இழந்த ஏக்கத்திலும
நீ கிடைத்த ஊக்கத்திலும்
இரு வேறு உணர்வுகளில்
இயங்கிக் கொண்டிருந்த போது
இதயத்துடிப்பு ஒவ்வொன்றிலும்
உன் முகம்
ஆழமாய் முத்திரை பதித்தது.
❀❀
முதலிரவுப் பெண்ணாய்- நீ
நாணித்திருந்தபோது
முன்னெப்போதுமில்லாமல்
சந்தோஷமுகிலைப் பிடித்துக்கொண்டு
கற்பனை வானில்
சிறகடித்தேன்!
❀❀
ஏதோ சொல்ல நினைத்து
வார்த்தைகள் இடறியதால்- நீ
நிலம் பார்த்து நடக்க ஆரம்பித்த போது
கொலுசுகள் மட்டும்
டூயட்பாடிக் கொண்டன!
அந்தத் தாளத்துக்கேற்ற
சோகப் பாடலை என் நா உச்சரித்த போது
கண்கள்
கண்ணீருக்கு விடை கொடுத்திருந்தன...

- ஆர். நிர்ஷன், இறக்குவானை.

## வசதியிருந்தால் வா!

நான்கு பக்கங்களில்
நீ அனுப்பியிருந்த
கடிதம் படித்தேன்!
❦❦
என் மீது உனக்கு
விருப்பம் என்றும்
என் விருப்பம் எதுவென்றும்
கேட்டிருந்தாய்.
❦❦
எனை நேசிப்பதற்கு
நீ சொன்ன
காரணங்களினால்
கவலையடைகிறேன்,
❦❦
என்னால் நன்றாகப்
பாடமுடியும் என்பதால்,
என் மீது உனக்கு
பாசம் என்கிறாய்.
❦❦
பாடுகின்ற அதே வாயால்
நாளை கெட்ட
வார்த்தைகளால்
நீ திட்டு வாங்கலாம்
தெரிந்து கொள்!
❦❦
எனது ஓவியங்களின்
அழகைப் பற்றி
அடுக்கடுக்காய்
எழுதியிருந்தாய்!
❦❦
சித்திரம் தீட்டம்
அதே விரல்கள்
உன் சிவந்த
கன்னத்தில்
வக்கிரம் புரியலாம்
புரிந்து கொள்!
❦❦
நான் அணியும் ஆடைகளின்
நேர்த்தி பற்றி
நீ அதிசயப்பட்டாய்.
❦❦
அதில் பாதி
உடைகள்
என் நண்பனுடையவை
என்பதை
அறிந்து கொள்.
❦❦
ஏற்க முடியாத
காரணங்களிற்கெல்லாம்
என்பால் உனை
மாற்றிக் கொண்டது
எதற்காக?
❦❦
இறுதியாக...
என் விருப்பத்தைக்
கேட்டிருந்தாய்.
❦❦
நான்கு பேர்கள்
மத்தியிலே
என் அம்மா
பெருமையாகப் பேசவேணும்
பத்து லட்சம் வேண்டும்.
❦❦
உன்னிடம்
வசதியிருந்தால்
வா!
வாழ்ந்து பார்க்கலாம்!

கே. ஆர். றஜீவன், வவுனியா.

## பேனா நண்பர்கள்



பெயர்:
எம்.ஜெயகணேஷ்
வயது: --
முகவரி: இல.84,
காந்தி நகர்,
திரு மலை.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:எஸ்.ரூபி
வயது: 19
முகவரி: சர்வதேச
தொலை தொடர்பகம்
அருகாமை,கிளிநொச்சி
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்: த.ராஜயுகன்
வயது: 18
முகவரி:
மகிழவட்டவான்,
ஆயித்தியமலை,
செங்கலடி.
பொழுது போக்கு:
வானொலி, கிரிக்கெட்.

## தேன் கிண்ணம்

## இறுதிப் பயணம்

இறுதி ஊர்வலம்...
எனைப் பிரியமறுக்கும்
உயிர்கள்...
❀❀
'நோட்டீஸ்' இல்- மட்டும்
இடம்பிடித்த சில
உறவுத்தூண்கள்...
❀❀
சீட்டாட்டம்
தேடிக் கொடுத்த
சீட்டுச் சினேகங்கள்...
❀❀
அடிக்கடி
பயம் காட்டும்
அர்ச்சனைகள்...
❀❀
நெற்றிவரை
முடி மறைத்த
வாய்க்கரிசி...
❀❀
நிமிரமுடியா
நியதியாய்- ஒரு
நிறையான
நெஞ்சாங்கட்டை...
❀❀
என்னால்- என்
தெருவும்
தேடிக்கொண்ட
துயரவெள்ளை...
❀❀
எரித்தலில்
எம்பிபிஎஸ் பட்டம்
பெற்ற ஒரு
வெட்டியான்...
❀❀
கண்ணீராய்
அழுதுமிழும்-ஆயிரம்
கண்கள்...
❀❀
என் மகன்
எனக்கு வழிகாட்ட
என் பயணம்...
❀❀
இறுதியான...

- ஞானக்கிறுக்கன்,
மட்டக்களப்பு.

## கவிதை உன்னோடு கைகோர்த்து நடக்கும்

புல்லாங்குழலிசையில் மயங்கிப் போ!
❀❀
மனங்களில் இறங்கி-
இதயங்களை ஈரப்படுத்து!
❀❀
நதிகளில் நட!
❀❀
வெண்ணிலவு பார்த்து சந்தோஷி!
அமாவாசைக்கு அழு!
❀❀
ரோஜாவைக் காதலி!
❀❀
தென்றலோடு ப்ரியமாயிரு!
மழையைக் கூட நேசி!
❀❀
கொள்கைக்கு சிறகு கொடு!
❀❀
நட்புக்கு விட்டுக் கொடு!
வெற்றிக்கு கையைக் கொடு!
❀❀
நண்பனின் கண்ணீரில் நீயும் துளியாகு!
தலை தடவி கண்ணீர் துடை!
❀❀
கவிதை உன்னோடு-
கைகோர்த்து நடக்கும்.

- நிககொல்ல ரிஸ்னா.

## நினைத்து, நினைத்து சிரிக்க

**ஒரு** அரசியல்வாதி ஒரு கூட்டத்தில் பேச ஆரம்பித்தார். பேசினார். பேசினார். பேசிக்கொண்டே இருந்தார். ரொம்ப நேரத்துக்குப் பின்னால் "நான் ரொம்ப நேரம் பேசிட்டேன்னு நினைக்கிறேன். சாரி என்கிட்ட வாட்ச் இல்லை. அதனாலதான் நேரம் போனதே தெரியலை"என்று சொல்லி முடிக்க கூட்டத்தில் இருந்த ஒருத்தர் "யோவ் வாட்ச் இல்லைன்னா என்ன? உன் பின்னால கலண்டர் இருக்கே. அதைப் பார்த்திருக்கலாமல்ல"என்று கத்தினாராம்.

**ஒரு** புருஷன் பக்கத்து ஊர் சந்தைக்குப் போய் நாலு கழுதைகள் வாங்கினார். ஒரு கழுதை மேல ஏறி உட்கார்ந்துட்டு ஊருக்குத் திரும்பினார். வரும் வழியில் கழுதைகளை எண்ணிப் பார்த்தப்ப தான் உட்கார்ந்திருந்த கழுதையை எண்ணாம மத்த மூன்று கழுதைகளை மட்டும் எண்ணிப் பார்த்து "இன்னொரு கழுதை என்னாச்சு?"ன்னு குழம்பிட்டாரு. யோசித்தபடி வீடு வந்தவர் வாசலிலிருந்த தன் சம்சாரதுக்கிட்ட "நீ சொன்ன மாதிரி நாலு கழுதைகள் வாங்கினேன். ஆனா வர்ற வழியில என்னாச்சுன்னு தெரியலை. இப்போ மூணுதான் இருக்கு"ன்னு புலம்பினாரு.

உடனே அவர் சம்சாரம், "அடடே, என்ன ஆச்சரியம்! என் கண்ணுக்கு மட்டும் அஞ்சு கழுதைகள் தெரியுதே. அதுலயும் இந்த அஞ்சாவது கழுதை தான் தண்டக் கழுதைன்னு" ஒண்ணு வச்சாங்களாம்.

**ச**ர்வர் வேலை செய்திட்டிருந்த கணவன் திடீர்னு இறந்துட்டான். மனைவி சோகமாக உட்கார்ந்திருந்தாங்க.

மந்திரவாதிகள் மூலமா உன்னோட கணவனோட ஆவிகிட்ட பேசலாம்னு சிலர் யோசனை சொன்னாங்க.

மனைவியும் பல மந்திரவாதிகளை கூப்பிட்டு பல வழிகளில் முயற்சி செஞ்சாங்க.

ஆனா கணவனோட பேச முடியலை. சலிப்போட அழுதபடி இருந்தப்ப ஒருத்தன் அவங்ககிட்ட வந்து

"உன் கணவன் தன் வாழ்நாளின் பெரும்பகுதி நேரத்தை எங்கே செலவிட்டானோ அங்கிருந்து அவனுடைய ஆவியுடன் பேச முயன்றால் வெற்றி கிடைக்கும்"னு யோசனை சொன்னான்.

சரின்னு மனைவி தன்னோட கணவன் வேலை செய்த ஒட்டலுக்கு போய் ஒரு டேபிள்ல உடகார்ந்தாங்க. கண்களை மூடி கணவனை கூப்பிட்டாங்க. திடீர்னு.

"நான்தான் உன் கணவன் வந்திருக்கேன்"னு அவனோட மெல்லிய குரல் கேட்டது.

உடனே இவங்க "அன்பே! கொஞ்சம் சத்தமாக பேசுங்கள்"னு சொல்ல

"ம்ஹூம்...முடியாது"ன்னு பதில் வந்தது.

"சரி, கொஞ்சம் பக்கத்தில் வந்து பேசுங்கள்"னு இவங்க கெஞ்ச

"ம்ஹூம்....முடியாது"ன்னு அதே பதில் வந்தது.

"ஏன்?"ன்னு இவங்க பரிதாபமா கேட்க.

"நீ உட்கார்நதிருப்பது என்னுடைய டேபிள் இல்லே"ன்னுதாம் கணவனுடைய ஆவி!

## கவிதை நெஞ்சங்களுக்கு!

பாரதியின் தடத்தில் தமிழ்க் கவிதையின் அடுத்த பரிணாமத்தைக் காட்டிய முக்கிய இரு கவிஞர்கள் நம் நாட்டைச் சேர்ந்த மகாகவியும், நீலாவணனும் யாப்புக்குள் கவிதையை இலகுபடுத்தியதும்,சொல்ல முடியாது என்று கருதியவற்றைக் கவிதைக்குள் சொல்லும் படியாக்கியதுமான நவகவிதைப் போக்கின் பிதாமகர்களாக முக்கியத்துவம் பெறுகிறார்கள்.

கிழக்கிலங்கையைச் சேர்ந்த நீலாவணன் (1931-1975) அவர்களது மூன்று கவிதைகளை *இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாகத் தருகிறோம்.*

### விளக்கு

வீடிருண்டு கிடக்கிறது- விளக்கேற்றல் வேண்டும்;
வெளியேபோய் வெகுநேரம் தாமதமாய் மீண்டேன்!
காடுகளின் ஊடேஓர் காடாகி வீடும்
காட்சிதரும் மையிருட்டு! கள்வர்கள்- பேய் -பாம்பு!
ஒடோடித் திரும்புகிறேன்; ஓர்துணையும் இல்லை!
உள்ளிருந்து பேசுவதும் யார்? உற்றுக் கேட்டேன்...

வீடிருண்டு கிடக்கிறது- விளக்கேற்றல் வேண்டும்;
வெளியேபோய் வெகுநேரம் தாமதமாய் மீண்டேன்!

காலமெனும் கருங்கிழவன் காத்திருந்தான்; எண்ணெய்
கலங்களிலே கலன்கலனாய் நிறைந்திருந்த துண்மை!
கோலஎழில் விளக்குகளும் குறைவில்லை! குச்சி
குறையாத தீப்பெட்டி மூலையிலே தூங்கும்!
மூளவில்லை- விளக்கெரிய முடியவில்லை! உள்ளே
மூதேவி அரசுசெய்ய முயல்கின்றாள்! வல்லே...

வீடிருண்டு கிடக்கிறது- விளக்கேற்றல் வேண்டும்;
வெளியேபோய் வெகுநேரம் தாமதமாய் மீண்டேன்!

எண்ணெய்விளக் காய்விடுமா? எண்ணெயைவிட் டெரிக்கும்
ஏனந்தான் விளக்காமோ? எரிகின்ற திரியா?
மின்னிஇரைந் தேபுகைந்து எரியுந்தீக் குச்சி
விளக்காமோ? விளக்கென்னில் மேற்குறித்த யாவும்
ஒன்றுகுறை யாமலுள்ளே உள்ளனவே! ஏனும்
உள்ளுக்குள் ஒளியில்லை! வழிதெரிய வில்லை!

வீடிருண்டு கிடக்கிறது- விளக்கேற்றல் வேண்டும்;
வெளியேபோய் வெகுநேரம் தாமதமாய் மீண்டேன்!

இருட்டில்மெய்ப் பையின்பை துழாவுகிறேன்; சாவி
எடுத்தில்லின் தலைவாசல் கதவுதிறக் கின்றேன்!
திருட்டொன்றும் போகவில்லை! உள்ளறையும் திறந்து
தீப்பெட்டி எடுத்ததனைக் கிழித்து விளக்கேற்றித்
தெருப்பக்கச் சன்னல்களைத் திறந்துவைத்தேன்! தனியே
திருடர்பிற பயமின்றித் தெம்பொடிருக் கின்றேன்!

வீடிருண்டு கிடக்கவில்லை- விளக்கேற்றி விட்டேன்
வீதியிலே போவார்க்கும் ஒளிவிழுதல் கண்டேன்!



## சிறப்புக் கவிதை

### எட்டாதிரு!

உன்னையே நானாய் உருவகித்து,
ஊரிலுளார் கண்ணில் தெரியாமல்,
கண்ணீர் சொரிந்ததெல்லாம்
பெண்ணே! அறிந்தனையோ?
பேராச் சரியமிதே!

என்னையே நீயாக,
எப்பொழுதோ உன் உள்ளில்
கற்பனைகள் பண்ணிக்
களவாய் மகிழ்ந்தாயா?

உற்பவித்த இல்லில்
ஒளியேற்றி... அவ்வொளியில்
நிற்கையில்- உன் கண்ணில்
நெளியும் சுபசகுனம் அற்பதந்தான்!
வாழ்வோர் அதிசயந்தான்!
அப்படியே...
எட்டாத ஒன்றாய் இரு.

### ஆவதோ?

என்றன் நெஞ்சிடை நின்றுதிர் கின்றதாம்
இனிமை யென்ப திலாத வரண்டபா
என்று கேட்குமென் றேங்கும் செவிகளும்
என்னையே எதிர் நோக்கும் விழிகளும்
ஒன்றை யேனும் பிறர்அறி யாவணம்
ஒது மௌன மொழியின் பொருள்களும்
கண்டு கண்டுனைக் காதல் கயிற்றிலே
கட்டி, என்னையும் கூடப் பிணித்தனன்.

எப்பஉ யிதை நண்பர் அறியவும்
இயலும்? எங்கள் இரகசியக் காதலை
ஒப்பினேன். இதைக் கேட்டு நகைத்தனர்!
ஒருவன், "உன்னையோர் ஊமையென் றோதினான்
அப்பப்பா அவள் கண்கள் இரண்டுமே
அவிந்து போனவை" என்கிறான் மற்றவன்
செப்புவா னங்கு வந்தமுன் றாமவன்
"செவிடி யாவுன் சினேகிதி?" என்றெலாம்

கண்ணிழந்த குருடியென் றாலுமென்
கவிதை கேட்டு மகிழ விதியிலா
துன்செவிப் பறை ஓட்டைக ளாயினும்
உருகி வாழ்த்திட நாவிலை யாயினும்
என்னவோ உனைக் காணும் பொழுதிலே
இனிய தான கனவுகள் காண்கிறேன்.
உண்மை யெப்படி யாயினும் ஆகுக
உனை மறப்பதென் றாவதும் ஆவதோ?

லேடீஸ் ஸ்பெஷல்

## குழந்தைகள் முன் சண்டை போட்டலாமா?

கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் போது சண்டை சச்சரவுகள் வருவது சகஜம். ஆனால் அடிக்கடி சண்டை போட்டு அதுவும் குழந்தைகள் எதிரில் சண்டை போட்டு குழப்பம் செய்வது கூடாது. இது குழந்தைகளின் மனநலனைப் பாதிக்கும்.

பெற்றோருக்கிடையில் ஏற்படும் மோதல்களைக் குழந்தைகள் சீக்கிரம் புரிந்து கொள்ளும். அப்பா அம்மா சண்டை போட்டால் தனக்குத் தண்டனை தப்பாது என்ற அச்ச உணர்வு குழந்தையிடம் ஏற்பட்டு விடும். யார் அதிக தண்டனை தருகிறார்களோ அவர்கள் மீது ஒரு வித வெறுப்பு ஏற்பட ஆரம்பிக்கும். அல்லது அடிக்குப் பயந்தே அவருடன் ஒட்டிக் கொண்டு தப்பிக்கப் பார்க்கும். இத்தகைய தன்மைகள் பிற்காலத்தில் பெருமளவில் பாதிப்பை உண்டாக்கி விடும்.

இந்த விடயத்தில் தந்தையை விடத் தாயக்கு அதிக பங்கிருக்கிறது.

சண்டை ஏன்? என்று உங்களுக்குள் கேட்டுக் கொள்ளுங்கள். சண்டையின் மூலம் உங்கள் கணவருக்குத் தண்டனை வழங்கப் போகிறீர்களா? இல்லையே...

உங்கள் கணவரை பழிவாங்கப் போகிறீர்களா? இல்லையே... உங்கள் உணர்ச்சிகளை, கருத்துக்களை, உணர்வுகளை அவரிடம் தெரிவிக்கிறீர்கள். அவர் ஒப்புக் கொள்ளாத பட்சத்தில் அழுத்தமாக உங்கள் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறீர்கள். அவ்வளவுதானே... சண்டை முடிந்த பின்னர் வெற்றி தோல்வி யாருக்கு என்று நீங்கள் எதிர்பார்க்கப் போவதில்லை. ஒரு வாரம் பேசாமல் இருக்கலாம். அப்புறம்...?

சண்டையின் போது கணவனின் பேச்சு, உணர்வு, உணர்ச்சி இவற்றைத் தெரிந்து கொள்வது தவறில்லை. சண்டையின் போது இருவரின் உணர்வுகளும், கருத்துக்களும் வெளிப்படுவதால் சண்டைக்குப் பிறகு ஒருவரை ஒருவர் அனுசரித்துப் போக முடியும்.

இந்தச் சண்டை சாதாரணமானதுதான். இதனால் குழந்தை எந்தவிதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்று விரும்பும் அம்மாவா நீங்கள்?

எதிர்காலத்தில் குழந்தை நன்றாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவரா நீங்கள்? அப்படியானால்....

சண்டைக்குப் பிறகு குழந்தையைக் கட்டிக் கொண்டு அழுவது, ஆர்ப்பாட்டம் செய்வது, "சனியனே, நீ இல்லாவிட்டால் நான் எங்காவது செத்து ஒழிவேன்... உன்னால்தான் இப்படி ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் கேட்டுக் கொண்டு இருக்க வேண்டியிருக்கிறது" என்று சொல்வது, அப்படியில்லாவிட்டால் "நீ தான் என் வாழ்க்கை. நீ இல்லாவிட்டால் என்னால் இருக்க முடியாது. நீ மட்டும் இல்லாவிட்டால் இந்த மூதேவியை (அப்பாவை) பிரிந்து போயிருப்பேன்" என்பது போன்ற வீர வசனங்களை எடுத்து விடாதீர்கள்.

உங்களுக்கு இடையேயுள்ள சண்டையைக் குழந்தையிடம் எடுத்துச் சொல்லி, அவனை-அவளை அப்பாவுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தாதீர்கள். குழந்தையை ஒரு தடுப்புச் சுவராகவும் பயன்படுத்த நினைக்காதீர்கள்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் குழந்தையின் முன்பு கணவரை மட்டம் தட்டாதீர்கள். குறை சொல்லியோ, தாக்கியோ பேசாதீர்கள்.

அப்படிச் செய்தால் எதிர்காலத்தில் ஒரு வில்லனை உங்கள் வீட்டிலேயே உருவாக்குகிறீர்கள் என்பது பொருள். இதற்கு மாறாக, குழந்தைக்குத் தெரியாமல் சண்டை போடுவது, சண்டை குழந்தைக்கு தெரிய வந்தால் அது ஒன்றும் பெரிய சமாச்சாரமில்லை என்பதைத் தெளிய வைப்பது... இதைச் செய்தால் நீங்கள் ஒரு நல்லவனை, பண்புள்ளவனை வளர்க்கிறீர்கள் என்பது பொருள். எதைச் செய்யப் போகிறீர்கள்?




செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர் தரமான சல்வார்களுக்கு தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் A0

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................

உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26-10-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



இந்த வாரம் யாருக்கு சல்வார்? வத்தளை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

செல்வி சௌம்யா தயாபரன்
274/11, வலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# தந்தை செல்வாவின் பேத்தி சினிமா நடிகையாகிறார்

**தந்தை செல்வாவினதும் இரும்பு மனிதர் என அழைக்கப்பட்ட ஈ.எம்.வி. நாகநாதனினதும் பேத்தி பூங்கோதை மொடலிங் செய்து தற்போது சினிமா நடிகையாக 'முன்னேறி' இருக்கிறார். எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மகன் சந்திரகாசனின் புதல்வியான பூங்கோதை தனது குடும்ப பெயர் விபரங்களை மட்டும் மறைத்து தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி இங்கே நன்றியுடன் தரப்படுகிறது.**





பளீர் சிரிப்பு... குறும்பு பேசும் கண்கள்.... விண் மீன்கள் கொஞ்சிக் கொள்வது மாதிரி துரு துரு வென்ற கண்கள், சுத்தமான தமிழ்ப் பேச்சு, கொழும்பில் பிறந்து சென்னையில் வளர்ந்த இலங்கைப் பெண், பி.சி. ஸ்ரீராம் இயக்கும் 'வானம் வசப்படும்' படத்தின் கதாநாயகி பூங்கோதை. அடடா, நல்ல தமிழ்ப் பெயருடன் ஒரு நாயகியா?

"என்னோட நிஜப் பெயரே பூங்கோதைதான். பிறந்தது கொழும்பில்தான் என்றாலும், மூன்று வயதிலேயே சென்னையில் செட்டில் ஆகிவிட்டோம். அப்பா கிரிமினல் லாயராக இருக்கிறார். அம்மா, உலகளவிலான பிரச்சனைகளுக்கு வாதாடும் இண்டர்நேஷனல் வக்கீலாக இருக்கிறார். அண்ணனும் வக்கீல்தான். குடும்பமே சட்டப் புத்தகத்துடன் வாழும்போது நானும் அக்காவும் மட்டும் விதிவிலக்காக இருக்கிறோம். ஆர்க்கிடெக்ட் படிப்பை அக்கா நியூயார்க்கில் படித்துக் கொண்டிருக்கிறாள். எத்திராஜ் கல்லூரியில் படிப்பை முடித்த நான் இப்போது 'மாஸ் கம்யூனிகேஷன்' படித்துக் கொண்டிருக்கிறேன்.

சின்ன வயதிலிருந்தே கிரியேட்டிவிட்டியில் நிறைய ஆர்வம். மியூசிக் அகாடமியில் நாடகம் கூட போட்டிருக்கிறேன். டிஸ்கவரி சேனலுக்காக அமெரிக்காவில் ப்ரோகிராமெல்லாம் நடத்தி இருக்கிறேன். நிறைய மாடலிங் செய்திருக்கிறேன். அதனால் கேமரா பயம் இல்லை. ஆனாலும் பி.சி. சார் "என் படத்தில் ஹீரோயினா நடிக்கிறியா?"ன்னு கேட்டபோது, ஏதோ ஒரு சின்ன பயம் மனசுக்குள் எட்டிப் பார்த்தது. வயிற்றுக்குள் பட்டாம் பூச்சி படபடத்தது. அவர் சொன்ன கதையும் எனக்கு ரொம்பப் பிடிச்சது. நவீன கேமரா, அதை இயக்கும் பெரிய ஒளிப்பதிவாளர்- இதெல்லாம் இருப்பதால் கண்ணை மூடிட்டு ஒப்புகிட்டேன். நடிப்புக்கு நடிப்பு. படிப்புக்கு படிப்பு. ஸோ, சின்னக் குழந்தை மாதிரி அடம் பிடித்து வீட்டில் அனுமதியும் வாங்கிவிட்டேன்.

பி.சி. சாரோடு ஒர்க் பண்ணுவதே அலாவதியான அனுபவம் தான். நுணுக்கமான விஷயங்கள் எவ்வளவோ சொல்லித் தருகிறார். கூடவே நாசர், ரேவதியெல்லாம் இருக்கிறார்கள். எனக்கென்ன கவலை? என்னைப் பொறுத்தவரை பெஸ்ட் ஃப்ரெண்ட்ஸ் என்று சொன்னால் தெருவில் போகும் நாய், பூனைகள் தான். சமூக சேவையிலும் எனக்கு எக்கச்சக்கமான ஆர்வம் இருக்கு. இலங்கை அகதிகள் பற்றி டாக்குமெண்ட்ரி தயாரிச்சிருக்கேன். பொழுதுபோக்கு புத்தகம் படிப்பதுதான். அப்புறம், குடும்பத்தோடு உலக விஷயங்களைப் பேசுவோம். வீட்டில் கட்டாயம் தமிழ்தான் பேச வேண்டும். இங்கே என்னடான்னா, சின்னஞ் சிறிய பிள்ளை கூட ஆங்கிலம் பேசுது.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்த ஒரு படம் மட்டும்தான் நடிப்பேன். அப்புறம் 'ஹார்வர்ட்' பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி. முடிக்கப் போகிறேன் அதன் பிறகு கேமராவிற்குப் பின்னாலிருந்து பெண்களுக்காக நிறையச் செய்ய வேண்டுமென்கிற எண்ணமிருக்கு.

எனக்கு இந்தக் காதல், ஜொள்ளு இதிலெல்லாம் கொஞ்சம் கூட நம்பிக்கையில்லை. இதெல்லாம் அர்த்தமிழந்து போய்க் கிடக்கிறது. வீட்டார் பார்க்கும் பையனைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன். என்ன.... நிச்சய தார்த்தத்திற்கும், மேரேஜுக்கும் இடையே அதிக இடைவெளி வைக்கச் சொல்லி, அவரைக் காதலித்து 'உட்பி' ஆக்கிக் கொள்வேன்" 'பளீ'ரென்று சொல்கிறார் பூங்கோதை.

## வன்முறை என்ற சாபம் எத்தனை பேரைக் கொல்கிறது?

உலகம் முழுவதிலும் ஆண்டு தோறும் வன்முறையினால் 16 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். ஒரு நிமிடத்துக்கு ஒரு கொலை நடக்கிறது. 40 வினாடிகளுக்கு ஒரு தற்கொலை நடக்கிறது என்று உலக சுகாதார அமைப்பு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இது தவிர பாலியல் குற்றங்கள், மகப்பேறு உட்படப் பல்வேறு காரணங்களால் இலட்சக் கணக்கானோர் காயமடைகின்றனர்.

வன்முறையால் இறப்போர் குறித்து ஒருங்கிணைந்த ஆய்வு நடத்தப்பட்டது. இதில், 15 முதல் 44 வயதுள்ள பலர் வன்முறையால் இறந்துள்ளது தெரியவந்துள்ளது. இதில் ஆண்கள் 14 சதவீதமும் பெண்கள் 7 சதவீதமும் அடங்குவர்.

நாளொன்றுக்குச் சராசரியாக 1424 பேர் மனிதராலேயே கொல்லப்படுகின்றனர். இராணுவ மோதல்கள் மூலம் நாளொன்றுக்கு 35 பேர் சராசரியாகக் கொல்லப்படுகின்றனர்.

20- வது நூற்றாண்டில் மட்டும் 19.10 கோடி பேர் போரில் உயிரிழந்துள்ளனர். இதில் பாதிக்கும் மேற்பட்டோர் சிவிலியன்கள்.

வன்முறையால் காயமுற்றவர்களுக்கான சிகிச்சைக்காக மட்டும் சில நாடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வருவாயில் 5 சதவீதம் செலவிடப்படுகிறது என ஆய்வு தெரிவிக்கிறது.

வன்முறையை ஒழிக்க, பள்ளிப் பருவத்துக்கு முன்பு குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் பெற்றோருக்கு சமூக மேம்பாட்டுத் திட்டங்களை விளக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு ஆலோசனை கூறியுள்ளது.

போர் மற்றும் வன்முறையில் பலர் உயிரிழக்கின்றனர். ஆனால், அதைவிட முக்கியம் இளைஞர்களிடையே ஏற்படும் மோதல், குழந்தைகள் மற்றும் பெரியோர் மீது குடும்பத்தில் இழைக்கப்படும் கொடுமை, உயிர் நண்பர்களிடையே ஏற்படும் மோதல் மற்றும் பாலியல் வன்முறையால் பலர் உயிரிழப்பது கவலையளிப்பதாக உள்ளது என்று உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் ஜெனரல் டாக்டர் குரோஹர்லெம் கூறினார்.



ஆற்றங் கரையதனில் முன்னமொருநாள் -எனை
அழைத்துத் தனியிடத்தில் பேசிய தெல்லாம்
தூற்றி நகர்முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்.

சுப்பிரமணிய பாரதியார்-



## பாப்பா முரசு சிறுகதை

# யார் காட்டுராஜா?

கானகச்சோலை என்ற ஒரு பெரும் காடு.மனித நடமாட்டம் இல்லாமல் பசுமையாக இருந்தது. மரங்களைத் திருட்டுத்தனமாக வெட்டும் கொடியவர்கள் அங்கு இல்லை. மிருகங்களை வேட்டையாடும் தீயவர்கள் கிடையாது. எனவே மிருகங்கள் சுதந்திரமாகப் பயமின்றி வாழ்ந்தன.

ஆனால், இந்த அமைதியான சூழ்நிலை அதிக காலம் நிலைத்து நிற்கவில்லை. கானகச் சோலைக் காட்டுக்குச் சோதனை உருவானது. அந்தச் சோதனை புலி, சிங்கம் உருவில் வந்தது. எங்கிருந்தோ ஒரு புலியும், ஒரு சிங்கமும் வந்தன. இந்தக் கொடிய மிருகங்கள் காட்டின் அமைதியைக் குலைத்தன.

புலி காட்டின் ஒரு பகுதிக்குச் சென்று ஒரு குகையில் பதுங்கியது. சிங்கம் வேறொரு பகுதிக்குச் சென்று தங்கியது. அங்கு ஏகப்பட்ட மிருகங்களைக் கண்டு மிகவும் சந்தோசப்பட்டது புலி. இனி உணவுக்குப் பஞ்சமே இல்லை. சிங்கமும் இதைத்தான் நினைத்தது. இனிமேல் விரும்பியவாறு சாப்பிடலாம். யாரும் தட்டிக் கேட்பதற்கு இல்லை என்று சந்தோஷப்பட்டது.

காட்டிலுள்ள மிருகங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே இருந்தது. இதனால் மிருகங்கள் அமைதி இழந்து காணப்பட்டன. எங்கும் இதே பேச்சுத்தான். இரண்டு மிருகங்கள் சந்தித்துக் கொண்டால் புலி- சிங்கத்தின் கொடுமைகளைப் பற்றிய பேச்சுத்தான். மிருகங்கள் பயத்தால் வெளியே தலைகாட்டவே தயக்கம் காட்டின.

மிருகங்கள் குகைப் பக்கம் வராததால் புலியும், சிங்கமும் மிருகங்களைத் தேடிச் செல்லத் தொடங்கின. புலியையும், சிங்கத்தையும் எங்காவது பார்த்தால் மிருகங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தலை தெறிக்க ஓடிவிடும்.

கானகச்சோலைக் காடு அமைதி இழந்து காட்சியளித்தது. மிருகங்கள் அனைத்தும் தலைமறைவாக வாழ்ந்தன.

ஒருநாள் மறைவான பாறை மீது சோகமாக உட்கார்ந்து இருந்தது ஒரு நரி. பக்கத்தில் ஒரு சலசலப்பு. நரி பயந்து நடுங்கியது. புலியோ, சிங்கமோதான் என்று நினைத்த நரியால் மூச்சு விடக்கூட முடியவில்லை.

பயத்தால் உறைந்து போன நரி அங்கு வந்த குரங்கைப் பார்த்து நிம்மதிப் பெருமூச்சு விட்டது. "அடடே...நீதானா? நான் பயந்தே போயிட்டேன்." என்றது நரி. "புலிக்கும், சிங்கத்துக்கும் பயந்து வெளியே வராமல் இருந்தேன். ஆனால், இன்னிக்கு எப்படியாவது உன்னைப் பார்த்தாக வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஓடி வந்தேன்" என்றது குரங்கு. இருவரும் அமைதியை இழந்த காட்டைப் பற்றியே பேசிக்கொண்டனர்.

"இதற்கு என்ன வழி? இப்படியே போனால் மிருகங்கள் அனைத்தும் புலி, சிங்கத்தின் வயிற்றுக்குள் சென்றுவிடும்." என்று நரி சொன்னபோது குரங்கு கவலையுடன் அதைப் பார்த்துக் கொண்டே இருந்தது.

"எனக்கு ஒரு யோசனை. நீ என்னுடன் நின்றால் இந்தக் காட்டில் மீண்டும் அமைதியை ஏற்படுத்த முடியும்," என்று நம்பிக்கையுடன் சொன்னது நரி. "என் உயிர் போனாலும் பரவாயில்லை. காட்டு மிருகங்களின் நலனுக்காகப் பாடுபடுவேன்." என்று குரங்கு சொன்னபோது நரிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

நரியும், குரங்கும் ஒரு திட்டம் தீட்டின.

திட்டத்தின் முதற் கட்டமாக, இறந்த மான் ஒன்றின் இறைச்சியை இரண்டு பங்காக வைத்தது நரி.

பிறகு ஒரு பங்கை காட்டில் மறைத்து வைத்துவிட்டு மற்றப் பங்குடன் புலியின் குகையை நோக்கி நடந்தன இரு விலங்குகளும். "நமது திட்டம் தோற்றுப் போனால் புலி நமது உயிரைப் பறித்து விடும் என்பதில் சந்தேகம் வேண்டாம்," என்று நரி சொன்ன போது குரங்கின் உடம்பில் லேசான நடுக்கம்!

இரண்டும் இறைச்சியுடன் நடந்தன. சிறிது தூரம் சென்றபோது புலியின் குகை தெரிந்தது. குரங்கின் நடுக்கம் அதிகரித்தது.

குகை வாயிலில், நரியையும், குரங்கையும் கண்ட புலி உறுமியது. நாக்கால் முகத்தைத் துடைத்தது. "புலி அண்ணே, உங்கள் நலமறிய வந்திருக்கிறேன். முதலில் இந்த இறைச்சியைச் சாப்பிடுங்கள்," என்றது நரி. புலி பசியுடன் பார்த்தது.

"நாங்கள் ஒரு மானின் முழு இறைச்சியுடன் வந்து கொண்டிருந்தோம். அப்போது எதிரே வந்த சிங்கம் எங்களை விடவில்லை! பாதியைப் பறித்துக் கொண்டது." என்று குரங்கு கூறியது. அதைக் கேட்டு துள்ளி எழுந்தது புலி. "என்ன, எனக்கு எடுத்து வந்த இறைச்சியில் பாதியைச் சிங்கம் பறித்துக் கொண்டதா? இரு, இரு அவனை என்ன செய்கிறேன் பார்!" என்று கூறியது புலி.

"சரி, புலியண்ணே, நீங்கள் இதைச் சாப்பிட்டுவிட்டுச் சென்று அதைப் பற்றிச் சிங்கத்திடம் கேளுங்கள்!" என்று கூறிவிட்டு இரு விலங்குகளும் அங்கிருந்து விடைபெற்றன.

பின் இரண்டும் சிங்கத்தின் குகையை நோக்கி ஓடின. கையில் மான் இறைச்சியும் இருந்தது. புலியிடம் கூறியது போல் சிங்கத்திடமும் கூறின. "சிங்க ராஜா, உங்களுக்கு எடுத்து வந்த இறைச்சியில் பாதியை அந்தப் புலி பிடுங்கியது. காட்டுராஜா நான் இருக்கும்போது சிங்கத்துக்கு இறைச்சியா? என்று கேட்டது. அது மட்டுமா...உங்களிடம் மோத வந்து கொண்டிருப்பதாகவும் சொன்னது!" என்று கூறியது நரி.

அதைக் கேட்ட சிங்கம் ஆத்திரத்தால் கர்ஜித்தது. நரியும் , குரங்கும் வந்த வேலை சுலபமாக முடிந்த மகிழ்ச்சியுடன் அங்கிருந்து கிளம்பின.

எதிர்பார்த்தது போல் புலியும், சிங்கமும் பயங்கரமாக மோதிக் கொண்டன. யார் காட்டுராஜா என்று முடிவு செய்யும் யுத்தம் தொடர்ந்தது. செடிகளுக்குள் ஒளிந்து யுத்தத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நரி தனது திட்டம் வெற்றி பெற்றதைக் கண்டு பூரித்துப் போனது. குரங்கும் இதைக் கண்டு மகிழ்ந்தது. சிறிது நேரத்தில் இரண்டு மிருகங்களும் ராஜ பதவி அடைவதற்குப் பதிலாக யமலோக பதவி அடைந்தன. கொடிய மிருகங்களின் அழிவைக் கண்டு மிருகங்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன.

குழந்தைகளே புத்தி என்பது மிகப் பெரிய ஆயுதம். எதிரிகள் பலசாலிகள் என்பதால் நேரடியாக மோத முடியாது. காட்டு நலனுக்காகப் புத்தியைத் தீட்டிப் பெரிய சக்திகளை எப்படி நரி அழித்தது பார்த்தீர்களா? எனவே சிறியவர்களாக இருக்கும் போதே புத்திசாலித்தனமாக நடக்கக் கற்றுக் கொள்ளுங்கள். ●

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **26.10.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **466**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 462

பரிசுக்குரியவர்:
**எஸ். உஷாநந்தினி,**
அல் பராகா சர்வதேச பாடசாலை, பண்டாரவளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **க. பிரசாந்த்,** ரகுமானா பாத், நீர்கொழும்பு. | **ஜகன்யா,** கொழும்பு-10. |
| **ஜோ. சரவணராஜ சர்மா,** விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13. | **ஜி. உமாபிரியா,** கொ.மா.பு.அ.த.ம.வி. |
| **த. ரிஷாந்தினி,** முனைத்தீவு | **மதன்ராஜ்,** தெஹிவளை தமிழ் வித்தியாலயம், தெஹிவளை. |
| **எம்.என். முர்ஷிகா ஷிரீன்,** கே/அரபா முஸ்லிம் வித்தியாலயம்,ஹந்தேஸ்ஸ. | **பவித்ரா,** கொ. இந்துக் கல்லூரி. |
| **சு. ரெங்கராஜ்,** பிரதானவீதி, கலஹா. | **நிரஞ்ஜன்,** அம்சா தே. பாடசாலை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. பார்த்தால் பசப்புக்காரி சுவைத்தால் கசப்புக்காரி அவள் யார்?
2. பழகினால் மறக்காதவன் பயந்தோரை விடாதவன் அவன் யார்?
3. மக்கள் இல்லாத நாடு அலையில்லாத கடல் அது என்ன?
4. தண்ணீராய்ப் பிறந்தவன் புகையாக மறைகிறான் அவன் யார்?
5. முதுகு முழுக்கக் கூனல் வயிறு முழுக்கப் பற்கள் அவள் யார்?
6. உரிக்க உரிக்க ஒன்றுமில்லை, கண்ணீர்தான் மிச்சம் அது என்ன?
7. பச்சை வீட்டுக்குச் சிவப்பு வாசல் அது என்ன?
8. பக்கமாம் பக்கம் பெரிய பட்டணம் அருகிலிருந்த பட்டணத்தை எட்டிப் பார்க்க முடியலை அது என்ன?
9. பூவேலிக்குள் ஒரு பொன் மான் அது என்ன?
10. ஒற்றைக் கண்ணன் துணியைக் கண்டால் ஓடியாடுவான் அவன் யார்?

### விடைகள்.

1. பாகற்காய் 2. நாய்
3. உலக வரைபடம் 4. பெற்றோல்
5. பன்னரிவாள் 6. வெங்காயம்
7. கிளி 8. முதுகு
9. கண் இமை- கருவிழி 10. ஊசி.

# கலப்பினம்



தாய்,தந்தை வழியில் நெருங்கிய உறவினர்கள் திருமணம் செய்வதை மருத்துவர்கள் 'கூடாது' என்று ஆட்சேபிக்கிறார்கள். இதனால் பிறக்கும் குழந்தைகள் குறைபாடு உள்ளதாகப் பிறக்கலாம் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது விலங்குகளுக்குச் சாதகமாக உள்ளது. நெருங்கிய உறவுமுறை கொண்ட நாய்கள் மூலம் இனவிருத்தி செய்தால் பிறக்கும் நாய்கள் நல்ல ஆரோக்கியத்துடனும், கொழுகொழுவென்றும் இருக்கிறதாம்.



இதேபோல் குறிப்பிட்ட உறவுமுறையுள்ள காளை- பசுக்களைத் தேர்ந்தெடுத்து இனவிருத்தி செய்வதன் மூலம் அதிகமான பால் தரக்கூடிய பசுக்கள் கிடைக்கின்றனவாம். உதாரணத்திற்கு ஜெர்சி பசுக்களைச் சொல்லலாம். இந்தப் பசுக்கள் சிறியனவாக இருந்தாலும் அதிக அளவில் சத்தான பாலைத் தருகின்றன.



முன்னாள் சோவியத் ரஷ்ய சயன்ஸ் அகாடமியைச் சேர்ந்தவர் இவானோவா. இவர் 'வெள்ளி-நரியினங்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றைக் கலப்பினப் பெருக்கம் செய்ய வைத்தார். இதன் மூலம் புது வகையான 'நரி' இனம் ஒன்றை உருவாக்கினார். இந்தக் கலப்பின நரிகள் 'மனிதர் இடும் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்கின்றனவாம்.


## இந்த வாரப் புதிர்

| | | | | |
|---|---|---|---|---|
| | | 36 | | |
| 50 | | 35 | | 89 |
| | | 68 | | |
| | | 9 | | |
| 24 | | 25 | | 22 |
| | | 12 | | |
| | | 63 | | |
| 98 | | Y? | | 5 |
| | | 20 | | |

Y இன் பெறுமதி என்ன?

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:



# தூரத்தால் பிரிந்த உறவுக்கு...

**அன்பின் சகோதரிக்கு,**

தொலைந்த உறவுகளுடனும், நலிந்த உணர்வுகளுடனும், நெடிதான நாட்களைக் கொடிதாகக் கடக்கும் அண்ணன், தூரத்தால் மட்டும் பிரிந்த தங்கைக்கு எழுதிக்கொள்வது,

அவசரமான இவ்வுலகில் ஆண்டவன் ஆசி வேண்டப்படுவதால் அவசியம் அது உனக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்!

நெடிதான நீண்ட நாட்களின் பின், நீ வரைந்த வலிதான கடிதம் மெதுவாக என்னை இன்றுதான் வந்தடைந்தது. உன் கடிதம் படித்த பின் கண்களில் நீர் வராவிட்டால் நான் உன் தேசத்தவனல்ல என்றாயே. உண்மையில் என் கண்ணில் கண்ணீர் வரவில்லை. பதிலாக இரத்தம் வடிந்தது. அப்படியானால் என் தேசத்திற்கு நான் யார்?

உனக்குக் கடிதம் எழுத மேசை முன் அமர்ந்தேன், நாள் முழுதும் உழைத்த உடல், ஓய்வுக்காகக் கெஞ்சுகிறது. அதைப் புறக்கணித்து எழுதுகிறேன். வரி ஒன்று வரையும் முன்னே அயல் நாட்டு வான் பரப்பில் அத்துமீறிப் பறக்கும் வானூர்திபோல அனுமதியின்றிப் பழைய நினைவுகள் என் மனப் பரப்பில்... மெல்லத் தலை சரித்து மேசை மேல் முகம் பதித்தேன். மேனியெல்லாம் ஒரு கணம் புல்லரித்தது. என்னுள் உறங்கிய எரிமலை மீண்டும் வெடித்தது. மதக் கலவரத்தால் தொடரப்பட்ட வழக்கில் பைபிள்மேல் சத்தியம் செய்யும் மனிதர்களைப் போல், இனங்கள் வேறானாலும் நாட்டின் பெயர் ஒன்றையே சொன்ன அந்த நேரங்களை நினைக்கின்றேன். இறைவனையே இடம்பெயர வைத்த யுத்தம் இறைமக்களை எப்படி வாழவிடும்? விளைந்தழிந்த பயிரும் விரயமான நம் காலங்களும் எப்போது திரும்பும் என்று உனக்கேனும் தெரியுமா? கொழுந்துவிட்டெரிந்த தீயில் சிதைந்து விட்ட நம் கூடுகள் கட்டப்படுவது எப்போது? கனத்த கம்பிகளின் பின்னே சலித்த மனதுடன் காலங்கழிக்கும் நம்மவர்கள் மேல் கருத்தே இல்லாது தொடரப்பட்ட வழக்குகள் நிறைவுக்கு வந்து, சிரித்த முகத்துடன் அவர்கள் சிறை மீள்வது எப்போது? பிறரை அழ வைப்பவன் சுயநலவாதி, எல்லோரையும் அழவைப்பவன் அரசியல்வாதி. இவர்கள் ஏப்பம்விட நாம்தான் கிடைத்தோமா? இருப்பதை விட்டுப் பறப்பதற்கு நான் ஆசைப்படவில்லை, இழந்ததை மீண்டும் பெற்றுக்கொள்ள நினைக்கிறேன். இது தவறா?

இனியவளே! உனக்கு, ஊரை ஒரு தரமேனும் பார்த்து வரச் சந்தர்ப்பம் கிடைத்தது. அகதியாய் வந்ததால் சொந்த நாடு செல்ல முடியாது நான்படும் வேதனை என்னோடு போகட்டும். ஒருமுறையாவது உன்னையேனும் பார்த்து வரவேண்டும் அதற்காகத்தான் என் இதயம் இதுவரை 'இயங்குகின்றது.


இங்கெல்லாம் இரவிலும் வெளிச்சம் உண்டு, இருந்துமென்ன இருண்டே போய்விட்ட உள்ளம் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. புல்வெளிகள் நிறைய உண்டு. அகதியானதால் அதை துப்பரவு செய்வதோடு சரி. நிலவு வந்திருக்க வேண்டும் என எண்ணும்போது அது மறைந்தே போயிருக்கும். அதுசரி இரசித்திருக்க முற்றமுமில்லை சுற்றமுமில்லை. இதை நினைக்கும் போது உள்ளம் ஒரு கணம் துடிதுடிக்கும். இரண்டு வேலை பார்த்தால்தான் இருவேளைக் கஞ்சி என்றான பின், இவையெல்லாம் இரசிக்க இதுவரை நினைக்கவில்லை. இயற்கையை இரசிக்க முனையும் கணங்களில் எம் தேசம் நினைவுவர, இது என் தேசமல்ல என்ற நினைவு மனதைப் பாதிக்கும், கனத்த நினைவுகளுடன் கனநாட்கள் கட்டிலில், நாம் புல்தரையில் புரண்டது போல புரண்டிருக்கிறேன். கடற்கரையில் கால் நனைத்த நினைவு வரும்போது ஈரமாக உணர்ந்து கைகளால் துழாவினேன், கடல் நீரல்ல அது கண்ணீரின் ஈரம்.

இழந்த உறவுகளுடன் இதுவரை எத்தனையோ தடவைகள் பேசிவிட்டேன். நிஜத்திலல்ல, கனவில். ஒன்றுனக்குத் தெரியுமா? இங்கு வந்து இத்தனை வருடங்கள் ஆன பின்னும் இன்னும் ஊர்க் கனவுகள்தான் வருகின்றது. விழித்துப் பார்த்த பின்னர் ஊரில் நான் இல்லை என்பது புரியும் அந்தக் கணங்களின் உணர்வுகளை வார்த்தையால் விபரிக்க முடியவில்லை. என்றேனும் நீ அதை அனுபவித்ததுண்டா? இங்கு நான் பட்ட காயங்களின் பின், வரம்புகளில் விழுந்தெழுந்த காயங்களின் தழும்புகள் சுகமானவைகளாகத் தெரிகின்றன.

நம்மைப்போன்ற தமிழ் மக்கள் அயல் நாட்டிலிருந்து வந்தபோது வடக்கத்தையார் என நாம் வழங்கிய பெயர், இங்குள்ளோர் எங்களை ஏஸியன்கள் என்று கேலி பேச வைக்கின்றது. விதைத்ததை அறுப்பதாக நினைத்து விம்மியழுவதைத் தவிர விதியென நொந்துகொள்ள முடியவில்லை. வீட்டிலிருந்து எங்களை வீதிக்கு கொண்டுவந்தது விதியல்லவா? முடியவில்லையம்மா, முகம் முழுதும் முடிக் காடு. துப்புரவாக்க மனமில்லை. பார்ப்பதற்கு நன்றாயிருந்தாலும் நாளுக்கு நாள் நலிந்து போவதை உணருகிறேன். அழுதால் மனப்பாரம் குறையுமென்பார்கள். அழும்போது ஆறுதல்படுத்த அம்மா அருகில் இல்லை என்ற நினைவு மேலும் வலிக்கிறது.

நீ இழந்தது புல்தரையும் வயல்வெளியும், கடற்கரையும், சொந்தங்களும்தான். நான் இழந்தது நாம் வாழ்ந்த புனித பூமியை. வேறும் எவையெவையோ தொலைத்தது போல உணர்கிறேன். எவையென மரத்துப் போன இதயத்தைக் கொண்டு இதுவரை என்னால் இனம் காண முடியவில்லையம்மா:

சொந்த நாட்டில் பயங்கரவாதி எனப்பட்டதால் புலம் பெயர்ந்து வந்தேன். இப்போது ஆசியாவிலிருந்து வந்தவனானால் பயங்கரவாதியாக இருப்பானென இங்கும் சொல்கிறார்கள். பாவிகள் போகும் இடமெல்லாம் பள்ளமும் பிட்டியும் என்பது சரிதான் போலும். இனி எங்கு இடம்பெயர்ந்து போவதென இப்போது கவலையாக உள்ளது.



உன்னால் முடிந்தவரை உனது உள்ளத்து உணர்வுகளைப் பாங்காக எழுதியிருந்தாய். உன்னைப்போல எழுத முயற்சித்தேன். முடியவில்லை நான் கிழித்துப் போட்ட பக்கங்கள், ஊரில் நீ என்னைக் கேலி செய்வதைப் போல செல்லமாக ஏளனம் செய்கின்றன. எப்படியாவது எனது உணர்வுகளைத் தெரியப்படுத்த வேண்டும் என்று இதை எழுதுகிறேன். இதைப் படித்த பின் அண்ணா ஒரு மக்கு என்று நீ முன்பெல்லாம் குறும்பாகச் சொல்வதைப் போல் இப்பொழுதும் சொல்வாயென மனது சொல்கிறது. தூரங்கள் பாசத்தைக் கூட்டுகின்றன என எங்கோ படித்தது இப்போது ஞாபகம் வருகின்றது.

முக்கியமான ஒரு விடயம், முன்னதாகவே சொல்லியிருக்க வேண்டும் இருப்பினும் இப்போது சொல்லுகிறேன். நான் கிறுக்கிய காகிதத் துண்டும், நாம் விளையாடிய பொம்மையும் இருப்பதாக எழுதியிருந்தாய். அவைகளைப் பத்திரப்படுத்திவை. எம் சந்ததிக்கு நாம் கொடுக்கப் போகும் பரம்பரைச் சொத்துக்கள் அவைதான்.

இப்படிப் பிரிவோம் என அன்று தெரிந்திருந்தால், நான் உன்னுடன் விளையாட்டகவேனும் சண்டை போட்டிருக்க மாட்டேனடி. நீ இன்று உன் குடும்பம், உன்னைச்சுற்றி ஓர் புதிய உறவு வட்டம் என வாழ்கிறாய். அது போகட்டும் உன் பதில் கட்டாயம் வேண்டும். அதுவாவது இன்னும் எனக்கு தேசத்தில் உறவு உண்டென்பதை அவ்வப்போது கூறி மனதை ஆற்றுகின்றது. அதனால் அவசியம் பதில் எழுது. உடைந்த கட்டடம், இடிந்த சுவர்கள்தான் நீ ஊரில் பார்த்தது. இடிந்த இதயத்துடனும், தொலைத்த மகிழ்ச்சியுடனும் உயிர்வாழும் நம்மவர்கள் பலரை உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இதையெல்லாம் கூறி உன்னை வேதனைப்படுத்த விரும்பவில்லை. வெளிநாடு சுவர்க்கம் என்று நம்மவர் நினைப்பது போலவே நினைத்துக் கொண்டிருக்கட்டும். உண்மையில் நாம் கடக்கும் பாதைகள் எங்களுக்காகவே கரடுமுரடாகின்றன. வைரமான மனம் எங்களிடம் இருப்பது தெரிந்து போலும்.

வீட்டில் அனைவரையும் அன்பாக விசாரித்தாகக் கூறு. நம் சொந்தங்களைக் கண்டால் நான் நலம் விசாரித்ததாக நீ சொல்ல வேண்டுமென விரும்புகிறேன். என் மருமக்களிடம் மட்டும் இப்போதைக்கு மாமா கொடுத்ததாக முத்தங்கள் கொடு. இவ்வளவு நேரமும் உன்னுடன் நேரே கதைத்ததைப் போல இருக்கிறது. உன்னையும் பிள்ளைகளையும் கவனமாகப் பார்த்துக் கொள். மீண்டும் அடுத்த மடலில் உன் முகம் காணும்வரை உன்னை முத்தமிட்டு விடைபெறும்,

தூரத்தால் மட்டும் உன்னைப்
பிரிந்த,
**அண்ணா.**

**இந்திலன்-அமெரிக்கா**

# எங்கட சனம்...

நாட்டு நிலைமை முற்றிலுமாகத்தான் மாறிப்போய்விட்டது. நம்பவே முடியவில்லை. தெற்கில் இருந்து கிழக்குக்கு 'ரூர் பஸ்கள்' என்ன...'வான்', 'கார்' என்று தனியார் வாகனங்கள் என்ன...

மூன்று மாதங்களுக்கு மேலாகச் சிறைவாசம் அனுபவித்து விட்டு குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் விடுதலை பெற்று வந்த கிராமசேவகர் குமரகுருவுக்கு, கண்ணைக் கட்டி இருட்டில் வைத்திருந்து பின்னர் கட்டை அவிழ்த்து வெளிச்சத்தில் விட்டது போல இருந்தது.

'அறுவான்கள்... சும்மா இருந்த என்னை என்ன மாதிரி மாட்டி விட்டான்கள்....'

சிறையில் இருந்த நாட்களில் குமரகுரு இப்படித்தான் இந்தச் சனத்தை நொந்து திட்டிக் கொண்டிருந்தார்...

சமாதான முன்னெடுப்புக்கள் அவருடைய விடுதலைக்கும் சார்பாக அமைந்து விட்டது!

சுதந்திரமாக வீட்டு முற்றத்தில் நடந்தபடி 'டுத் பிரஷை' கொடுப்பு வரை செலுத்தி... காவி படிந்த பற்களை ஒரே நாளில் வெண்மையாக்கிவிடும் முயற்சியில் அவர்....

விடுதலையாகி வந்ததுமே பொது நிர்வாக அமைச்சு அவர் முன்னர் ஒரு தடவை சேவையாற்றிய அந்தப் பாரம்பரிய மீனவர் கிராமத்துக்கே திரும்பவும் நியமனத்தைக் கொடுத்துவிட்டது. அவருக்கு அது சிறிது ஆறுதலாக இருந்தாலும் இந்தச் சனத்தால்தான், தான் அடியும் 'நொருக்கும்' வாங்கி அவலப்பட வேண்டி வந்ததென்பது மனதுக்குள் ஒரு தீராத நெருடலாக இருந்தது.

உண்மையிலேயே குமரகுரு கிராமசேவகர் ஒரு நல்ல மனிதர் மட்டுமல்ல.... அப்பாவி! இந்தக் கிராமத்தில் 'சமுர்த்தி' எடுக்காதவர் யார்? மழை பெய்கையில் சிறிய காற்று வீசினால் போதும். எல்லோருக்குமே நட்ட ஈடு. நற்சான்றுப் பத்திரம் வேண்டுமா? உடனே!

அப்படிப்பட்ட தயாள குணத்தாற்றான் அவருக்கு அந்த வில்லங்கமும் வந்து சேர்ந்தது....

அவரது வீட்டு முற்றத்திலேயே 'சீற்றால்' வேய்ந்து சிமெந்து தரை போட்ட கட்டடம்தான் அவருடைய அலுவலகம். திங்கள், வியாழன் நாட்களில் அவரிடம் வருபவர்கள் அமர்வதற்குப் பெண்களுக்கும் ஆண்களுக்குமாகத் தனித்தனி 'வாங்குகள்' போடப்பட்டிருந்தன.

சிலர் பாதணியை வெளியே கழற்றிவிட்டுச் சென்று அமர்வார்கள். சிலர் அப்படிச் செய்யமாட்டார்கள். அவரவர் பூர்த்தி செய்ய வருகின்ற தேவையின் கனதியைப் பொறுத்த விசயம் அது. இதனாலெல்லாம் குமரகுரு பாதிக்கப்பட மாட்டார். ஆனால், கஷ்டகாலம் என்று வருகின்ற போது எந்த நல்ல குணங்களும் எவரையும் காப்பாற்ற மாட்டாது போலும்!

அப்படித்தான் அன்று சம்பவித்தது... நல்ல வாட்டசாட்டமான இளந்தாரி ஒருத்தன் அவரை சந்திக்க வந்திருந்தான். அவனுடைய சிரிப்பைப் பார்க்கிறவர்களுக்கு அவனுடன் முன்னைய பல ஜென்மங்களிலிருந்தே உறவுமுறை இருப்பது போலத்தான் தெரியும்....

பாவி சிரித்தவாறு வந்தான்.... குமரகுரு மருண்டேவிட்டார்!

'டிஸ்றிக் ஜடென்ரி காட்' தானே? ஒரு நடைமுறைக்கு நான்கே நான்கு கேள்விகள் மட்டும் கேட்டார்... தலையெழுத்தான கையெழுத்தைப் போட்டே விட்டார்!

அத்துடன் தொட்டது சனியன். உளவுப் பிரிவு வந்தது. அந்த இளைஞன் பற்றி கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டது....மேலதிக விபரத்தைத் தெரிந்து கொள்ளத் தங்களுடனேயே தலைநகருக்கு அழைத்துச் சென்று விட்டார்கள்!

வாயிற் கதவினை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. பல்துலக்கியபடியே சென்று பூட்டியிருந்த கதவினைத் திறந்து விட்டார் குமரகுரு.

ஐம்பது வயது மதிக்கத் தக்க பெண்மணி. கழுத்தில் கனதியான தாலிக்கொடி. செல்வத்தின் திமிர்ப்பு நன்கு துலங்கியது.

"போய் 'வாங்கிலை இருங்கோ" - குமரகுரு.

"நான் பாருங்கோ ஒரு அவசரமான விசயமாய்..." அந்தப் பெண் அவசரம் காட்டினாள். குமரகுரு இப்படி எத்தனை பேருடைய அவசரத்தைப். பார்த்தவர்...பாதிக்கப்பட்டவர்...

"சரி இருங்கோவன் வாறன்..."

மேன்மேலும் இந்தச் சனம் அவசரம் காட்டித் தன்னை பிரச்சனையில் மாட்டி விடக்கூடும் என்பதில் அவர் விழிப்பாகவே இருந்தார்.

குளியலறைக்குச் சென்று குளித்து உடை மாற்றி....

இந்தப் பெண்ணை இதற்கு முன்பே சந்தித்ததான நினைப்பு ஒன்று அவர் மனதில் தோற்றம் பெற்று நின்று எச்சரித்தது...

"ஓ...பத்து வருடங்களுக்கு முன்னர் நான் இந்தப் பெண்ணைச் சந்தித்திருக்கின்றேன்...."

அப்போ நல்ல இளமைப் பொலிவுடன் இருந்த அவள்...அன்றொருநாள்,

"ஐயா... பொலிஸ்காரர் சோதனை என்று வந்து எங்கடை வீட்டுச் சாமான்கள் எல்லாத்தையும் உடைச்சதோடை என்னுடைய இவரையும் கூட்டிப் போயிற்றான்கள்..." தலையில் அடித்தபடி அழுதாள்.

"ஏனாம்?" குமரகுரு வினவினார்.

அவள் சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்து அழுகையை அடக்க முயற்சித்தவாறு...

"எனக்கு மூண்டு ஆண்பிள்ளைகள். மூவருமே இளந்தளிர்கள். பிரச்சனைக்குப் பயத்திலை நாங்கள் அவையளைத் தலைநகருக்கு அனுப்பிப் போட்டம். பொலிஸ்காரர் சொல்லுகினம். "இல்லை... இல்லை... மூண்டு பேரும் போராளிகளாய் போய்விட்டான்கள் என்று "விம்மி விம்மி அழுகிறாள்.

"அதுக்கு இப்ப நான் என்னம்மா செய்ய?" -வினவினார்.

"ஐயோ...ஐயா, உங்களைத்தான் நம்பி வந்தனான்....என்னுடைய பிள்ளைகள் மூவரும் போராளிகள் இல்லை எண்டு உறுதிப்படுத்தி நீங்கள் ஒரு கடிதம் தர வேண்டும்.

அவள் வற்புறுத்தினாள்.

"அம்மா...இது நடைமுறைச் சாத்தியம் இல்லை. நீங்கள் கொஞ்சம் யோசிக்க வேணும்." குமரகுரு பல நியாயங்களை எடுத்துக் காட்டி மறுத்துரைத்தார்.

தனது கருமம் சித்திக்காது என்பதை உணர்ந்து கொண்டதும் அவள் கோபம் உச்சத்துக்கு ஏறியது... "நீரும் ஒரு மனுசனோ; உம்மை பிறகு கவனிக்கிறன்".

ஏசி; எச்சரித்து விட்டுச் சென்று விட்டாள்.

குமரகுருவின் மனைவி காலை உணவை மேசைக்கு எடுத்திருந்தாள்... அவர் சிறையால் வந்த பின்னரும் அவரது மனைவிக்குத் திகில் எடுபடவில்லை. அவரை அது பற்றியே திரும்பத் திரும்ப ஏதாவது கேட்பாள்... "ஏனப்பா...அந்த இளந்தாரி 'நேவி காம்பை' 'வீடியோ' எடுத்ததெண்ட கதையெல்லாம் பொய்யே?" வினவினாள்.

"அதெல்லாம் சுத்தமான கட்டுக் கதை. காம்பிலை, கொன்ராக்ட் வேலை ஒண்டுக்குக் கூலி வேலை செய்யத்தான் அந்தப் பெடியன் போனவன்...அங்கை வெவ்வேறு தொலைவு இடங்களில் நாளாந்தம் வேலை மாறி மாறி வரும். போ என்கிற இடத்துக்குப் போக வேணும்... பிள்ளைக்கு இடம் வலம் தெரியேல்லை. அதாலை கடதாசி ஒண்டிலை வேலைத்தலங்கள் இருக்கிற இடங்களைப் படமாய்க் கீறி வைச்சுது. இதனாலதான் எல்லா வில்லங்க்மும் வந்தது...

இடியப்பத்தைப் பாற்சொதியுடன் இரசித்து சாப்பிட்டபடியே கூறி முடித்தார். ஆனால், அவருடைய நினைவெல்லாம் தனக்காகக் காத்திருக்கும் அந்தப் பெண் பற்றியே இருந்தது.

கையை அலம்பிவிட்டு நேரே அலுவலக அறைக்குப் போனார்... "என்னம்மா விசயம்...?" வினவினார்.

"அது பாருங்கோ... என்னுடைய இவர் வெளிநாடு போய் ஒரு வருஷமாய்ப் போச்சு. அகதி அந்தஸ்துக் கேட்டு விண்ணப்பிச்சிருக்கிறார். 'கேசு'க்கு சில ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டி இருக்கு..."

பிரச்சனை வந்ததும் வந்தது... அதனால் ஏற்பட்ட அவலங்களுக்கு அப்பால் எத்தனையோ பேர் வெளிநாடு சென்று தங்கள் தங்கள் நிலைவரங்களை உயர்த்திக் கொண்டுவிட்டார்கள். அரசாங்க உத்தியோகம் என்று இங்கு தங்கி விட்டவர்கள் 'பென்சனை' எதிர்பார்த்து வேலையைத் தூக்கி எறிய மாட்டாதவராகப் போய்விட்டார்கள். இதற்கும் மேலாகத் தங்கள் மழலைச் செல்வங்களை சிறப்பாக வளர்த்து ஆளாக்க முடியாத அவர்கள் கஷ்டம் சொல்லி முடியாது.

சொந்த பந்தம், சிநேகிதம் என்று வெளிநாட்டில் யாராவது இருந்தால் சரி... இல்லாவிட்டால் நாளாந்த வாழ்க்கையை ஓட்டுவதே சிரமம்.

பிரச்சனை எதுவும் இல்லாவிட்டால் அந்த வெளிநாட்டு உதவியுடைய பெண்மணிக்கு உதவி செய்யவே குமரகுரு விரும்பினார். "எறிகின்ற அகப்பையையும் சொருகி வைக்க வேணும்" என்று ஒரு பழமொழி இருக்கின்றது. அதுவும் அப்போது அவருக்கு நினைவு வந்தது.

"வெளிநாட்டிலை இருக்கிற உங்கள் கணவருக்கு நான் எப்படி அம்மா உதவி செய்வது?" அவருடைய கேள்விக்கு அந்தப் பெண் தெளிவாகவே பதில் கூறினாள். ஆனால், குமரகுருவுக்கு அதனைச் சரியாகக் கிரகிக்க முடியாத ஒரு திகைப்பு... தனது பிடரியை வலது கரத்தால் தடவிவிட்டார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவருக்கு வழங்கப்பட்ட 'உபசாரத்தில்' தலையில் ஏற்பட்டிருந்த கண்டலின் உக்கிரம் மனைவி கொடுத்த சுடுநீர் ஒத்தடத்தால் இப்போதுதான் சிறிதளவு குறைவடைந்து வருகின்றது. அவர் யோசிப்பதையும் பதில் எதுவும் கூறாததையும் கவனித்துவிட்டு அப் பெண் மீண்டும் கெஞ்சிக் கேட்டார்...

"ஐயா...நாங்கள் அநாதைகள், எங்களுடைய பிள்ளைகள் மூவரும் போராட்டத்துக்குப் போய்விட்டார்கள் என்று நீங்கள் உறுதிப்படுத்த வேணும்"

கிராமசேவகருக்குப் பதில் கூறத் தோன்றவில்லை...

"ஐயோ... எங்கடை சனம்..." என்று மட்டும் அவர் வாய் முணுமுணுத்தது.

**திருமலை.வீ.என்.சந்திரகாந்தி, திருகோணமலை.**

# அங்கம் 04

# குறி வைச்சாச்சு

'குறி பார்த்துக் கொண்டேயிரு. எப்படியும் குரு கோவிந்தை அவசரப் படுத்திக் கூப்பிட- இந்த அறையின் கத வருகே வருவார்கள். கிட்டத்தில் வந்ததும் பிஸ்டலை உபயோகி. இரண்டு பேர்களையும் முழங்காலுக்கு கீழே சுட்டு கீழே உருள வை. வெளியே நின்றிருக்கும் கான்ஸ்டபிள்களுக்கு கேட்கும்படியாய்க் கத்து. ஏனென்றால் அது ஸைலென்சர் பொருத்தப்பட்ட துப்பாக்கி. தோட்டாக்களை சத்தமில்லாமல் துப்பும்,' உள் மனம் யோசனை கூற தலைமுடியைக் கோதிக் கொண்டு, ஜன்னலோரமாய் இருட்டில் நின்றபடி, கம்பிகளுக்கு இடையில் பிஸ்டலை வைத்துக் கொண்டு காத்திருந்தாள் ஹரிதா.

நிமிஷங்கள் நொடியடிக்க ஆரம்பித்தன.

அவர்கள் பிஸ்டல்களோடும், சிகரெட் புகையோடும் உலாவினார்கள். பத்து நிமிஷங்களுக்குப் பின் சர்தார் உத்தம் சிங்கிடம் கேட்பது காதில் விழுந்தது.

"குரு கோவிந்த் என்ன பண்றான்? முழுசா பனிரெண்டு நிமிஷம் ஓடிப்போச்சு. தூங்கிட்டானா?"

"ஒரு குரல் கொடு சர்தார்."

சர்தார் கையில் ஏந்திய பிஸ்டல்களோடு அறைக் கதவை நெருங்கினான். தொண்டையைக் கனைத்துக் கொண்டு மெல்லமாய்க் குரல் கொடுத்தான்.

"குரு கோவிந்த்..."

"...."

"குரு கோவிந்த்...என்ன இவ்வளவு



நேரம்? இதென்ன மாமியார் வீடுன்னு நினைச்சுகிட்டியா? சீக்கிரமா வெளியே வா... உனக்குப் பின்னாடி..."

சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

ஹரிதாவின் கையிலிருந்த பிஸ்டல், சைலன்ஸரின் உதவியோடு 'ஷ்ஷ்ஷ்ர்க் என்ற ஒரு சின்ன சத்தத்தோடு சீறி, சர்தாரின் வலது கொண்டைக் காலில் தோட்டாவை விதைத்தது.

"ம்...ம்...மா....ஆ...ஆ..."

சர்தார் முன்பக்கமாய் மடங்கி விழ் கையிலிருந்த பிஸ்டல் எகிறிப் போய் சுவரோரமாய் விழுந்தது.

உத்தம் சிங் அதிர்ச்சியிலிருந்து மீண்டு உஷார் நிலைக்குத் தாவி பிஸ்டலோடு ஓடிவர ஹரிதா இரண்டாவது தடவை ட்ரிக்கரை அழுத்தினாள்.

சரியாய் முழங்காலில் குண்டு பாய- துடித்துப் போய் கீழே விழுந்தான்.

இரண்டு பேரும் முழங்கால்களுக்கு கீழே-ரத்தமாய் சின்னச் சின்ன முனகல்களோடு விழுந்து கிடக்க அந்த விநாடிகளைப் பயன்படுத்திக் கொண்டு,

கதவைத் திறந்து வெளியே வந்து...

கேட் பாரில்லாமல் விழுந்து கிடந்த பிஸ்டல்களை பொறுக்கிக் கொண்டாள் ஹரிதா. அவசர அவசரமாய் அப்பாவையும், அம்மாவையும் விடுவித்தாள். இண்டர்காமில் தொடர்பு கொண்டு, செக்யூரிட்டி கான்ஸ்டபிள்களை உடனே வரும்படி சொன்னாள்.

இரண்டு கைகளாலும் ஏந்திக் கொண்ட பிஸ்டல்களோடு கீழே விழுந்து கிடந்த சர்தாரையும் உத்தம் சிங்கையும் சிரிப்போடு நெருங்கினாள் ஹரிதா. உத்தம் சிங்கிடம் பேசினாள்-

"உன்னோட கூட்டாளி என்கிட்டே கராத்தே டெட்ஸ்ட்ரோக் ஒண்ணை வாங்கிட்டு மூர்ச்சையாக விழுந்து கிடக்கிறான். அவன் கண்ணு விழிச்சுப் பார்க்க இன்னும் இரண்டு மணி நேரமாகும். உங்க ரெண்டு பேர்ல யார் இப்போ என் கூட அந்த ரூமுக்கு வரப் போறீங்க? நீயா இல்லே அவனா?"

பத்திரிகை நிருபர்களுக்கு மத்தியில் சிக்கியிருந்தாள் ஹரிதா. பக்கத்திலேயே சந்தோஷ முகங்களோடு கமிஷனர் விஷ்ணுவர்தனும் மனைவி சுஷ்மாவும் நின்றிருந்தார்கள். போட்டோஃபிளாஷ்கள் மின்னின. ஒரு நிருபர் சொன்னார்:

"உங்களுடைய துணிச்சலான காரியத்துக்காக நாடே பெருமைப்படுகிறது."

"நன்றி"- புன்னகைத்தாள் ஹரிதா.

"அவர்களைச் சமாளிக்க முடியும் என்கிற நம்பிக்கை உங்களுக்கு எப்படி வந்தது?"

"நான் கற்றுக் கொண்ட கராத்தே எனக்கு நம்பிக்கை கொடுத்தது. அந்த நம்பிக்கையைக் காட்டிலும் என்னுடைய பெற்றோரைக் காப்பாற்ற வேண்டும் என்கிற ஒரு ஆவேசமான உணர்ச்

எழுதுவது
**ராஜேஷ்குமார்**

சிதான் என்னுடைய தைரியத்திற்குக் காரணம்."

"உங்க அப்பாவைப் போலவே நீங்களும் போலீஸ் துறைக்கு வருவீர்களா?" நிருபர் கேட்ட இந்தக் கேள்விக்கு ஹரிதா பதில் அளிப்பதற்கு முன் கமிஷனர் குறுக்கிட்டார்:

"ஹரிதாவுக்கு இயற்கையாகவே தைரிய உணர்ச்சி அதிகம். நேஷனல் கேடட் சர்வீஸிலும் காப்டனாய் இருக்கிறாள். அவள் தன்னுடைய படிப்பை முடித்ததும் போலீஸ் துறைக்கு வர முறைப்படி அப்ளிகேஷன் போடுவாள்."

ஒரு நிருபர், கேள்வியின் போக்கை மாற்றினார். "உங்கள் வீட்டு செக்யூரிட்டி கான்ஸ்டபிள் கொடுத்த ஸ்டேட்மெண்டில்- ஒரு செவர்லே காரில் ஆறுபேர் வந்ததாகவும்...அந்த ஆறு பேரில் மூன்று பேர் மட்டுமே உங்களைப் பார்க்க உள்ளே வந்ததாகவும் சொல்லியிருக்கிறார்கள்?"

"ஆமாம்."

"அந்த மூன்று பேரைக் கண்டு பிடித்து விட்டீர்களா?"

"இன்னும் இல்லை, விசாரணை நடந்து கொண்டிருக்கிறது."

"உங்களை பழி தீர்க்க வந்தவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்?"

"வெளிநாட்டு சதிக் கும்பலைச் சேர்ந்தவர்கள். ஏற்கனவே இந்தக் கும்பலைச் சேர்ந்த எட்டு பேரைக் கைது பண்ணி வழக்கு தொடந்திருக்கிறோம்."

"உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்துக்கும் கூடுதல் பாதுகாப்பு தேவையென்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"வேண்டியதில்லை. இதே பாதுகாப்பு போதும். இனிமேல் என்னைப் பார்க்க வரும் வெளியாட்களை 'தரோவாக செக்' செய்து அனுப்பினால் போதுமானது.

"உங்களிடம் பிடிபட்ட உத்தம்சிங், குரு கோவிந்த், சர்தார் மூன்று பேரில் இரண்டு பேர் சீக்கியர்கள். இவர்கள் சீக்கிய தீவிரவாதிகளாக இருக்கலாமில்லையா?"

"விசாரணையில் தெரியும்."

கமிஷனர் பேசிக் கொண்டிருக்கும் போதே- அந்த போலீஸ் ஜீப் வேகமாய் வந்து பங்களா போர்டிகோ வாசலில் நின்றது.

டி.எஸ்.பி. ரஞ்சித் குமார் ஜீப்பினின்றும் இறங்கி கமிஷனரை நோக்கி வந்தார். நெற்றியில் கை பதித்து சல்யூட் ஒன்றை விநியோகித்து விட்டு, "ஸார்.... ஒரு நிமிஷம் உங்க கூட தனியாகப் பேசணும்..."

"வாங்க..."

கமிஷனர், கும்பலினின்றும் விலகி வந்து பக்கத்து அறைக்குள் டி.எஸ்.பி.யை கூட்டிப் போனார்.

"என்ன விஷயம்?"

"ஸார்... ட்ரீட் மெண்டுக்காக ஹாஸ்பிடலில் சேர்த்த ரெண்டு பேர்ல ஒருத்தன் இறந்துட்டான்."

கமிஷனர் திடுக்கிட்டார்.

"யார்?"

"சர்தார்..."

"எப்படி இறந்தான்!"

"சூசையிட் ஸார்..."

கமிஷனர் மறுபடியும் அதிர்ந்தார்.

"சூசையிட்...? எப்படி...?"

"கைக்கு கிடைச்ச ஒரு பழைய பிளேட்டாலே கழுத்தை அறுத்துகிட்டான் ஸார்..."

"அவன் கழுத்தை அறுத்துக்கிட்டு செத்துப் போகிறவரைக்கும் - ரூமுக்கு வெளியே செண்ட்ரிக்கு இருந்த கான்ஸ்டபிள்ஸ் என்ன பண்ணிட்டிருந்தாங்க...!

"போர்வையை இழுத்துப் போர்த்துகிட்டு போர்வைக்குள்ளேயே - ஒரு சின்ன சத்தம் எழுப்பாமே...

கழுத்தை அறுத்துக்கிட்டு செத்துப் போயிருக்கான் ஸார்...."

"இன்னொருத்தன்? உத்தம் சிங்?"

அவன் இன்னமும் அன்கான்ஷியஸ் ஸ்டேஜில் தான் இருக்கான். போலீஸ் காவலை இன்னமும் பலப்படுத்தியிருக்கு..."

"குரு கோவிந்தை விசாரணை பண்ணீங்களா?"

"ஒரு அரைமணி நேரம் ரெட் ரூம்ல வெச்சு சிவியரா ட்ரீட்மெண்ட் கொடுத்து விசாரிச்சோம் ஸார். அவன் வாயையே திறக்கலை. மேற்கொண்டு அடிச்சா தாங்க மாட்டான் போல் தெரிந்தது. ட்ரீட்மெண்டை நிறுத்திக்கிட்டோம்..."

"ஆத்திரமோ அவசரமோ வேண்டாம்... நிதானமாவே நல்லதனமாவே விசாரிங்க. அந்தக் கும்பலோட ஆணி வேரை ரெண்டு நாள்ல நாம கண்டு பிடிக்கணும். அந்த செவர்லே காரைட் ரேஸ் பண்ணீங்களா?"

"நாட் யெட் ஸார். பூனா வரைக்கும் எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் தகவல் கொடுத்திருக்கு..."

கமிஷனர் ஏதோ சொல்ல வாயெடுத்த விநாடி....

பக்கத்து மேஜையிலிருந்த டெலிபோன் தன் தொண்டையைக் கமறியது. போய் ரிஸீவரை எடுத்து.

"ஹலோ..."

ஹிந்தியில் யாரோ கேட்டார்கள். ஆண் குரல்.

"பேசறது யார் கமிஷனரா?"

"எஸ்."

"கமிஷனர் ஸார். எங்க திட்டத்தையே பாழ் பண்ணின உங்க பொண்ணு ஹரிதாவுக்கு எஞ்சியிருக்கிற நாங்க குறி வெச்சுட்டோம்.... அவளை நாங்க தண்டிக்காமே விட மாட்டோம். உங்க பொண்ணை நீங்களே எங்ககிட்டே கொண்டு வந்து ஒப்படைக்கும்படியா பண்ணப் போறோம். இன்னும் நாப்பத்தெட்டு மணி நேரத்துல உங்க டாட்டர் எங்க கிட்டே இருப்பா... இது வெறும் மிரட்டல் இல்லை; நடக்கப் போகிற நிஜம்."


ரிஸீவர் 'டொக்' கென்று சாத்தப் பட்டது.

(குறி தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## சந்தேகக் கோடு சந்தோஷக் கேடு-01

திண்டுக்கல் மாவட்டம் தோட்டனூத்து முகாமிலிருந்து மகேஸ்வரன் என்பவர் வந்திருப்பதாக எனது உதவியாளர் கூறியதையடுத்து மகேஸ்வரனை அழைத்து எனது அலுவலக அறையில் இருநத கதிரையில் அமரும்படி கேட்டுக் கொண்டேன். மகேஸ்வரனை நான் ஏங்கேயோ பார்த்த ஞாபகம் இருந்தது.



"மகேஸ்வரன்! உங்களுக்கு என்னை ஏற்கனவே தெரியுமா?" என்று கேட்டேன்.

"உங்களை ஏங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு" என்றார் மகேஸ்வரன். நான் என்னை அறிமுகப்படுத்தினேன். பின்பு மகேஸ்வரன் தன்னைப் பற்றிய விபரங்களைக் கூறினார்.

"தலைமன்னார் பியரைச் சேர்ந்தவன் நான். திருமணமாகி மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள். நானும் எனது குடும்பத்தாரும் 1990 ஆண்டு ஆடி மாதம் இந்தியாவுக்கு அகதிகளாக வந்து சேர்ந்தோம். எனக்கு வயது 40. நான் முகாமிலும் வெளியிலும் மீன் வியாபாரம் செய்கிறேன்." என்று சொல்லி முடித்தார்.

வயதிற்கு ஏற்ற திடமும் கடின உழைப்பும் மகேஸ்வரனின் தோற்றத்தில் தெரிந்தது. மகேஸ்வரன் இரண்டு தங்க மோதிரமும் தங்கச் சங்கிலியும் அணிந்திருந்தார். அகதி வாழ்க்கையையும் சவாலாக எடுத்துக்கொண்டு வேறொரு நாட்டிலே வித்தியாசமான சமூக கட்டமைப்புக்குள் புதிய கலாச்சாரத்தைத் தமக்கேற்ற வண்ணம் மாற்றியமைத்துக் கொண்டு வாழும் அகதிகள் சிலரே உள்ளனர். அவர்களில் மகேஸ்வரனும் ஒருவர் என எண்ணினேன்,

"சரி மகேஸ்வரன்! உங்களுக்குள்ள பிரச்சனையைக் கூறுங்கள்" எனக் கேட்டேன். சற்று நிமிர்ந்து உற்காந்த மகேஸ்வரன்.

"நான் மூன்று நாட்களாக மனைவியுடன் பேசுவதில்லை. வீட்டில் படுப்பதுமில்லை. என் பிள்ளைகளை மட்டும் பார்த்துவிட்டுத் திண்டுக்கல் மீன் கடையில் படுக்கிறேன். என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை" என்ற மகேஸ்வரன் தலை குனிந்து கீழே பார்த்தார்.

நான் மகேஸ்வரனின் தலையில் கைவைத்து "கொஞ்சம் நிமிர்ந்து இருங்கள். இந்த அறையினுள் நாம் இரண்டு பேர் மட்டுமே இருக்கிறோம். நீங்கள் வெளிப்படையாக நம்பிக்கையுடன் என்னிடம் சொல்லுங்கள்" என்று உற்சாகமூட்டினேன்.

"எனது மனைவிக்கும், பக்கத்து வீட்டில் உள்ள வவுனியா பொடியன் ரவீ என்பவருக்கும் தொடர்பு என்று முகாமில் கதைக்கிறார்கள் என என்னுடன் மீன் வியாபாரம் செய்யும் செல்வம் சொன்னார். என்னால் நம்ப முடியவில்லை. நான் முந்தநாள் என் மனைவிக்கு அடித்துவிட்டேன். அவள் எதுவும் கதைக்கவில்லை. அடியை வாங்கிக் கொண்டு அமைதியாக இருந்தால் என்ன அர்த்தம் என்று நீங்களே சொல்லுங்கள்?" என்று மகேஸ்வரன் ஆத்திரத்துடன் கேட்டார்.

"முகாமிலேயே சகல வசதிகளுடன் வசிப்பவர்களில் நானும் ஒருவன். வீட்டில் எந்தக் குறையும் இருக்காது. அப்படி இருந்தும் ஏன் இப்படி நடந்து கொண்டாள் என்பதை நினைக்கும் போது அவளைக் கொல்ல வேண்டும் போல் இருக்கிறது" என்று மேலும் மேலும் ஆத்திரமடைந்தார் மகேஸ்வரன்.

சற்று அமைதியாக இருந்த மகேஸ்வரன் "இதை யாரிடமும் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். பின் முகாம் தலைவரைச் சந்தித்து விபரத்தை சொன்னேன். அவர்தான் உங்களிடம் செல்லும்படி கூறினார்" என்று மகேஸ்வரன் கண் கலங்கியபடி கூறினார்.

"நீங்கள் சரியான இடத்திற்கு வந்துள்ளீர்கள். அகதி வாழ்க்கையில் ஏற்படும் உளவியல் ரீதியான பிரச்சனைகளுக்கு ஆலோசனை வழங்கும் மையமாக எமது 'ஆற்றுப்படுத்தல் மையம்' அமைந்துள்ளது" என்று எமது சேவை பற்றிக் கூறினேன்.

"நீங்கள்தான் என் பிரச்சனைகளுக்கு முடிவுகட்ட வேண்டும். எனக்கு நிம்மதி கிடைக்க வேண்டும்" என்று என் கையைப்பற்றிக் கொண்டார் மகேஸ்வரன். அவர் கண்கள் கலங்கியது. அழுதார். மகேஸ்வரனின் முதுகில் தடவி நீங்கள் நினைப்பதுபோல் முகாம் வாழ்க்கையில் இது பெரிய பிரச்சனையில்லை" என்றேன். சற்று இடைவேளை தேவைப்பட்டதால் தேநீர் வழங்க ஏற்பாடு செய்தேன்.

### எஸ்.பி.லெம்ப்ட் வங்காலை

தேநீர் இடைவேளைக்குப் பின் மகேஸ்வரனிடம் மேலும் சில விபரங்களை அறிய விரும்பினேன். "உங்களுடன் மீன் வியாபாரம் செய்யும் செல்வத்தைத் தவிர வேறு யாரும் உங்களுக்கு மனைவீயின் நடத்தை பற்றிக் கூறினார்களா?" என்றேன்.

"இல்லை" என்றார்.

"உங்கள் மனைவியிடம் நேரடியாகக் கேட்டீர்களா?" என்றேன்.

"இல்லை" என்றார்.

"ரவியிடம் நேரடியாகக் கேட்டீர்களா?"

"இல்லை" என்றார்.

மகேஸ்வரன்! நீங்கள் சம்பந்தப்பட்டவர்களை நேரடியாகக் கேட்பதை விட்டுவிட்டு முகாமிலேயே பலர் கதைக்கிறார்கள் என்பதையும் உங்களுடன் மீன் வியாபாரம் செய்யும் செல்வம் சொல்வதையும் கேட்டு, நம்பிக்கொண்டு மனைவிமேல் சந்தேகப்படுவதும், அவளை அடிப்பதும் நியாயம்தானா? உங்கள் மனைவியிடம் கூட நேரடியாகக் கேட்க உங்களுக்குத் தைரியமில்லையா? யோசித்துப் பாருங்கள்! நமது அகதிகள் முகாம்களில் இப்படியான கதைகளைக் கட்டி விடுவதே சிலருக்குப் பொழுது போக்கு என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்" என்றேன்.

தொடர்ந்து வரும்...

# நெய்வேலிப் போராட்டத்திற்கு ஒரே காரில் வந்த கமல்-சிம்ரன் ஜோ

**கா**வேரித் தண்ணீரைத் திறந்து விட கர்நாடகா மறுத்தால் தமிழகத்திலிருந்து கர்நாடக மாநிலத்திற்கு மின்சாரம் வழங்கக் கூடாது என்று கோரி தமிழ் நடிகர்கள் நெய்வேலியில் பேரணி நடத்தினார்கள். இந்தப் பேரணியில் சுவாரஸ்யமான பல சம்பவங்கள் இடம்பெற்றன.

நெய்வேலிப் போராட்டத்தில் கலந்து கொள்ள கமலஹாசனும் சிம்ரனும் ஒரே காரில் வந்தனர்.

கலையுலகப் போராட்டத்தில் அத்தனை பேரும் கண்கொத்திப் பாம்பாகக் கவனித்தது கமலும்,சிம்ரனும் எப்படி வரப்போகிறார்கள் என்றுதான். அவர்கள் நினைப்பிற்கேற்ப இருவரும் ஒரே காரில் நெய்வேலி வந்து அசத்தினார்கள்.

சென்னையிலிருந்து தனது ஹூண்டாய் காரில் கிளம்பிய கமல், சிம்ரனையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். கலைஞர்களுக்காகக் கடலூர் பொறியியல் கல்லூரியில் உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்லூரிக்குக் கமலின் கார் வந்தபோது புகைப்படக்காரர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் ரசிகர்கள் குவிந்து விட்டனர்.

ஆனால் காரில் இருந்து முதலில் கமல் மட்டும் சூயிங்கம்மை மென்று கொண்டே இறங்கினார். இதனால் அனைவருக்கும் 'சப்' என்று ஆகிவிட்டது.

கொஞ்சத் தூரம் நடந்து சென்ற கமல், பின்னர் காரைத்



திரும்பிப் பார்த்து சிம்ரனைக் கூப்பிட்டார். உடனடியாகக் காரிலிருந்து இறங்கிய சிம்ரன், வேகமாக நடந்து கமல் அருகே வந்தார். அவரும் சூயிங்கம் மென்று கொண்டிருந்தார்.

இருவரையும் ஒன்றாகப் பார்த்ததும் அவர்களை ஜோடியாகக் 'க்ளிக்' செய்யப் புகைப்படக்காரர்கள் தயாராகினர். ஆனால் காவல்துறை அதிகாரிகள் உள்ளே புகுந்து தடுத்துவிட்டனர். அப்புறம் பார்த்துக்கலாம் என்று பொலிசார் கூறிக்கொண்டிருந்த போதே கமலும், சிமரனும் கல்லூரிக்குள் சென்றுவிட்டனர்.

அதேபோல் நெய்வேலியில் பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போதும் பாதியிலேயே இருவரையும் காணவில்லை. கூட்டத்தில் கலைஞர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே இருவரும் திடீரென்று எஸ்கேப் ஆகிவிட்டனர்.

**ஆரத்தி எடுத்து அசத்திய விஜயகாந்த்:**

அனைவரும் கறுப்பு உடையில் இருக்க விஜயகாந்த் வழக்கமான தனது வெள்ளை வேட்டி, சட்டையில் இருந்தார். அவரை ஏதோ போருக்கு அனுப்புவது போல ஆரத்தி எடுத்து அனுப்பி வைத்தார் அவரது மனைவி பிரேமலதா.

விஜயகாந்தும் சும்மா இருக்கவில்லை. தனியாக ஒரு காரில் சென்று கொண்டிருந்த அவர் மாமண்டூரில் உள்ள தன்னுடைய என்ஜினியரிங் கல்லூரியில் காரை நிறுத்தினார்.

பின்னர் நெய்வேலிக்குச் செல்லும் அனைத்து நடிகர்- நடிகைகளுக்கும் விஜயகாந்த் தன் மனைவி பிரேமலதா மற்றும் மகன் பிரபாகரன் ஆகியோருடன் நின்று ஆரத்தி எடுத்து வழியனுப்பி வைத்தார்.

மேலும் நடிகர்- நடிகைகளுக்காக கோக், பெப்ஸி, நொறுக்குத் தீனி என்றும் முட்டை முட்டையாகக் கொடுத்தனுப்பி அசத்தினார்



விஜயகாந்த்.

**போராட்டத்தில் கலைஞர்கள்:**

எந்தப் பொது நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பதில்லை என்ற பாலிசி வைத்துள்ள அஜீத் அதை ஒதுக்கி விட்டு ஒழுங்காகப் போராட்டத்துக்கு வந்து சேர்ந்தார். அவருடன் மனைவி ஷாலினியும் வந்தார்.

பாரதிராஜாவும் வைரமுத்துவும் ஒரே காரில் வந்தனர்.

அ.திமு.க.வைச் சேர்ந்த நடிகர் குண்டுக் கல்யாணம் தனது வெள்ளை டீ சர்ட்டில் 'வேண்டாம் ஏழையின் கண்ணீர், வேண்டும் காவிரியில் தண்ணீர்' என்று கொட்டை எழுத்துக்களில் பெயின்டால் எழுதியிருந்தார்.

தனது வழுக்கையை மறைக்கத் தலையில் துண்டு கட்டியிருந்தார் பிரபு. கறுப்பு டி-சர்ட், பேண்டில் இருந்த மும்தாஜ் அதன் மீது பர்தாவையும் போட்டிருந்தார். பின்னர் அதைக் கழற்றிவிட்டார்.

போராட்டம் நடக்கும் முறை குறித்து அவ்வப்போது லைவ்வாக தி.மு.க தலைமைக்கு செல்போனில் தகவல் தந்து கொண்டிருந்தார் சரத்குமார்.

பாரதிராஜாவும் பாலசந்தரும் அடிக்கடி ஆலோசனை நடத்திக் கொண்டனர். பாரதிராஜா ஒரு துண்டைப் போட்டுக் கொண்டு முன்னால் நடக்க, ஸ்டன்ட் நடிகர்கள், கூட்டத்தை விலக்கி அவருக்கு வழி ஏற்படுத்தித் தந்தனர்.

ஸ்டண்ட் நடிகர்கள் ஊர்வலத்தில் தாரை, தப்பட்டை அடித்துக் கொண்டு டான்ஸ் ஆடியபடி வந்தனர். அவ்வப்போது அசால்டாக அந்தரத்தில் 4 பல்டி அடித்துத் தரையில் இறங்கினர். இதைப் பார்த்து அசந்த பொது மக்கள் மாலைகளை அவர்கள் மீது வீசினர்.

நடிகர், நடிகைகளுக்காக ஏ.சி. செய்யப்பட்ட 3 மேக் அப் வாகனங்களும் நெய்வேலி கொண்டு வரப்பட்டன. ஆனால், அதை யாரும் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. 2 லாரிகள் நிறைய 10, 000 மினரல் வாட்டர் பாட்டில்களும் கொண்டு வரப்பட்டன.

**டிட் பிட்ஸ்:**

* பேரணி துவங்க 2 மணி நேரம் தாமதம் ஆனது. ஆங்கிலப் பத்திரிகையில் கருணாநிதி குறித்துப் பாரதிராஜா கொடுத்த கடுமையான பேட்டி காரணமாக அப்செட் ஆன சரத்குமார், பேரணியில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று நெய்வேலி வந்ததும் விஜயகாந்திடம் கூறியுள்ளார்.இதனால் அதிர்ச்சியடைந்த விஜயகாந்த், அவரையும் நெப்போலியனையும் பிரயத்தனம் செய்து சமாதானப் படுத்தியுள்ளார். அதன் பிறகே அவர் பேரணியில் வரச் சம்மதித்தார். ஆனால் பேரணியில் ஊர்வலமாக வராமல் சரத்தும், நெப்போலியனும் தனியாகவே வந்தார்கள்.

* நடிகர்கள் தாமதம் செய்து கொண்டிருந்ததால் ஆத்திரமடைந்த பாரதிராஜா, தானே தனியாக நடக்கத் தொடங்கினார். இதைப் பார்த்ததும் மற்றக் கலைஞர்களும் நடக்கத் தொடங்கவே விஜயகாந்த் இல்லாமலேயே ஊர்வலம் தொடங்கி விட்டது. கடைசியாக வந்த அணியில்தான் விஜயகாந்த் இருந்தார்.

* ஊர்வலப் பாதையின் இரு மருங்கிலும் திரண்டிருந்த ரசிகர்கள் கலைஞர்களைப் பார்த்துப் போட்ட கூச்சலால் நெய்வேலியே அதிர்ந்து போயிருக்கும். இதுவரை நெய்வேலியில் இல்லாத அளவுக்கு மிகப் பிரமாண்டமான பேரணி என்று கூறுகிறார்கள்.

* பொதுக் கூட்டத்தில் நடிகர் மன்சூர் அலிகான் இந்தியில் பேசியது அத்தனை பேரையும் கவர்ந்தது. கவர்ச்சி நடிகை மும்தாஜும், அவருக்குப் போட்டியாகக் களம் இறக்கப்பட்டுள்ள கும்தாஜும், அருகருகே நின்று கொண்டிருந்தனர். ஆனால், ஆளுக்கு ஒரு பக்கம் திரும்பிக் கொண்டிருந்தார்கள். காயத்ரி ரகுராமின் தலையைக் கோதியவாறும், கன்னத்தைக் கிள்ளியவாறும் மும்தாஜ கொஞ்சிக் கொண்டிருந்தது ரசிகர்களுக்கு எக்ஸ்ரா சந்தோசம்.

திரையுலகக் கலைஞர்களை மேடையில் அமர்ந்திருந்த மதுரை ஆதீனம்; வலியக் கூப்பிட்டு ஆசீர்வாதம் வழங்கி அனுப்பினார். வடிவேலு மட்டும் தான் பின் பக்கத்திலிருந்து கூப்பிடப் பட்டு ஆசீர்வாதம் பெற்றார்.

ராஜுசுந்தரம் குழுவைச் சேர்ந்த நடனக் குழுவினருக்கும் பொது மக்களிடம் நல்ல வரவேற்புக் கிடைத்தது.

அத்தனை கலைஞர்களும் கறுப்பு ஆடையில் வந்தனர். ஆனால், நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த் மட்டும் பளிச் வெள்ளை ஆடையில் வந்தார்.

நடிகர் எஸ்.எஸ். சந்திரன் பேசும் போது அத்தனை பேரும் நெளிய ஆரம்பித்தார்கள். அவரது பேச்சில் அத்தனை அம்மா வாசம்.

* கலைஞர்கள் கூட்டத்தைப் பார்க்க நெய்வேலியில் திரண்டிருந்த கூட்டம், இதுவரை திரையுலகினர் சந்தித்திராத பிரமாண்டமான கூட்டம் என்று திரையுலகினர் பெருமையாகக் கூறிக் கொண்டார்கள்.


## தோஹா கட்டார் வேலை வாய்ப்பு

தோஹா கட்டார் நாட்டில் உள்ள மிகப் பிரசித்தி பெற்ற ஸ்தாபனத்திற்கு கீழ்க்கண்ட வேலைகளுக்குத் தகுதியானவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். விருப்பமுடையோர் பாஸ்போட், போட்டோ 06, சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேர்முகப் பரீட்சைக்கு உடனடியாகக் காரியாலயத்திற்கு வரவும். வெளி நாட்டு ஸ்தாபனத்தின் முகவரால் தினசரி நேர்முகத் தேர்வு நடைபெறுக் கொண்டிருக்கின்றது. தேர்ந்தெடுக்கப்படுவோர் உடனடியாகச் செல்லலாம்.

| | | |
|---|---|---|
| எலெக்ரிக்கல் போர்மன் | Electrical foreman | - 1800 QR |
| மெக்கேனிக்கல் போர்மன் | Mechanical foreman | - 1800 QR |
| பெயின்டர் | Painter | - 750 QR |
| மேசன் | Mason | - 800 QR |
| எலெக்ட்ரீசியன் | Electrician | - 1000 QR |
| கார்ப்பென்ரர் | Carpenter | - 800 QR |
| பிளம்பர் | Plumber | - 1000 QR |
| எயார் கன்டிசன் மெக்கேனிக் | Air condition mechanic | - 1000-1300 QR |
| எயார் கன்டிசன் இஞ்சினியர் | Air condition engineer | - 4000 QR |
| கனரக வாகனசாரதி | Heavy vehicle driver | - 1200 QR |
| பூச்சி மருந்து தெளிக்கும் தொழிலாளர்கள் | Pest control Labour | - 600 QR |
| பூச்சி மருந்து தெளிக்கும் மேற்பார்வையாளர் | Pest control Supervisor | - 1000 QR |
| சேல்ஸ் இஞ்சினியர் | Sales Engineer | - 3500.4000 QR |
| பயர் மேன் | Fireman | - 900 QR |
| சிவில் இஞ்சினியர் | Civil Engineer | - 3000 QR |
| டிரா.:.ப்ட்ஸ்மன் | Draughts man | - 2175 QR |
| HVAC ரெக்னீசியன் (எயார் கண்டிசன்) | HVAC Technician | |

**நிபந்தனையும் ஒப்பந்தமும்**

2 வருட ஒப்பந்தம். அதன்பின் நீடித்துக் கொள்ள முடியும். சாப்பாட்டு அலவன்ஸ் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. தங்கும் வசதி, மருத்துவ வசதி இலவசம். 2 வருடம் முடிந்த பின் மீண்டும் வர டிக்கட் இலவசம்

அனுமதி இல: AL/ 701/ Advt/ 76 EXT, EXT 92, EXT 96, EXT 99, EXT 97- 89/ 2002

## துபாய் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

| | | |
|---|---|---|
| எலெக்ட்ரீசியன் | Electrician | - Dhs 800-900 +Food |
| பிளம்பர் | Plumber | - Dhs 800-900 +Food |
| பைப் பிட்டர் | Pipe Fitter | - Dhs 800-900 +Food |
| டக்ட் பொருத்துவோர் | Duct Insulation | - Dhs 800-900 +Food |
| எலக்ரிக்கல் ரெக்னிசியன் | Electrical Technician | - Dhs 800-900 |
| எயார் கன்டிசன் மெக்கேனிக் | Air condition mechanic | - Dhs 800- 900 |
| சமையல்காரர் | Cook | - Dhs 1250 +Food |
| வெயிட்டர்ஸ் | Waiters | - Dhs 500 +Food |
| துணி கழுவும் மேற்பார்வையாளர் | Laundry Supervisor | - Dhs 900 +Food |
| மேசன் | Mason | - Dhs 700 +Food |
| கார்ப்பெண்டர் | Carpenter | - Dhs 700 +Food |
| வெல்டர் | Welder | - Dhs 1000 |
| ரூம் போய்ஸ் | Room boys | - Dhs 600 +Food |
| எயார்லெஸ் ஸ்பிரே பெயின்ரர் | Airless spray painter | - Dhs 1200 |

## கார்ட் போட் செய்யும் தொழிற்சாலை

| | |
|---|---|
| பிரின்டிங் மெஷின் ஒப்பரேட்டர் | Printing Machine operator |
| கொருகேட்டட் ஒப்பரேட்டர் | Corrugated operator |
| டை கட்டர் ஒப்பரேட்டர் | Die cuttar operator |

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்

## Hotel vaccancies

| | | |
|---|---|---|
| ஹவுஸ் கீப்பர் | House Keeper | .- Dhs 600 +Food |

## கட்டடத் தளத்தில் வேலைகள்

| | | |
|---|---|---|
| வெல்டர் | Welder (Tig mig, arc.) | - Dhs 800 |
| மெக்கானிக் | Mechanic | - Dhs 950 |
| குஷன் செய்வோர் | Up Holster | - Dhs 900 |
| பெப்ரிகேட்டர் | Steel fabricator | - Dhs 950 |
| பிளாஸ்டர் பெயின்டர் | Blaster painter | - Dhs 900 |
| ரிக்கர் | Rigers | - Dhs 700 |
| வெல்டர் | Welder 6 a . | - Dhs 1200-1300 |
| கனரக சாரதி | H /V Driver | - Dhs 1500 |
| (துபாய் லைசென்ஸ் உள்ளோர்) | | |
| துப்பரவு செய்யும் தொழிலாளர்கள் | – Cleaners | - Dhs 450 |

2-3 வருட ஒப்பந்தம். சாப்பாட்டு அலவன்ஸ் சேர்க்கப்பட்டுள்ளது. மருத்துவம் தங்கும்வசதி இலவசம். 2 வருடம் முடிந்த பின் மீண்டும் வர டிக்கட் இலவசம். உடனடியாக நேரில் வரவும்

அனுமதி இலக்கம் AL 701/ Advt/ Ext 83, Ext 86, Ext87, Ext 93, 070, 076, 077, 079/ 2002

## தனா மேன்பவர் (பிரைவேட்) லிமிடட்

104, 2 ஆம் மாடி,
செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பே.இ. 075-333346-9

# ஸ்போர்ட்ஸ்

## சீனாவுக்கு 306 பதக்கங்கள்

## இலங்கைக்கு 6 பதக்கங்கள்

தொடர்ந்து 16 நாட்களாக தென்கொரியாவின் பூசான் நகரில் நடைபெற்று வந்த ஆசிய மெய்வல்லுனர் போட்டி திங்கட்கிழமை முடிவடைந்தது.

150 தங்கப் பதக்கங்கள் அடங்கலாக 306 பதக்கங்களைப் பெற்று சீனா போட்டித் தொடரின் முதலாவது இடத்தை இலகுவாகக் கைப்பற்றியது. இலங்கை ஆறு பதக்கங்களைப் பெற்று போட்டியில் கலந்து கொண்ட 43 நாடுகளுள் இருபத்திரண்டாவது இடத்தைக் கைப்பற்றிக் கொண்டது.




இலங்கை அணி 2 தங்கப் பதக்கங்கள் ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது. சுசந்திகா ஜெயசிங்க 100மீற்றர் ஓட்டப் போட்டியிலும் தமயந்தி தர்ஷா 400 மீற்றர் ஓட்டத்திலும் தங்கம் வென்றனர்.

இலங்கையின் சார்பில் 17 போட்டிகளுக்காக 119 வீரவீராங்கனைகள் கலந்து கொண்டபோதும் 6 பேர் மட்டுமே பதக்கங்களை வென்றனர். எதிர்பார்க்கப்பட்ட பல பதக்கங்கள் இலங்கைக்கு கிடைக்காமல் போயின. குறிப்பாக சுசந்திகா ஜெயசிங்கவின் 200 மீற்றர் போட்டி சுகத் திலக்ரட்ண, சிரியானி குலவங்ச மற்றும் 400X4 ஆண்களுக்கான அஞ்சல் போட்டி என்பவற்றில் பதக்கங்கள் எதிர்பார்க்கப்பட்டபோதும் அணிக்குள் நிலவிய ஒற்றுமையின்மை மற்றும் சில வீரர்களுக்கு ஏற்பட்ட காயம் காரணமாக பதக்கம் கிடைக்காமல் போய் விட்டது. இம் முறை போட்டிகளில் இந்தியா 7 வது இடத்தைக் கைப்பற்றி குறிப்பிடத்தக்க திறமை காட்டியது.

# அசைவில் ததும்பிய யௌவனம்

கதவை ஓசைப்படாமல் திறந்து உள்ளே வந்தான் ரூபன். உள்ளே அவன் கண்களுக்குத் தெரிந்த காட்சி அவனை நிலைகுலைய வைத்தது.

ஒளிநிலவைக் கட்டிலில் யாரோ உருக்கி வார்த்துவிட்டதைப் போலப் படுத்திருந்தாள் அஞ்சனா. அவளுடைய அனைத்து வகையான பாதுகாப்புகளையும் துறந்தவளாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். எஞ்சியிருந்த மெல்லிய பாதுகாப்புக் கவசங்களும் தங்கள் சுதந்திரம் வேண்டி ஆங்காங்கே பிரிந்திருந்தன.

மங்கிய ஒளியில் பிரகாசித்த அவள் அழகுகளில் கிறங்கியவனாக ஒரு நிமிடம் திகைத்து நின்றான் ரூபன்.

பின்னர் ஓசையெழுப்பாமல் மெல்ல நடந்து கட்டிலை நெருங்கினான்.

அவளுடைய நீண்ட கூந்தல் அவளுக்குப் பின்னால் தலையணையில் பரவிக் கிடந்தது. மென் மயிரிழை ஏதுமற்ற அவளுடைய மேனி மிருதுவாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. ஒரு மச்சமோ மறுவோ இல்லை. அவளுடம்பில் இன்னும் அவன் பார்வைக்குத் தரிசனமாகாத பகுதிகள் மிகச் சிக்கன அளவில் இருந்தன. இயற்கையின் கரங்கள் அவளுடலை நன்றாகச் செப்பனிட்டு அளவு மீறாத புஷ்டியையும், வேண்டிய இடங்களில் சிக்கனத்தையும், வளைவுத் திருப்பங்களுடனான வாளிப்பையும் அளித்திருந்தது. அதன் விளைவாக இடைக்கு மேலும் கீழும் தெரிந்த லேசாகப் பருத்த எழில் மேடுகளும், உருண்ட மணிக் கைகளும், புஷ்டியாகத் திரண்ட வனப்புடன் ஆரம்பித்துப் பிறகு சாட்டையைப் போல கீழே இறங்கிய கால்களும் பருவத்தின் செழிப்பைக் காட்டினவென்றால் மறைந்து கிடந்த அந்த செற்ப இடங்கள் எல்லையற்ற ஊகங்களுக்கு இடம் கொடுத்தன. "கைபுனைந்து இயற்றா கவின் பெருவனப்பு" என மனதுக்குள் வியந்து கொண்டான் ரூபன்.

அவள் தொடர்ந்து அமைதியாகவும், மெலிதாகவும் மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அந்த மெல்லிய அசைவில் அவள் யௌவனம் ததும்பியது. அவளிடமிருந்து ஒருவித இன்பச் செழுமை பொங்கிப் பெருகிக் கொண்டிருந்தது.

ரூபன் கட்டிலின் விளிம்பில் சென்றமர்ந்தான். ரோஜாவின் இதழ்களை ஞாபகப்படுத்தும் அவள் முக வனப்பைப் பார்த்த வண்ணமிருந்தான். எந்தவித சொரசொரப்புமற்ற சீரான வழுவழுப்புடன் ஒளிர்ந்து கொண்டிருக்கும் சருமம். அவள் வலது கை மடிந்து முகத்தருகே கிடந்தது. உதடுகளின் சிவப்பும், அவளுடைய நகங்களின் சிவப்பும் சேர்ந்து அந்த வெள்ளைத் தலையணையுறையின் மீது ஒரு செந்தொகுப்பை உருவாக்கியிருந்தன.

அளப்பரிய நெகிழ் தன்மையுடன் நீண்டிருந்த அவளது விரல்களை ஆசையாக முத்தமிட வேண்டும் என்ற வெறி எழுந்தது. அவள் விழித்து விடுவாள்...

அவளை இன்னும் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருக்க விருப்பமாயிருந்தது அவனுக்கு.

யௌவனம் கொப்பளிக்கும் அவள் மேனி முழுவதிலும் அவன் பார்வை படர்ந்தது.

இடுப்புப் பகுதிகளிலும் அவற்றின் கீழும் சதைப்பிடிப்பு வளமுடன் இருந்ததைப் பார்த்தான்.

அங்கெல்லாம் சீரான வழவழப்பு மின்னியது. மீண்டும் அவள் பளிங்கு முகத்தில் பார்வையை நிலைக்க விட்டான். எதிராளியை அலைக்கழித்துத் துன்புறுத்தக் கூடிய அவள் விழிகளிரண்டும் இமைகளால் மூடப்பட்டுக் கிடந்தன. சிற்பங்களுக்குச் செதுக்கியது போல் மூக்கு. சிவந்த ரோஜா இதழ்களைப் போலிருந்த சிறிய உதடுகள்



ஈரமுடன் பளபளத்தன. ரூபன் அந்தச் சின்ன உதடுகளுக்குப் பின் இருக்கும் வரிசைப் பற்களை நினைத்தான். மெதுவாகப் பிளந்திருந்த உதடுகளின் வழியே வெண் கோடாகப் பளீரிட்டதையும் பார்த்தான்.

அவளது முகத்தை நோக்கிக் குனிந்தான்.

அவளுடைய சுவாசக் காற்று ரூபனின் முகம் மீது இனிமையாகப் பட்டது. அதில் இனிய வாசனையிருப்பதாக உணர்ந்தான். அந்த வாசனையால் மேலும் கவர்ந்திழுக்கப்பட்டான். அவனது தோள் பகுதி ஊடாயும், பின்புறத்திலும் ஒரு சிலிர்ப்போடியது.

அவன் மூச்சுக் காற்றால் பாதிப்புற்றவளாகத் தன் உடலை மெல்ல அசைத்தாள் அஞ்சனா. அந்த அசைவு அவளை அவனுக்கு இன்னும் அண்மையில் நகர்த்தியது.

ரூபன் முகத்தைக் கீழே இறக்கி வந்தான். மேலாடையை இழந்திருந்த அவள் மார்பு அவனது மோவாயைத் தீண்டியது. அவனுக்குள் திடுமென தீப்பற்றிக் கொண்டதுபோல் ஆனது.

மூச்சை வெப்பமேற்றி, துரிதமாக்கும் அந்த பராக்கிரம வெறி அவனுள் எழுந்தது.

அப்படியே அணைத்து அவளைத் தன் உடலுக்குள் செலுத்திவிடவேண்டும் போலப் பரபரத்தான். உடலும் மனமும் வினோதமான போதாமையுணர்வில் தவித்தன.

தன் இரு கரங்களையும் அவள் முதுகுக்கும் பஞ்சணைக்கும் இடையில் செலுத்தி, முதுகுப்புறத்தை வளைத்து அவளைத் தன்னை நோக்கி இழுத்தான் அவன்.

அஞ்சனா அவன் பிடிக்குள் பின்புறமாக வளைந்து தொங்கினாள். கண்கள் மூடியபடி இருக்க, முகம் இன்பத் திளைப்பை வெளிக்காட்டியது. அந்தச் சிறிய இதழ்களில் சிரிப்புப் படர்ந்து கிடந்தது.

விழிப்பு இன்னம் ஏற்படவில்லை, கனவே தொடர்வதாக மயக்கத்திலாழ்ந்திருந்தாள். அஞ்சனா.

ரூபன் அவளுடைய முதுகுத் தண்டின் குழிவுகளில் அளைந்து துழாவினான். அவளுடைய மிருதுவான மூச்சுக் காற்று அவன்மேல் இதமாகப் படர்ந்தது.

மார்புக்குள் அவன் இதயம் தன் சிறகுகளைப் படபடவென்று அடித்துக் கொள்வதைப் போலிருந்தது.

ஐம்புலன்களிலும் வாசனைதான் விரைவாக உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழ வைப்பது என்று சொல்லியிருப்பதில் உண்மை இருப்பதை உணர்ந்தான்.

அவளிடமிருந்து பரவும் நறுமணத்தில் மெதுவாக மிதந்தலைந்து இறங்குவதைவிட அதிகமான சந்தோசம் வேறெதுவும் இருக்க முடியாது என்று தோன்றியது ரூபனுக்கு.

அவளைத் தன்னுடன் சேர்த்துக் கைகளை இறுக்கினான். அவளது மார்புப் பகுதி அவன் மார்பில் தட்டையாக அழுந்திப் பதிந்தன.

அஞ்சனா ஒரு சொர்க்க மறதியிலிருந்தாள். அவளை மறுபடி பஞ்சணையில் மெல்லக் கிடத்தினான். கைகளை அகற்றாது அவள் மீது பரவி, தன் முகத்தை அவள் கூந்தலினுள் புதைத்தான்.

அவள் உடலை நெளித்துக் கைகளை அசைத்தாள். இன்னும் வசதியாகத் தன்னைக் கிடத்திக் கொள்ளவே அவள் அவ்விதம் அசைகிறாள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

தேன் மாந்திய திளைப்பில் அவள் முகபாவம் இருந்தது. அவள் தோளில் சாய்த்திருந்த தலையை ரூபன் மெல்லப் பின்னிழுத்து மார்பில் புதைத்தான்.

அஞ்சனாவுக்கு விழிப்பு கண்டது.

கண்களைத் திறந்து அவன் தன் மார்பில் தலை வைத்துப் படுத்திருப்பதைப் பார்த்தாள்.

அவன் தலைமுடிக்குள் விரல்களை நுழைத்து, இப்போது தான் கனவு கண்டுகொண்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தித் திடுக்கிட்டாள்.

கனவிலே வந்து தோளில் சாய்ந்திருந்தவர், விழித்த பிறகும் எங்கும் போய்விடாமல் மார்பில் தங்கியிருப்பதை வியந்தாள்.

துஞ்சுங்கால் தோள்மலர் ஆகி
விழிக்குங்கால்
நெஞ்சத்தவர் ஆவர் விரைந்து.
(குறள்: 1218)

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

# சிந்தியா பதில்கள்

★ நமது பிழைகளைப் பற்றி ஒரு மூச்சும் காட்டாதிருப்பதில் கவனமாயிருக்கும் நம் தமிழ்ப் பத்திரிகைகள் இந்தியப் பத்திரிகைகளை வாங்கு வாங்கென்று வாங்குவதில் காட்டும் உற்சாகத்தைப் பற்றி உங்கள் பதிலில் குறிப்பிட்டிருந்த தற்குதினப் பத்திரிகை ஒன்றில் எதிர்வினை செய்திருந்தார்களே பார்த்தீர்களா?

எம்.எம்.எம். இர்ஷாட், கொழும்பு-10.

பார்த்தேன். யாரோ ஒருவருக்காவது உறுத்தியிருக்கிறதே என்று சந்தோசம்தான்.

★★

★ எனக்கு இந்தக் காதல், கல்யாணம் இரண்டிலும் நம்பிக்கையே இல்லை. எனது கருத்து நூறு வீதம் சரியானது தானே?

பி.பானு, மட்டக்களப்பு.

இப்போதைக்கு மரணம் ஒன்றின் உண்மையைத் தவிர மற்ற எதையும் நூறு வீதம் சரியானது என்று சொல்வதற்கில்லை. காதல், கல்யாணம் என்பதெல்லாம் ஐம்பது சதவீத உறுதியும் வைக்க முடியாத சங்கதிகள்.

★★

★ பாதுகாப்புப் படையினர் தரப்பில் மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் தரப்பிலும் போர் ஓய்வை விரும்பாதவர்கள் இருக்கிறார்கள் என்று தலைவர் சொல்லியிருக்கிறாராமே?

வெ. சண்முகானந்தன், தெகிவளை.

கட்டுப்பாட்டுக்குப் பேர்போன அமைப்புக்குள் இருக்கும் அந்தச் சமாதானத்தை விரும்பாத பிரவினர் சிரித்துக் கொள்ளட்டும்!

★★

★ மீண்டும் பாரளுமன்றத் தேர்தல் வரப்போகிறதா?

க.சுதர்ஷன், ஹப்புத்தளை.

அப்படித்தான் தோன்றுகிறது.

★★

★ காஞ்சிரங்குடாவிலும், திருமலையிலும் பத்துப் பேர் இறந்திருக்கிறார்களே... சிந்தியா, இது யார் பிழை?

வி.குகப்பிரியன், நீர்கொழும்பு.

சுட்டது அரச படை, செத்தது தமிழ் மக்கள். பிறகு யார் பிழை என்று என்ன இது கேள்வி? உங்கள் கேள்வியிலேயே துரோகத்தனம் தெரிய ஆரம்பிக்கிறது, கவனம்!

★★

★ வீட்டில் பெற்றோரின் வற்புறுத்தலால் திருமணம் செய்யச் சம்மதித்திருக்கிறேன். சிந்தியா, உண்மையில் ஆண் துணை அவசியம்தானா?

எஸ்.ப்ரியா, கண்டி.

இப்படிப் பளீரென்று கேட்டால் என்ன சொல்வது...பொதுவாக, கணவர் என்பவர் உங்களுக்கு வரும் கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ள உங்களுடன் துணையாக இருக்கப் போகிறவர் என்று சொல்லலாம். (நீங்கள் தனியாக இருந்தால் அந்தக் கஷ்டங்களே வராது என்பது வேறு விஷயம்.)

★★

★ காதலின் சின்னம் இதயம் என்பது போல், நட்பின் சின்னம் என்ன?

எம்.ரி.எம்.யூனூஸ், காத்தான்குடி-01.

அதுவும் இதயத் தொடர்பானது தான். இருந்தாலும் இரண்டு பேருக்கு ஒரே சின்னத்தை ஒதுக்க முடியாது என்பதால், வள்ளுவரிடம் கேட்டு 'கை'யை வைத்துக் கொள்ளலாம், சம்மதமா?



★ 'த்ரீ ரோஸஸ்' மூன்று பெண்களின் சண்டைப் படமாமே! ஜோதிகாவால் எப்படிச் சண்டை போட முடியும்?

ஜீவிதா சிவபாலன், கல்கிசை.

ஏன், ஜப்பானிய 'சுமோ' சண்டையை நீங்கள் பார்த்ததில்லையா!

★★

★ அனேகமாக எல்லா வானொலி நிலையங்களிலும் ஒரே விதமான நிகழ்ச்சிகளையே பல்வேறு பெயர்களில் ஒலிபரப்பி வருகிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து?

க.வாசன், தலவாக்கலை.

வேறென்ன செய்ய முடியும்? ஒரே சினிமாப் பாடல்கள் தானே எல்லோரிடமும் இருக்கின்றன.

★★

★ சிந்தியா! வேலை தேடி அலைகிற வர்களுக்கு ஒரு நல்ல வழி சொல்லுங்களேன்?

க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று-07.

கவலையில் நடு றோட்டால் சென்று விடாமல், ஓரமாக நடந்து செல்லுங்கள்!

★★

★ அன்பின் சிந்தியா, ஈழத்துக் கவிஞர்களில் உம்மைக் கவர்ந்தவரின் கவி வரிகள் சிலது தருவீரா?

த.அஜந்தகுமார், வதிரி.

புதிய புதிய அனுபவங்களை, இது வரை சொல்லப்பட்ட முறைகளிலே அல்லாமல் புதியதாய் வெளிப்படுத்த வேண்டும் என்கிற சவால், இன்று எழுதும் இளைய கவிஞர்களின் முன்னால்.

அண்மையில் 'மனிதனோடு நடந்த படி...', என்ற தனது கவிதைகளின் தொகுப்பை வெளியிட்டிருக்கும் கவிஞர் உவைஸ் கனி, தன் நம்பிக்கையைச் சொல்லியிருந்த விதம் அசர வைத்தது. கவிதைத் தலைப்பு 'பாறைகள்'.

*செங்குருதி*
*முகத்தால் வழிந்தோட*
*பின்புறத்தால்*
*கைகள் கட்டப்பட்டவனை*
*தின்னச் சொன்னார்கள்*

*குற்றமற்றவனின் வலிமை*
*களைப்படையாமல்*
*இருப்பது அறியாமல்.*

★★

★ என் அபிமான நடிகர் அர்ஜுனின் முகவரி தருவீர்களா?

எம்.ஜெயகாந்தன், கிறைன் எஸ்டேட்.

B 3, C- Block, 109,
G.N. Chetti Road,
Chennai - 600 017.

★★

# மன்னாதி மன்னன் 126

## பறவைகளைக் காத்த பேரரசன்

இராஜகுமாரன்

விக்கிரமாதித்த மாமன்னரின் அரியணையில் உள்ள படிகளில் ஒவ்வொன்றாக ஏறி இருபத்திமூன்றாவது படிக்கட்டில் போஜ மன்னர் காலடி எடுத்து வைத்ததும் அப் படிக்குக் காவலாக இருந்த அபரஞ்சிதவல்லிப் பதுமை மாமன்னரின் பராக்கிரமச் செயல்கள் நிறைந்த கதை ஒன்றைக் கூறியது.

நாடாறு மாதம் ஆட்சியை முடித்துக் கொண்டு மாமன்னர் காடாறு மாதம் செல்வதற்குப் புறப்பட்டார். அமைச்சர் பட்டியிடம் ராஜரீகப் பணிகளை ஒப்படைத்துவிட்டு மன்னர் விடை பெற்றார். காடு மலைகளைக் கடந்து சென்ற மன்னர் கானகத்தின் நடுவில் இருந்த பெரிய ஆலமரம் ஒன்றின் கீழ் அமர்ந்து ஒய்வெடுத்துக் கொண்டிருந்தார். அந்த மரத்தின் மீது ஏராளமான பறவைகள் ஒன்று கூடி இருந்தன. அப் பறவைகளின் தலைவனான சஞ்சீவி எனும் கருடன் பறவைகளுடன் உரையாடிக் கொண்டிருந்தது. பறவைகள் மற்றும் மிருகங்கள் ஆகியவற்றின் உரையாடல்களை அறியும் ஆற்றல் படைத்த விக்கிரமாதித்த மன்னர், கருடன் கூறிய கதைகளைச் செவிமடுத்தார். அப்போது அக் கருடன் உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தைப் பற்றிக் கூறத் தலைப்பட்டது.

அப்போது மன்னரும் கவனமாகக் காது கொடுத்துக் கேட்டார். உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தின் சிறப்புகளைப் பற்றிப் பெரிதும் பாராட்டியது. அந்தப் பட்டணத்தை ஆட்சி புரியும் விக்கிரமாதித்த மாமன்னர் நீதி தவறாது ஆட்சி புரிபவர் என்றும், அந்த நாட்டில் மாதம் மும்மாரி பொழிகிறது என்றும், மக்கள் எந்தத் துன்பத்திற்கும் ஆளாகாமல் மிக்க மகிழ்ச்சியாக வாழ்கின்றனர் என்றும் கூறியது. இக் கதையைக் கூறிய கருடன் "பறவைகளே! இந்தக் காட்டில் வாழும் அரக்கன் ஒவ்வொரு நாளும் நூறு பறவைகளைக் கொன்று தின்கிறான். இதனால் எமது பறவை இனமே விரைவில் அழிந்து போக நேரிடும். இந்த அரக்கனைக் கொல்வதானால் விக்கிரமாதித்த மாமன்னரைத் தவிர வேறு எவராலும் முடியாது. ஆகவே நாளை காலை நாம் எல்லோரும் பறந்து சென்று உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தில் விக்கிரமாதித்த மாமன்னனைக் கண்டு, இந்த அரக்கனை ஒழித்துக் கட்டி எமது பறவையினத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று வேண்டுவோம்." என்று கூறியதும் பறவைகள் அனைத்தும் கருடனின் ஆலோசனைக்குத் தமது ஒப்புதலை அளித்தன.

இவ்வாறு மரத்தின் மேல் இருந்த பறவைகள் கூறியதும் காட்டுக்குள் பயங்கரமான ஒலி ஒன்று எழுந்தது. காட்டெருமை ஒன்று பயந்த வண்ணம் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. அதன் பின்னால் இராட்சதன் ஒருவன், அவ்வெருமையைக் கொன்று தின்பதற்காகத் துரத்திக் கொண்டு வந்தான். மர நிழலில் அமர்ந்திருந்த மாமன்னர் விக்கிரமாதித்தன் மரத்தின் மீதிருந்த பறவைகளின் துயரத்தைப் போக்குவதெப்படி என்று சிந்தித்துக் கொண்டிருந்தார். அதே வேளையில் அந்தக் கொடிய அரக்கன் மாமன்னரின் முன்னே காட்டெருமையைத் துரத்திக் கொண்டு வந்ததைக் கண்டதும் "இதுவே சரியான சந்தர்ப்பம்" என்று கருதி அவரிடம் இருந்த மந்திரவாளை உருவி இராட்சதன் முன் பாய்ந்து அவனின் சிரத்தை அறுத்தெறிந்தார்.

மரத்தின் மீதிருந்த பறவைகள், அவைகளின் முன்னிலையிலேயே அரக்கன் மாண்டு போனதைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்தன. இந்த அரிய செயலைப் புரியக் கூடிய ஒருவர் விக்கிரமாதித்த பூபதியைத் தவிர வேறு எவரும் இல்லை என்று கருதியவாறு அத்தனை பறவைகளும் மரத்தை விட்டுக் கீழே இறங்கி மன்னரை வணங்கித் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டன. அப் பறவைகளைப் பார்த்த விக்கிரமாதித்த மன்னர் "பறவைகளே! நீங்கள் அனைவரும் இனிமேல் எந்தவிதமான அச்சமும் இன்றி இங்கேயே மகிழ்ச்சியாக வாழலாம்" என்று கூறித் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

இக் கதையைப் போஜ மன்னரிடம் கூறிய அபரஞ்சிதவல்லிப் பதுமை, "இத்தகைய அருளுள்ளம் படைத்தவராக நீர இருந்தால் தாராளமாக இவ் அரியாசனத்தில் ஏறி அமர்ந்து பரிபாலனம் செய்யலாம்" என்று கூறியதும், பொழுது சாய்ந்து விட்டமையினால் போஜ மன்னர் தனது அரண்மனைக்குத் திரும்பினார்.

அடுத்த நாளான இருபத்திநான்காவது நாள் அதிகாலையில் போஜமன்னர் தமது காலைக் கடன்களை முடித்து விட்டு அரியணையில் ஏறும் நோக்குடன் அரியணை இருந்த மண்டபத்தை அடைந்தார். முறைப்படி அரியணைக்குரிய பூஜைகளை முடித்து பூசகர்களையும், பரிவாரங்களையும் அனுப்பிவிட்டு அரியணையின் படிகளில் ஏறத் தொடங்கினார்.

இருபத்திநான்காம் படிக்குக் காவலாக இருந்த மனோரஞ்சிதவல்லிப் பதுமை போஜ ராஜனை இடை மறித்தது. "விக்கிரமாதித்த மாமன்னர் சகல துறைகளிலும் ஒப்பு நோக்க முடியாத ஆற்றல் படைத்தவராக இருந்தார். அவர் பெரும் கொடையாளியாகவும் இருந்தார் என்பதை விளக்கும் கதை ஒன்றினைக் கூறுகிறேன். அத்தகைய ஆற்றல் உம்மிடம் இருக்குமானால் நீர் தாராளமாக மேலே சென்று அரியணையில் அமரலாம்," என்று கதையைக் கூறத் தலைப்பட்டது.

"உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தில் விக்கிரமாதித்த மாமன்னர் நீதி நெறி தவறாது பரிபாலனம் செய்து கொண்டிருந்த காலத்தில் இலட்சுமி சன்மானன் என்ற ஓர் அந்தணன் இருந்தான். விக்கிரமாதித்த மன்னரைப் போல் சன்மானனும் காளிகாம்பிகா மீது பக்தி செலுத்துபவன். இவன் பல காலம் காளிகாம்பாளைத் தியானித்துத் தவமியற்றினான்.

இலட்சுமி சன்மானன் முன் தோன்றிய காளிகாம்பாள், தவமிருந்த அந்தணனை நோக்கி "இன்று மாலையே அரண்மனையிலுள்ள வசந்த மண்டபத்துக்குச் செல். அங்கு வசந்த மண்டபத்தில் அரச சபையினர் கூடியிருப்பர். அப்போது விக்கிரமாதித்த மன்னரிடம் உன் குறையை நீக்கும்படி கோரினால் அம் மன்னன் உனக்கு வேண்டியவற்றைத் தருவான்" என்று திருவாய் மலர்ந்தருளினாள்.

அம்பாள் கூறியபடி சன்மானன் வசந்த மண்டபத்துக்குச் சென்று மன்னரை வணங்கியதும், அவனைத் தக்கபடி வரவேற்ற மன்னர், சன்மானனுக்கு அவன் கேட்காமலே வேண்டிய அளவு பொன்னும் பொருளும் அளித்து அனுப்பி வைத்தார்." இக் கதையைக் கூறிய மனோரஞ்சிதவல்லிப் பதுமை, "போஜ மன்னரே, இத்தகைய அருங்குணம் சிறிதளவேனும் உம்மிடம் இருக்குமானால் அரியணையில் நீர் உமது விருப்பம் போல் ஏறி அமரலாம்" என்று கூறியது. போஜ மன்னர் தலைகுனிந்த வண்ணம் தமது அந்தப்புரம் நோக்கிச் சென்றார்.

(மன்னன் வருவான்...)

## காதில பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

காவிரி போராட்டத்துல குதிச்சிருக்கிற எங்கட நடிகர்கள் அத சினிமா வசனமாப் பேசினா எப்படியிருக்கும்- ஒரு கற்பனை.

கமல்: ஆத்தா ஆடு வளத்தா கோழி வளத்தா. ஆனா நெல்லு வளக்கல? ஏன்னா, இவுங்க காவேரிய எப்பவாவது ஒருநாள் தடுப்பாங்கன்னு அப்பவே ஆத்தாவுக்குத் தெரியும் மயிலு. அதாலதா என்ன வளத்தா. நாந்தா மயிலு நெல்லு...

ரஜனி: மாயா மாயா! எல்லாம் மாயா!
சாயா சாயா. எல்லாம் சாயா!
தொட்டும் தொடாமலே....,
பட்டும் படாமலே....
காவிரி ஆற்றுத் தண்ணீர் போல்
சொட்டுச் சொட்டாயிரு.

கார்த்திக்: காவேரி! ஓ, மை கோட்! நா.... நா.... என்னால... நம்பவே முடியேல்லை. நம்ம காவேரியா? அது... அது... நான் என்ன சொல்லிறதெண்ணே தெரியல்ல. நா எப்பிடி அத... வந்து... இல்ல, காவேரிக்கு வர இஷ்ட முன்னா... நோநோ.. வரட்டுக்கும். எனக்கு... ரெம்ப,.. இல்லை, ரெம்ப ரெம்ப சந்தோஷம். என்ன..? காவேரி எங்கிறது ஒரு பொண்ணில்லையா, ஆத்தைப் பற்றியா பேசிறீங்க. ஐ ஆம் சொறி. ஆறு. யெஸ்! ஆறு... வந்தாத் தான்... நம்ம எல்லோருக்கும் ஆறுதல்!

பிரபு: காவிரியா, என்னங்க, இது ரெம்ப அநியாயங்க. காவிரி நம்ம நாட்டுத் தண்ணிங்க. அத ஏங்க கூறு போடணும்? தமிழ்நாடா இருந்தாலென்ன, கர்நாடகாவா இருந்தாலென்னரெண்டும் இந்தியா தானேங்க. நிலத்தைப் பிரிச்சீங்க, நீரையுமா பிரிக்கிறீங்க. இந்தியன்னு சொல்லிக்க வெக்கமா இல்லை. சீ. தூ... பாவிங்களா....

விஜயகாந்: தமிழனுக்குத் தண்ணீர் தர மாட்டாங்களா? இந்த மாதிரி ஆளுகளாலதான் நாடே கெட்டுப்போயிருக்கு. ஏன்டா, எங்கட தமிழ்நாட் டுக் கடல் நீர் ஆவியாகிப் போய்தானே கர்நாடகாவில மழை பெய்யுது? நாங்க யாரும் தடுத்தோமாடா மேகத்தை? நீங்க ஏன்ரா தண்ணியத் தடுக்கிறீங்க? மனிசனா ஒழைச்சுப் பிழையுங்கடா. சும்மா தூங்கிட்டிருக்கிற சிங்கத்தத் தூண்டா தேங்க. பிறகு உங்களுக்குத்தான் வம்பு.

விவேக்: என்னாங்க? ஆ... விளங்கல....? அட, தண்ணிப் பிரச்சினையா...? அதுக்கா இம்மாம் பெரிய கூட்டம்? ஏந் தாத்தா கூடத்தான் தண்ணியடிப்பாரு. தண்ணியில்லேன்னா இவுங்கள ப் போலவா கூச்சல் போட்டுகிட்டு ஊர்வலம் போவாரு? இதோப் பாருங்க. தண்ணி வேணு முன்னா, நா சொல்லுற ஐடியாவக் கேட்டுக்குங்க. அதுபாருங்க, நம்ம ஆச்சியிருக்காங்க பாருங்க. அவுங்க, அடுத்த வருஷக் கோயில் தேருக்குன்னு உண்டியல் சேத்துகிட்டு வருவாங்க. நீங்க என்ன பண்ணுறீங்கன்னா, ஆச்சி அடுத்த வீட்டுக்கு ஊர்வம்பு பேசக் கௌம்பியிருக்கிற சமயம், அந்த உண்டியல எடுத்து, மல்லாக்காப் படுத்து, உண்டியல தலைகீழாக் கவுத்து, ஹெயர் பின் ஒன்ன உள்ள வீட்டு நோண்டுறீங்க. சில்லறை ஒண்ணொண்ணாக் கொட்டறப்ப, அத ஒண்ணொண்ணா சேத்து, ஒரு டுவென்ரி ருபீஸ் சேந்தப்புறம், முச்சந்திச் சாராயக் கடைக்குப் போயி, ஒரு இருநூறு மில்லி வாங்கி குப்புன்னு அடிச்சுப்புட்டு, ஒரு வெத்திலைய மடிச்சு வாய்க்க போட்டு கிட்டிங்கண்ணா ரெண்டாம் பேருக்கும் தெரியாது. தாத்தாவோட டெக்னீக் இதுதா. தண்ணி இல்லேன்னு சொல்லி ஊர்வலம் போறத வுட்டுட்டு கொஞ்சம் கிட்னிய யூஸ்பண்ணுங்கய்யா!

கோவை சரளா: இந்தாப் பாரு வடிவேலு, இன்னிக்கு நீ எனக்குப் பஞ்சுமிட்டாய் வாங்கித் தரல்ல, இந்தப்படியே போய் காவிரில குதிச்சுப்புடுவே.

வடிவேலு: அடியம்மா, பஞ்சுமிட்டாய்க்கெல்லாம் போயி காவிரில விழலாமா? நா அண்ணேன்னு இருக்கேன் ஓடிப்போய் வாங்கியாந்திட மாட்டேனா? பொறுமையா இரும்மா, என் கண்ணுல்ல.

சரளா: பஞ்சுமிட்டாயோட சமாளிச்சுப்புடலா முன்னு பாத்தியா, அது போதாதுமேன். என்னைய இன்னிக்கு மெட்னி ஷோவுக்கு கூட்டிக் கிட்டுப் போறதா சத்தியம் செய்யல, இந்தா, நா இந்தப்படியே ஓடிப்போய் காவிரியில குதிச்சுப் புடுறே.

வடிவேலு: ஐயோ, ஐயோ, தாயி, இதென்னம்மா? மெட்னி ஷோவுக்கெல்லாம் போயி தற்கொலை பண்ணிக்கலாமா? இந்தாம்மா. ஒரு ஷோ தானே, அண்ணனா இருந்து இதுக்கும் கூட்டிகிட்டு போகலேன்னா மனுஷனா. நீ இரும்மா நா இன்னிக்கே கூட்டிகிட்டு போறேன்.

சரளா: ஏ, ஒரு ஷோவோட ஒழிஞ்சு துன்னு பாத்தியா? ஷோவுக்கு போறதுன்னா, ஒரு பட்டுப் புடவை வாங்கித் தந்தாத்தானே நான் கட்டிக்கிட்டுப் போவே. நீ இப்ப எனக்குப் பட்டுப் புடவை வாங்கித் தரல்ல, ங்ஙே....ஏ நா, நா, இந்தப்படியே ஓடிப்போய், ங்ஙே...

வடி: அட, ஏம்மா அழுறே. நீ அந்தப்படியே ஓடிப்போயி இந்தக் காவிரி ஆத்துக்குள்ள விழப் போறேன்னுதானே சொல்ல வாறே? விட்டுடுவனா? இல்ல விட்டுடுவனா இந்த அண்ணன் காறன்? ஒரு பட்டுப்புடவை! கொஞ்சம் கோஸ்ட்லி தான். போனாப் போகுது. ம் தலைய வித்தாவது வாங்கித் தாரன் கண்ணு. நீ அழுவாத. இதுக்கு..., அட இதுக்குப்போய் ஆத்தில வீழறேங்கறேபாரு, அதத்தா இந்த அண்ணனால தாங்கிக்க முடியலம்மா.

சரளா: அப்ப, தங்க நெக்லசு?

வடி: என்ன தங்கநெக்லசா, இம்மாம் பணத்துக்கு நா எங்கடிபோவேன்? அம்மா. நா, இம்புட்டும் தாறேங்கறனில்ல, நெக்லசை விட்டுடும்மா?

சரளா: அப்ப நா இந்தப்படியே போயி காவிரில வீழுந்திடறேன்.

வடி: அம்மா, தாயி, நில்லம்மா, அண்ணன் கெஞ்சிக் கேக்கிறனில்ல. கேளம்மா,

செந்தில்: ஏன்ரா வடிவேலு தங்கச்சிகிட்ட இம்புட்டு வழியிறே?

வடி: அடே செந்தில். கெடுத்திடாதடா. அவ பம்பாய் மிட்டாய், மெட்னி ஷோ, பட்டுப் புடவை, தங்க நெக்லஸ் இதெல்லாம் இல்லீன்னா காவிரியில விழுந்து தற்கொலை செய்துக்கப் போறேன்னுகிட்டு நிக்கிறா!

செந்தில்: என்ன, காவிரியா? அதிலதா தண்ணியே இல்லியே?

வடி: அட, அதுவா மெட்டர்? எடியே சரளா, தண்ணியில்லாத ஆத்தக் காட்டியா என்னை பிளாக் மெயில் பண்ணப் பாத்தே. இந்தா உனக்கு உதையில தாறன் வாங்கிக்க. வாடி!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

## இந்தவாரம் உங்கள் பலன்

13.10.2002 தொடங்கி 19.10.2002வரை

சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

துலாம்– சூரியன், வெள்ளி, விருட்சிகம்–கேது, இடபம்–இராகு, மிதுனம் – சனி, கர்க்கடகம்–வியாழன், கன்னி–புதன், செவ்வாய். சந்திரன் மீனம், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக் குழப்பம் தீரும். தொழில் உயர்ச்சியுண்டாகும். பொருள் வரவில் இருந்து வந்த தடை நீங்கும். உத்தியோகத்தர்கள் எதையும் சாதுரியமாக முடிப்பர். மாணவர் கல்வி நிலை உயர்ச்சி பெறும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 2.

**இடபம்,**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் நன்மை. காரியானுகூலம். பிரயாண மிகுதி. தேகசுகம் பாதிப்பு. உத்தியோக நிலையில் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளல். மாணவர்கள் கல்வியில் மந்தம் உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல: 4.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) பெரியோர் பகை. மனக் கலக்கம். இனசன மகிழ்ச்சி. பணக் கஷ்டம். உத்தியோகத்தில் சிலருக்குத் திடீர் மாற்றம். மாணவர்கள் கல்வியில் மேன்மை உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளால் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல்.: 7.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் மந்தம். பணவரவு முடக்கம். செலவு மிகுதி. குடும்பத்தில் பிரச்சனை உண்டு. உத்தியோகத்தர்கள் கவனமுடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த தொல்லைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) குடும்பத்தில் மகிழ்ச்சியும், அன்னியர் உதவியும் உண்டாகும். வார இறுதியில் திடீர் செலவுக்கு இடமளிக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும். மாணவர்களுக்குக் கல்வியில் மந்தநிலை தொடரும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 1.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) பெரியோர் பகை. மனக் கிலேசம். குடும்பத்தில் வைத்தியச் செலவு. உத்தியோகத்தர்கள் இழந்த பதவியைப் பெறுவர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 3.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) குடும்பத்தில் மகிழ்ச்சியின்மை. பிள்ளைகளால் கவலை. செலவு மிகுதியுண்டு. உத்தியோகத்தர்கள் எதிலும் கவனமுடன் செய்வது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த தேக்க நிலை மறையும். விவசாயிகள், வியாபாரிகள் நன்மையடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் நிலையில் அவதானம் தேவை. பணவரவு தடைப்படும். வெளியிடப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடக்கவும். மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 4.

**தனு**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் கஷ்டம். வீண் பகை. செலவு மிகுதி. பெரியோர் வார இறுதியில் உதவுவர். உத்தியோக நிலையில் மனக் கலக்கம். மாணவர் கல்வியில் தடைகள் உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் நன்மை. புண விரயம். வீண் பிரயாணம். அன்னியர் பகையுண்டு. உத்தியோக ரீதியாக சில தொல்லைகள் சேரும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளால் அற்ப இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் நிலையில் அவதானம் தேவை. வீண் பிரச்சனைகள் தோன்றும். பணவரவு சுமாராக அமையும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளால் உதவி பெறுவர். மாணவர்களுக்குக் கல்வித் தடை விலகும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் கவனமுடன் செயற்படுவது நல்லது.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 3.

**மீனம்**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) பொருள் விரயம். மனக் கவலை. தொழில் மந்தம். குடும்பத்தில் மகிழ்ச்சியின்மை உண்டு. உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு


சீதையை இலங்கை மன்னன் இராவணன் கடத்தி வந்தபோது அவரை இங்கிருந்து மீட்டுச் செல்வதற்காக அனுமானை இராமன் அனுப்பி வைத்த இதிகாசக் கதை சிறு பிள்ளை முதல் யாவரும் அறிந்ததே.

இராமர் இலங்கை வருவதற்காகப் பாக்கு நீரிணையைக் கடப்பதற்கு ஏதுவாக இலங்கையையும் இந்தியாவையும் இணைத்து அணை ஒன்றை நிர்மாணித்ததாக இராமாயண இதிகாசத்தில் கூறப்படுகின்றது.

'இராமர் அணை' எனக் குறிப்பிடப்படும் இது, சுமார் 17 இலட்சத்து 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இராமாயணக் கால கட்டத்தில் அனுமானாலும் அவரது வானரப்படைகளாலும் நிர்மாணிக்கப்பட்டதெனவும் இதற்கு அணில் உதவி செய்ததாக உபகதைகள் பலவும் உண்டு.

எவ்வாறெனினும் இந்தக் கதை இதுவரை காலமும் ஒரு நம்பிக்கை சார்ந்த இதிகாசக் கதையாகவே இருந்து வந்தது. ஆனால் தற்போது அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா, அதன் அதி நவீன செய்மதிகளால் எடுக்கப்பட்டதாகக் கூறி சமீபத்தில் வெளியிட்டிருக்கும் சில புகைப்படங்கள், இலங்கை இந்திய கடற்பரப்புக்கு மத்தியில் அணை போன்ற தீரடிப் பாதை ஒன்று காணப்படுவதைத் தெளிவாகக் காட்டுகின்றது.




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்காது வண்ண நகைகள் பின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு


# இராமர் அணை






# கறுத்த தங்கம்

இந்த ஒட்ட வீராங்கனையைத் தெரியாத இலங்கையர்கள் இருக்க முடியாது. நலிவடைந்து போயிருந்த இலங்கையின் மெய் வல்லுநர் போட்டித் துறையை ஒரு புதிய திசையில் திரும்பச் செய்தவர் சுசந்திகா ஜயசிங்க. இதுவரை காலமும் சர்வதேச அரங்குகளில் கிரிக்கெட்டைத் தவிர வேறு விளையாட்டுத் துறையில் இலங்கையைப் பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை.

1996ம் ஆண்டு ஏதன்ஸ் நகரில் 200 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றதோடு இலங்கை மீதும் சுசந்திகா மீதும் சர்வதேச விளையாட்டுத் துறை அதிகாரிகளின் கவனம் திரும்பியது.

அதன் பின்னர் இன்று வரையில் ஏராளமான பதக்கங்களை சர்வதேசப் போட்டிகளில் சுசந்திகா வென்றுவிட்டார். சுமார் அரை நூற்றாண்டு காலத்திற்குப் பின்னர் ஒலிம்பிக் போட்டியில் அவர் பெற்ற வெண்கலப் பதக்கம், இலங்கையின் மெய் வல்லுநர் போட்டி வரலாற்றில் மிக மிக மகிழ்ச்சிக்குரியதும் கௌரவமானதுமான நிகழ்வாகக் கருதப்பட்டது.

கடந்த வாரம் தென்கொரியாவின் பூசான் நகரில் இடம்பெற்ற ஆசிய மெய்வல்லுநர் போட்டியிலும் 100 மீட்டர் ஓட்டத்தில் சுசந்திகா தங்கப் பதக்கம் வென்றார். அவரது காலில் ஏற்பட்ட காயத்தினால் துரதிஷ்டவசமாக 200 மீட்டர் ஓட்டத்தில் அவரால் கலந்துகொள்ள முடியாமல் போயிற்று.

அடிக்கடி சர்ச்சைகளில் சிக்கிக் கொள்ளும் சுசந்திகா அரசியல்வாதிகள் பலருடன் நேரடி மோதலில் ஈடுபட்டவர். போட்டிகளின் போது அவர் காட்டும் திறமை போலவே சர்ச்சைகளின் போது சுசந்திகா வெளிப்படுத்தும் மனத் துணிவும் பலரால் பாராட்டப்பட்டது. அடுத்த ஒலிம்பிக் போட்டியில் இலங்கைக்குத் தங்கம் வென்று தருவேன் என்று இப்பொழுதே உறுதியாகக் கூறும் சுசந்திகாவுக்கு அமெரிக்க பயிற்றுவிப்பாளர் டொனி செம்பல் முறையான பயிற்சிகளை வழங்கி உறுதுணையாக இருந்து வருகிறார். கடந்த காலங்களைப் போன்று அசிங்கமான சர்ச்சைகளைக் கிளப்பி இந்த வீராங்கனையின் உளவியல் பலத்தை சிதைக்காதிருந்தால் அடுத்த ஒலிம்பிக்கில் இவரிடமிருந்து தங்கம் எதிர்பார்க்கலாம்.

இரண்டு நிலப்பரப்புகளையும் இணைக்கும் பாக்கு நீரிணையில் காணப்படும் இந்த அணை குறித்த புவியியல் ரீதியிலான விளக்கம் நாசா வெளியிட்டிருக்கும் புகைப்படங்களுடன் தரப்படாவிட்டாலும் வரலாற்றில் கூறப்படும் இராமர் அணையுடன் தொடர்புபட்ட ஒன்றாக இந்த இணைக்கும் கோடுகள் காணப்படலாம் என்று ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது. நாசாவால் வழங்கப்பட்டிருக்கும் செய்மதிப் புகைப்படங்கள் பலவற்றுள் ஒன்றையே இங்கு காண்கிறீர்கள்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



மலையாளியைச் சேர்ந்த சந்திர மோகன் - விஜிதா (சாந்தசலை) தம்பதிகளின் செல்லப் புதல்வி திவானுஜா தனது முதலாவது பிறந்த நாளை 9-10-2002 அன்று நோர்வே ஒஸ்லோவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா மலையாளியில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, மோகனா அத்தை - சுந்தரமூர்த்தி மாமா, மச்சான் விது, மச்சாள் விதுஷா.

**செல்வி திவானுஜா** 09.10.2002

கொழும்பில் வசிக்கும் அம்மம்மா, அம்மப்பா, ஆச்சியம்மா, நளம் பெரியம்மா - பெரியம்மா உமா, அண்ணாமாரான ஜெனகன், ஜெனந்தன் ஜெனா, சிவம் மாமா, அத்தை சாந்தினி, மச்சாள் சுகிர்வா, அருள் மாமா, கண்ணன் மாமா, லண்டனில் இருக்கும் பவன் மாமா, அகிலன் சித்தப்பா, திருச்சியில் இருக்கும் மதன் மாமா மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், சித்தப்பாமார், அத்தைமார், மாமாமார், அண்ணாமார், அக்காமார், பூட்டிமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்
அப்பா - அம்மா, நோர்வே.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



யாழ்ப்பாணம் செல்வின் ..., கன்னுகுளி மருதியுள் வீதியைச் சேர்ந்த திரு திருமதி செல்வின் - மகிழினி தம்பதிகளின் அருமைப்புதல்வன் செல்வன் அன்ரனி செரவின் தனது முதலாவது பிறந்தநாளை 24.10.2002 இல் பலெர்மோ - இத்தாலியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அன்பு அம்மப்பா, அன்பு அம்மம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார், சகோதரர், இத்தாலியில் வசிக்கும் மாமா, அத்தை, மச்சான் அன்ரனி, அரவிந்தன் சித்தப்பா, ரஜீந்-மாமா, கானாநகர் உ. கந்தசாமி மாமா குடும்பத்தினர் மற்றும் ஐரோப்பா, இலங்கையில் வசிக்கும் உற்றார், உறவினர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருளும் ஆசியும் பெற்று உடல், உளவளமுடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க, வாழ்கவென வாழ்த்து...

**செல்வின் அன்ரனி செரவின்** 24-10-2002

வாழ்த்தும் அதேவேளை 25.10.2002 இல் அன்ரனி செரவினுடன் இணைந்து தனது பிறந்தநாளைக் கொண்டாடும் அன்பு அம்மா திருமதி செல்வின் மகிழினியையும் அனைவரும் உளமார வாழ்த்துகின்றார்கள்.

"பொறுமையே பொக்கிசம் வாழ்வின் லட்சியம்"

வாழ்த்துவோர், திரு - திருமதி அன்ரனி செல்வின் - பலெர்மோ, இத்தாலி.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 8A ஆம் இலக்கத்தில் டி.டி. எக்ஸ்பிரசன் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஒக். 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.